www.Padasalai.Net www.CBSEtips.in

# பள்ளிக்கல்வித்துறை
## விழுப்புரம் மாவட்டம்

# கணிதம்

# 10

## வினா-விடை வங்கி
மற்றும் செப்டம்பர் 2020 வினாத்தாள்

## 2022-23

வாழ்த்துகளுடன்.....
**திருமதி. K. கிருஷ்ணப்பிரியா,** B.Sc., M.A., B.Ed.,
*முதன்மைக் கல்வி அலுவலர், விழுப்புரம் மாவட்டம்.*

**மாநில அளவில் பத்தாம் வகுப்பு அரசுப் பொதுத் தேர்வில் 11 ஆம் இடத்தை, நம்முடைய கடின உழைப்பின் மூலம் அடைந்தது பாராட்டுக்குரியது.**

தன்னம்பிக்கை + விடாமுயற்சி + கடின உழைப்பு = வெற்றி
"The Struggle you're in Today will definitely develop the strength you need for Tomorrow.

**A. SIVAMOORTHY,** Government High School, Perumbakkam, **Villupuram District.**
Mobile: 9750827997

Kindly send me your study materials to email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



# வாழ்த்துச் செய்தி

அன்புடையீர் வணக்கம்!

2022 – 2023 ஆம் கல்வி ஆண்டில் பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வு எழுதவிருக்கும் அனைத்து மாணவர்களும் சிறப்பான முறையில் தேர்ச்சி பெற அயராது உழைத்துக் கொண்டிருக்கும் அனைத்து ஆசிரியர்களுக்கும் எனது இதயப் பூர்வமான நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

மீத்திறன் மிக்க மாணவர்களையும், மெல்ல கற்கும் மாணவர்களையும் தங்கள் நிலையில் இருந்து முன்னேற்றம் அடைய அதிகபட்ச அக்கறை எடுத்துக் கொள்ளும் அனைத்து ஆசிரியர்களுக்கும் எனது வாழ்த்துகளை கூறிக் கொள்வதில் பெருமை கொள்கிறேன்.

மாநில அளவில் விழுப்புரம் மாவட்டத்தின் பத்தாம் வகுப்பு தேர்ச்சி சதவீதத்தை உயர்த்துவதே நமது பிராதன நோக்கம் ஆகும். "சேவை மனப்பான்மையுடனும், அர்ப்பணிப்பு உணர்வுடனும் பணியாற்றும் ஒரு ஆசிரியர் என்றும் கடவுளால் ஆசிர்வதிக்கப்படுவார் என்பது என்னுடைய கருத்து".

ஆதலால் பத்தாம் வகுப்பு எடுக்கும் அனைத்து ஆசிரியர்களும் ஏழை, ஆதரவற்ற, ஒடுக்கப்பட்ட, கிராமப்புற மாணவர்களின் நலன் மற்றும் முன்னேற்றம் கருதி அதிக நேரம் ஒதுக்கி அவர்களுடைய வாழ்க்கையில் ஒளியேற்ற வேண்டுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

வாழ்த்துகளுடன்,

**திருமதி. மு. கிருஷ்ணப்பிரியா, B.Sc., M.A. B.Ed.,**

முதன்மைக் கல்வி அலுவலர்,

விழுப்புரம் மாவட்டம்.

Kindly send me your study materials to email id - padasalai.net@gmail.com

# Preface

This material has been prepared in accordance with The TamilNadu Government State Board Syllabus. I am very happy to inform you that by practicing all the problems in this material thoroughly will definitely make the students to score more than 90 percentage of marks in Mathematics in the Public Examination. I am in a position to express my hearty gratitude to our respected CEO Madam and DEO Sir for having encouraged my serious attempt to prepare this material for the welfare of the students. Constructive criticisms and valuable suggestions are always welcome.

**A. SIVAMOORTHY,**
Government High School,
Perumbakkam,
**Villupuram District.**

**நிலை-1 மற்றும் நிலை-2 இரண்டையும் சேர்ந்து படித்தால் கிடைக்கும் தோராய மதிப்பெண்கள் விபரம்**

| அலகு | பாடத் தலைப்பு | நிலை - I | | | | நிலை - 2 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | மதிப்பெண்கள் | | | | மதிப்பெண்கள் | | | |
| | | 1 | 2 | 5 | 8 | 1 | 2 | 5 | 8 |
| 1 | உறவுகளும் சார்புகளும் | 2 | 1 | 1 | - | 2 | 2 | 2 | - |
| 2 | எண்களும் தொடர்வரிசைகளும் | 2 | 1 | 1 | - | 2 | 1 | 1 | - |
| 3 | இயற்கணிதம் | 2 | 1 | 1 | 1 | 2 | 1 | 2 | 1 |
| 4 | வடிவியல் | 2 | 1 | 1 | 1 | 2 | 1 | 1 | 1 |
| 5 | ஆயத்தொலை வடிவியல் | 2 | 1 | 1 | - | 2 | 1 | 1 | - |
| 6 | முக்கோணவியல் | 1 | 1 | - | - | 1 | 1 | 1 | - |
| 7 | அளவியல் | 2 | 1 | 1 | - | 2 | 1 | 1 | - |
| 8 | புள்ளியியலும் நிகழ்தகவும் | 1 | 2 | 1 | - | 1 | 2 | 1 | 2 |
| | மொத்த வினாக்கள் | 14(12) | 14(9) | 14(7) | 2(2) | 14(12) | 14(10) | 14(10) | 2(2) |
| | மொத்த மதிப்பெண்கள் | 12 | 18 | 35 | 16 | 12 | 20 | 50 | 16 |

www.Padasalai.Net www.CBSEtips.in



# STAGE - I



| அலகு | பாடத் தலைப்பு | பக்க எண் |
|---|---|---|
| | வடிவியல் & வரைபடம் | 5 |
| 1 | உறவுகளும் சார்புகளும் | 32 |
| 2 | எண்களும் தொடர்வரிசைகளும் | 41 |
| 3 | இயற்கணிதம் | 50 |
| 4 | வடிவியல் | 62 |
| 5 | ஆயத்தொலை வடிவியல் | 69 |
| 6 | முக்கோணவியல் | 77 |
| 7 | அளவியல் | 81 |
| 8 | புள்ளியியலும் நிகழ்தகவும் | 85 |
| | விடைகள் | 97 |
| | அரசு பொதுத் தேர்வு வினாத்தாள் - செப்டம்பர் 2020 | 98 |



Kindly send me your study materials to email id - padasalai.net@gmail.com

# 4 வடிவியல்

## STAGE 1

**1. கொடுக்கப்பட்ட முக்கோணம் $PQR$-க்கு ஒத்த பக்கங்களின் விகிதம் $\frac{3}{5}$ என அமையுமாறு ஒரு வடிவொத்த முக்கோணம் வரையவும்.**
**(அளவு காரணி $\frac{3}{5} < 1$)**

**தீர்வு:**




**உதவிப்படம்**




$PQR$ ஆனது கொடுக்கப்பட்ட முக்கோணம் ஆகும். $PQR$ என்ற முக்கோணத்தின் பக்கங்களுக்கு $\frac{3}{5}$ அளவுடைய ஒத்த பக்கங்களின் மற்றொரு முக்கோணத்தை அமைப்போம்.

**வரைதலின் படிகள்:**

1. ஏதேனும் ஓர் அளவைக் கொண்டு $\Delta PQR$ வரையவும்.
2. $QR$ என்ற கோட்டுத்துண்டில் குறுங்கோணத்தை ஏற்படுத்துமாறு $QX$ என்ற கதிரை $P$ என்ற முனைப்புள்ளிக்கு எதிர் திசையில் வரையவும்.
3. $QX$-ன் மீது $Q_1, Q_2, Q_3, Q_4$ மற்றும் $Q_5$ என்ற புள்ளிகளை (the greater of and 5 in $\frac{3}{5}$ -யில், 3 மற்றும் 5 ஆகியவற்றில் பெரியது 3 என்பதால்) $QQ_1 = Q_1Q_2 = Q_2Q_3 = Q_3Q_4 = Q_4Q_5$ என்றவாறு குறிக்கவும்.
4. $Q_5R$-ஐ இணைத்து $Q_3$ -யிலிருந்து (3-வது புள்ளி, அதாவது $\frac{3}{5}$ இல், 3 மற்றும் 5 ஆகியவற்றில் சிறியது) $Q_5R$-க்கு இணையாக ஒரு கோடு வரையவும். இது $QR$-ஐ $R'$ இல் சந்திக்கிறது.
5. $R'$ -லிருந்து $RP$ -க்கு இணையாக வரையப்படும் கோடு $QP$-ஐ $P'$ இல் சந்திக்கிறது. $\Delta P'QR'$ -யின் பக்கங்கள் $\Delta PQR$ -யின் ஒத்த பக்கங்களின் அளவில் 5 இல் 3 பங்கு ஆகும். $\Delta P'QR'$ ஆனது தேவையான வடிவொத்த முக்கோணம் ஆகும்.

---

**2. கொடுக்கப்பட்ட முக்கோணம் $PQR$ -க்கு ஒத்த பக்கங்களின் விகிதம் $\frac{7}{4}$ என அமையுமாறு ஒரு வடிவொத்த முக்கோணம் வரையவும்.**
**(அளவு காரணி (அளவு காரணி $\frac{7}{4} > 1$)**

**தீர்வு:**




**உதவிப்படம்**




கொடுக்கப்பட்ட $\Delta PQR$ -ன் பக்கங்களைப் போல் $\frac{7}{4}$ பங்கு அளவுடைய ஒத்த பக்கங்களைக் கொண்ட மற்றொரு முக்கோணத்தை அமைப்போம்.

**வரைதலின் படிகள்:**

1. ஏதேனும் ஓர் அளவைக் கொண்டு $\Delta PQR$ வரையவும்.
2. $QR$ என்ற கோட்டுத்துண்டில் குறுங்கோணத்தை ஏற்படுத்துமாறு $QX$ என்ற கதிரை $P$ என்ற முனைப் புள்ளிக்கு எதிர் திசையில் வரையவும்.
3. $QX$-ன் மீது $Q_1, Q_2, Q_3, Q_4, Q_5, Q_6,$ மற்றும் $Q_7$ என்ற புள்ளிகளை ($\frac{7}{4}$-யில், 7 மற்றும் 4 ஆகியவற்றில் பெரியது). $QQ_1 = Q_1Q_2$

$= Q_2Q_3 = Q_3Q_4 = Q_4Q_5$ என்றவாறு குறிக்கவும்.

4. $Q_4$ -ஐ (4-வது புள்ளி, அதாவது $\frac{7}{4}$-யில், 7 மற்றும் 4 ஆகியவற்றில் சிறியது) புள்ளி $R$ -வுடன் இணைக்க $Q_4R$ -க்கு இணையாக $Q_7$-லிருந்து வரையப்படும் கோடு $QR$-ன் நீட்சியினை $R'$ இல் சந்திக்கிறது.

5. $R'$ -லிருந்து $RP$ -க்கு இணையாக வரையப் படும் கோடு $QP$-யின் நீட்சியினை $P'$-யில் சந்திக்கிறது. $\Delta P'QR'$-யின் பக்கங்கள் $\Delta PQR$-யின் ஒத்த பக்கங்களின் அளவில் 4-யில் 7 பங்கு ஆகும். $\Delta P'QR'$ ஆனது தேவையான வடிவொத்த முக்கோணம் ஆகும்.

---

**3. கொடுக்கப்பட்ட முக்கோணம் $PQR$ யின் ஒத்த பக்கங்களின் விகிதம் $\frac{2}{3}$ என அமையுமாறு ஒரு வடிவொத்த முக்கோணம் வரையவும். (அளவு காரணி $\frac{2}{3} < 1$).**

**தீர்வு:**




**வரைதலின் படிகள்:**

1. ஏதேனும் ஓர் அளவைக் கொண்டு $PQR$ வரையவும்.

2. $QR$ என்ற கோட்டுத்துண்டில் குறுங்கோணத்தை ஏற்படுத்துமாறு $QX$ என்ற கதிரை $P$ என்ற முனைப்புள்ளிக்கு எதிர்திசையில் வரையவும்.

3. $QX$-ன் மீது $Q_1, Q_2, Q_3$ ஆகிய 3 புள்ளிகளை (2, 3, $\frac{2}{3}$ இல் பெரியது 3 என்பதால்) $QQ_1 = Q_1Q_2 = Q_2Q_3$ என்றவாறு குறிக்கவும்.

4. $Q_3, R$ ஐ இணைத்து $Q_2$ -யிலிருந்து (2, 3, $\frac{2}{3}$ இல் சிறியது) $Q_3R$ -க்கு இணையாக ஒரு கோடு வரையவும். இது $QR$-ஐ $R'$ இல் சந்திக்கின்றது.

5. $R'$ ல் இருந்து $RP$ க்கு இணையாக ஒரு கோடு வரையவும். இது $PQ$ வை $P'$ இல் சந்திக்கிறது.

6. $\Delta P'QR'$ என்பது தேவையான வடிவொத்த முக்கோணம் ஆகும்.

---

**4. கொடுக்கப்பட்ட முக்கோணம் $LMN$-ன் ஒத்த பக்கங்களின் விகிதம் $\frac{4}{5}$ என அமையுமாறு ஒரு வடிவொத்த முக்கோணம் வரையவும். (அளவு காரணி $\frac{4}{5} < 1$).**

**தீர்வு:**




**வரைதலின் படிகள்:**

1. ஏதேனும் ஓர் அளவைக் கொண்டு $\Delta LMN$ வரையவும்.

2. $MN$ என்ற கோட்டுத்துண்டில் குறுங்கோணத்தை ஏற்படுத்துமாறு $MX$ என்ற கதிரை $L$ என்ற முனைப்புள்ளிக்கு எதிர்திசையில் வரைந்து, அதில் $MM_1 = M_1M_2 = M_2M_3 = M_3M_4 = M_4M_5$ என்றவாறு குறிக்கவும்.

3. $M_5N$ ஐ இணைத்து, இதற்கு இணையாக $M_4N'$ வரையவும். $N'$ லிருந்து $LN$ க்கு இணையாக $L'N'$ வரையவும்.

4. $\Delta L'MN'$ ஆனது தேவையான வடிவொத்த முக்கோணம் ஆகும்.

---

**5. கொடுக்கப்பட்ட முக்கோணம் $ABC$-யின் ஒத்த பக்கங்களின் விகிதம் $\frac{6}{5}$ என அமையுமாறு ஒரு வடிவொத்த முக்கோணம் வரையவும். (அளவு காரணி $\frac{6}{5} > 1$).** **செப்.20**

**தீர்வு:**

**வரைதலின் படிகள்:**

1. ஏதேனும் ஓர் அளவைக்கொண்டு $ABC$ வரையவும்.

2. $BC$ என்ற கோட்டுத்துண்டில் குறுங்கோணத் தை ஏற்படுத்துமாறு $BX$ என்ற கதிரை $A$ என்ற புள்ளிக்கு எதிர்திசையில் வரையவும்.



Kindly send me your study materials to email id - padasalai.net@gmail.com




3. $BX$ இல் $B_1$, $B_2$, $B_3$, $B_4$, $B_5$, மற்றும் $B_6$ புள்ளிகளை (6, 5, $\frac{6}{5}$ இல் பெரியது)
$BB_1 = B_1B_2 = B_2B_3 = B_3B_4 = B_4B_5 = B_5B_6$ என்றவாறு குறிக்கவும்.
4. $B_5$ ஐ (5, 6, $\frac{6}{5}$ இல் சிறியது) $C$ யுடன் இணைத்து $B_5C$ -க்கு இணையாக $B_6$ இல் இருந்து ஒருகோடு வரையவும். இது $BC$-ஐ $C'$ இல் என்ற இடத்தில் சந்திக்கும்.
5. $C'$ லிருந்து $CA$ விற்கு இணையாக ஒரு கோடு வரையவும். அது $BA$ யின் நீட்சியினை $A$ இல் தொடட்டும்.
6. $\Delta A'BC'$ என்பது தேவையான வடிவொத்த முக்கோணம் ஆகும்.

**6. கொடுக்கப்பட்ட முக்கோணம் $PQR$ -ன் ஒத்த பக்கங்களின் விகிதம் $\frac{7}{3}$ என்றவாறு ஒரு வடிவொத்த முக்கோணம் வரையவும்.**
**(அளவு காரணி $\frac{7}{3} > 1$).** ஆக.22

**தீர்வு:**




**வரைதலின் படிகள்:**
1. ஏதேனும் ஓர் அளவைக்கொண்டு $\Delta PQR$ வரையவும்.
2. $QR$ என்ற கோட்டுத்துண்டில் குறுங்கோணத்தை ஏற்படுத்துமாறு $QX$ என்ற கதிரை என்ற முனைப்புள்ளிக்கு எதிர் திசையில் வரைந்து, அதில் $Q_1$, $Q_2$, $Q_3$, $Q_4$, $Q_5$, $Q_6$, $Q_7$ என்ற புள்ளிகளை சம அளவில் குறிக்கவும். $Q_3Q_4 = Q_4Q_5 = Q_5Q_6 = Q_6Q_7$
3. $Q_3R$ ஐ இணைத்து, இதற்கு இணையாக $Q_7R'$ வரையவும். $R'$ லிருந்து $RQ$க்கு இணையாக $R'Q'$ வரையவும்.
4. $\Delta P'QR'$ ஆனது தேவையான வடிவொத்த முக்கோணம் ஆகும்.

**7. 3 செ.மீ ஆரமுள்ள வட்டம் வரையவும். வட்டத்தின் மேல் $P$ என்ற புள்ளியைக் குறித்து அப்புள்ளி வழியே தொடுகோடு வரையவும்.**

**தீர்வு:**

ஆரம் r = 3 செ.மீ எனக் கொடுக்கப்பட்டுள்ளது.

**உதவிப்படம்**







**வரைமுறை:**
1. $O$-வை மையமாகக் கொண்டு 3 செ.மீ ஆரமுள்ள வட்டம் வரையவும்.
2. வட்டத்தின் மேல் $P$ என்ற புள்ளியைக் குறித்து $OP$-ஐ இணைக்கவும்.
3. $P$ என்ற புள்ளி வழியே $OP$-க்கு செங்குத்தாக $TT'$ வரையவும்.
4. $TT'$ ஆனது தேவையான தொடுகோடு ஆகும்.

**8. 4 செ.மீ ஆரமுள்ள வட்டம் வரையவும். வட்டத்தின் மீதுள்ள $L$ என்ற புள்ளி வழியாக மாற்று வட்டத்துண்டு தேற்றத்தைப் பயன்படுத்தி வட்டத்திற்குத் தொடுகோடு வரையவும்.**

www.Padasalai.Net www.CBSEtips.in



**தீர்வு:**

**உதவிப்படம்**







**வரைமுறை:**

1. $O$ ஐ மையமாகக் கொண்டு 4 செ.மீ ஆரமுள்ள வட்டம் வரையவும்.
2. வட்டத்தின் மேல் $L$ என்ற புள்ளியை குறிக்கவும். $L, M, N$ குறித்து இணைக்கவும்.
3. $\angle TLM = \angle MNL$ என அமையுமாறு $L$ வழியே $TT'$ என்ற தொடுகோடு வரையவும்.
5. $TT'$ என்பது தேவையான தொடுகோடாகும்.

**9. 6 செ.மீ விட்டமுள்ள வட்டம் வரைந்து வட்டத்தின் மையத்திலிருந்து, 8 செ.மீ தொலைவில் $P$ என்ற புள்ளியைக் குறிக்கவும். அப்புள்ளியிலிருந்து $PA$ மற்றும் $PB$ என்ற இரு தொடுகோடுகள் வரைந்து அவற்றின் நீளங்களை அளவிடுக.**

**தீர்வு:**

**உதவிப்படம்**




**வரைமுறை:**

1. $O$ வை மையமாகக் கொண்டு 3 செ.மீ ஆரமுள்ள வட்டம் வரையவும்.
2. 8 செ.மீ நீளமுள்ள $OP$ என்ற கோடு வரையவும்.
3. $OP$ க்கு மையக்குத்துக்கோடு வரையவும். அது $OP$ யை $M$ இல் சந்திக்கும்.




4. $M$ யை மையமாகவும் $MO$ வை ஆரமாகவும் கொண்டு வரைபட வட்டமானது முந்தைய வட்டத்தை $A$ மற்றும் $B$ இல் சந்திக்கிறது.
5. $AP$ மற்றும் $BP$ யை இணைக்கவும். $AP$ மற்றும் $BP$ தேவையான தொடு கோடுகளாகும். தொடுகோட்டின் நீளம் $PA = PB = 7.4$ செ.மீ

**சரிபார்த்தல்:**

செங்கோண முக்கோணம் $OPA$-யில்

$PA^2 - OA^2 = 64 - 9 = 55$

$PA = \sqrt{55} = 7.4$ செ.மீ (தோராயமாக)

**10. $P$ ஐ மையமாகக் கொண்ட 3.4 செ.மீ ஆரமுள்ள ஒரு வட்டத்திற்கு $R$ என்ற புள்ளியில் தொடுகோடு வரையவும்.**

**தீர்வு:**

**உதவிப்படம்**







**வரைமுறை:**

1. $P$ ஐ மையமாகக் கொண்டு 3.4 செ.மீ ஆரமுள்ள வட்டம் வரையவும்.
2. வட்டத்தின் $R$ என்ற புள்ளியைக் குறித்து $PR$-ஐ இணைக்கவும்.
3. $R$ என்ற புள்ளி $PR$ க்கு செங்குத்தாக $TT'$ வரையவும்.
4. $TT'$ என்பது தேவையான தொடுகோடாகும்.



Kindly send me your study materials to email id - padasalai.net@gmail.com

**11. 4.5 செ.மீ ஆரமுள்ள வட்டம் வரையவும். வட்டத்தின் மீது ஏதேனும் ஒரு புள்ளிக்கு மாற்று வட்டத்துண்டு தேற்றத்தினைப் பயன்படுத்தித் தொடுகோடு வரையவும்.**

**தீர்வு:** **உதவிப்படம்**




**வரைமுறை:**

1. $O$ ஐ மையமாகக் கொண்டு 4.5 செ.மீ ஆரமுள்ள வட்டம் வரையவும்.
2. வட்டத்தின் மேல் $L$ என்ற புள்ளியை குறிக்கவும். $L, M, N$ குறித்து இணைக்கவும்.
3. $\angle TLM = \angle MNL$ என அமையுமாறு $L$ வழியே $TT'$ என்ற தொடுகோடு வரையவும்.
5. $TT'$ என்பது தேவையான தொடுகோடாகும்.

---

**12. 5 செ.மீ ஆரமுள்ள வட்டத்தின் மையத்திலிருந்து 10 செ.மீ தொலைவிலுள்ள புள்ளியிலிருந்து வட்டத்திற்குத் தொடுகோடுகள் வரையவும். மேலும் தொடுகோட்டின் நீளங்களைக் கணக்கிடுக.** **செப்.20**

**தீர்வு:** **உதவிப்படம்**







**வரைமுறை:**

1. $O$ வை மையமாகக் கொண்டு 5 செ.மீ ஆரமுள்ள வட்டம் வரையவும்.
2. 10 செ.மீ நீளமுள்ள $OP$ வரைந்து அதற்கு மையக்குத்துகோடு வரையவும். அது $OP$ ஐ $M$ இல் சந்திக்கிறது.
3. $M$ ஐ மையமாகவும் $MO$ வை ஆரமாகவும் கொண்டு ஒரு வட்டம் வரையவும். அது முந்தைய வட்டத்தை $A$, $B$ இல் சந்திக்கிறது. $OP$ at $M$.
4. $AP$ மற்றும் $BP$ யை இணைக்கவும். இதுவே நமக்குத் தேவையான தொடுகோடாகும்.

**சரிபார்த்தல்:**

செங்கோண முக்கோணம் $OPA$ இல்

$PA^2 = OP^2 - OA^2 = 10^2 - 5^2 = 100 - 25 = 75$

$PA = \sqrt{75} = 8.6$ செ.மீ (தோராயமாக)

---

**13. 4 செ.மீ ஆரமுள்ள வட்டம் வரைந்து அதன் மையத்திலிருந்து 11 செ.மீ தொலைவிலுள்ள ஒரு புள்ளியைக் குறித்து, அப்புள்ளியிலிருந்து வட்டத்திற்கு இரண்டு தொடுகோடுகள் வரையவும்.**

**தீர்வு:** **உதவிப்படம்**







**வரைமுறை:**

1. $O$ வை மையமாகக் கொண்டு 4 செ.மீ ஆரமுள்ள வட்டம் வரையவும்.
2. 11 செ.மீ நீளமுள்ள $OP$ வரைந்து அதற்கு மையக்குத்துகோடு வரையவும். அது $OP$ ஐ $M$ இல் சந்திக்கிறது.
4. $M$ ஐ மையமாகவும் $MO$ வை ஆரமாகவும் கொண்டு ஒரு வட்டம் வரையவும். அது முந்தைய வட்டத்தை $A$, $B$ இல் சந்திக்கிறது.

Kindly send me your study materials to email id - padasalai.net@gmail.com

5. $AP$ மற்றும் $BP$ யை இணைக்கவும். இதுவே நமக்குத் தேவையான தொடுகோடாகும்.

**சரிபார்த்தல்:**

செங்கோண முக்கோணம் $\Delta OPA$ இல்

$AP^2 = OP^2 - OA^2$

$= 11^2 - 4^2 = 121 - 16 = 105$

$AP = \sqrt{105} = 10.2$ செ.மீ

---

**14. 6 செ.மீ விட்டமுள்ள வட்டம் வரைந்து வட்டத்தின் மையத்திலிருந்து 5 செ.மீ தொலைவிலுள்ள ஒரு புள்ளியைக் குறிக்கவும். அப்புள்ளியிலிருந்து வட்டத்திற்குத் தொடுகோடுகள் வரைந்து தொடுகோட்டின் நீளங்களைக் கணக்கிடுக.** செப்.21 ஆக.22

**தீர்வு:**

**உதவிப்படம்**







**வரைமுறை:**

1. $O$ வை மையமாகக் கொண்டு 3 செ.மீ ஆரமுள்ள வட்டம் வரையவும்.
2. 5 செ.மீ நீளமுள்ள வரைந்து அதற்கு மையக்குத்துகோடு வரையவும். அது $OP$ ஐ $M$ இல் சந்திக்கிறது.
3. $M$ ஐ மையமாகவும் $MO$ வை ஆரமாகவும் கொண்டு ஒரு வட்டம் வரையவும். அது முந்தைய வட்டத்தை $A$, $B$ இல் சந்திக்கிறது.
4. $AP$ மற்றும் $BP$ யை இணைக்கவும். இதுவே நமக்குத் தேவையான தொடுகோடாகும்.

**சரிபார்த்தல்:**

செங்கோண முக்கோணம் $\Delta OPA$ இல்

$AP^2 = OP^2 - OA^2$

$= 5^2 - 3^2 = 25 - 9 = 16$

$AP = \sqrt{16} = 4$ செ.மீ

**15. $O$-வை மையமாகக் கொண்ட 3.6 செ.மீ ஆரமுள்ள வட்டம் வரையவும். வட்டத்தின் மையத்திலிருந்து. 7.2 செ.மீ தொலைவிலுள்ள $P$ என்ற புள்ளியைக் குறித்து அப்புள்ளியிலிருந்து வட்டத்திற்குத் தொடுகோடுகள் வரையவும்.**

**தீர்வு:**

**உதவிப்படம்**







**வரைமுறை:**

1. $O$ வை மையமாகக் கொண்டு 3.6 செ.மீ ஆரமுள்ள வட்டம் வரையவும்.
2. 7.2 செ.மீ நீளமுள்ள $OP$ வரைந்து அதற்கு மையக்குத்துகோடு வரையவும். அது $OP$ ஐ $M$ இல் சந்திக்கிறது.
3. $M$ ஐ மையமாகவும் $MO$ வை ஆரமாகவும் கொண்டு ஒரு வட்டம் வரையவும். அது முந்தைய வட்டத்தை $A$, $B$ இல் சந்திக்கிறது.
4. $AP$ மற்றும் $BP$ யை இணைக்கவும். இதுவே நமக்குத் தேவையான தொடுகோடாகும்.

**சரிபார்த்தல்:**

செங்கோண முக்கோணம் $OPA$ இல்

$PA^2 = OP^2 - OA^2 = 7.2^2 - 3.6^2$

$= 51.84 - 12.96 = 38.88$

$PA = \sqrt{38.88} = 6.2$ செ.மீ (தோராயமாக)

## பயிற்சிக்காக

1. $PQ = 8$ செ.மீ, $R = 60°$ உச்சி $R$ -லிருந்து $PQ$-க்கு வரையப்பட்ட நடுக்கோட்டின் நீளம் $RG = 5.8$ செ.மீ என இருக்குமாறு $\Delta PQR$ வரையவும். $R$-லிருந்து $PQ$-க்கு வரையப்பட்ட குத்துக்கோட்டின் நீளம் காண்க.

2. $QR = 5$ செ.மீ, $\angle P = 30°$ மற்றும் $P$-யிலிருந்து $QR$-க்கு வரையப்பட்ட குத்துக்கோட்டின் நீளம் 4.2 செ.மீ கொண்ட $\Delta PQR$ வரையவும்.

3. அடிப்பக்கம் $BC = 8$ செ.மீ, $A = 60°$மற்றும் $\angle A$ யின் இருசமவெட்டியானது $BC$ ஐ $D$ என்ற புள்ளியில் $BD = 6$ செ.மீ என்றவாறு சந்திக்கிறது எனில் முக்கோணம் $ABC$ வரையவும்.

4. $PQ = 4.5$ செ.மீ, $\angle R = 35°$ மற்றும் உச்சி R-யிலிருந்து வரையப்பட்ட நடுக்கோட்டின் நீளம் $RG = 6$ செ.மீ என அமையுமாறு $\Delta PQR$ வரைக. **செப்.21**

5. $QR = 5$ செ.மீ, $\angle P = 40°$ மற்றும் உச்சி P-யிலிருந்து QR-க்கு வரையப்பட்ட நடுக் கோட்டின் நீளம் $PG = 4.4$ செ.மீ என இருக்கும்படி $\Delta PQR$ வரைக. மேலும் P-லிருந்து QR-க்கு வரையப்பட்ட குத்துக்கோட்டின் நீளம் காண்க.

6. $QR = 6.5$ செ.மீ, $P = 60°$ மற்றும் உச்சி P-யிலிருந்து QR-க்கு வரையப்பட்ட குத்துக் கோட்டின் நீளம் 4.5 செ.மீ உடைய $\Delta PQR$ வரைக.

7. $AB = 5.5$ செ.மீ, $C = 25°$ மற்றும் உச்சி C யிலிருந்து AB-க்கு வரையப்பட்ட குத்துக்கோட்டின் நீளம் 4 செ.மீ உடைய $\Delta ABC$ வரைக.

8. அடிப்பக்கம் $BC = 5.6$ செ.மீ $\angle A = 40°$ மற்றும் $\angle A$ -யின் இருசமவெட்டியானது அடிப்பக்கம் BC ஐ $CD = 4$ செ.மீ என D-யில் சந்திக்குமாறு அமையும் முக்கோணம் ABC வரைக.

9. $PQ=6.8$ செ.மீ, உச்சிக்கோணம் $50°$ உச்சிக் கோணத்தின் இருசமவெட்டியானது அடிப்பக்கத்தை $PD = 5.2$ செ.மீ என D-யில் சந்திக்குமாறு அமையும் $\Delta PQR$ வரைக.

★★★

# 3 இயற்கணிதம்

## STAGE 1

1. வர்ஷிகா வெவ்வேறு அளவுகளில் 6 வட்டங்களை வரைந்தாள். அட்டவணையில் உள்ளவாறு, ஒவ்வொரு வட்டத்தின் விட்டத்திற்கும் சுற்றளவிற்குமான ஒரு வரைபடம் வரையவும். அதனைப் பயன்படுத்தி, விட்டமானது 6 செ.மீ ஆக இருக்கும்போது வட்டத்தின் சுற்றளவைக் காண்க.

| விட்டம் ($x$) செ.மீ | 1 | 2 | 3 | 4 | 5 |
|---|---|---|---|---|---|
| சுற்றளவு ($y$) செ.மீ | 3.1 | 6.2 | 9.3 | 12.4 | 15.5 |

**தீர்வு:**

**I. அட்டவணை (கொடுக்கப்பட்டுள்ளது)**

| விட்டம் ($x$) செ.மீ | 1 | 2 | 3 | 4 | 5 |
|---|---|---|---|---|---|
| சுற்றளவு ($y$) செ.மீ | 3.1 | 6.2 | 9.3 | 12.4 | 15.5 |




**II. மாறுபாடு:**

அட்டவணையிலிருந்து '$x$' அதிகரிக்க '$y$' யும் அதிகரிக்கிறது. ஆகவே, இது நேர்மாறுபாடு ஆகும்.

$y = kx$ என்க. இங்கு $k$ என்பது விகிதசம மாறிலியாகும்.

$k = \frac{y}{x} = \frac{3.1}{1} = \frac{6.2}{2} = \frac{9.3}{3} = \frac{12.4}{4} = .... = 3.1$ $\therefore$ சமன்பாடு $y = 3.1x$

**III. புள்ளிகள்:**

(1, 3.1) (2, 6.2) (3, 9.3), (4, 12.4) மற்றும் (5, 15.5)

**IV. தீர்வு:**

வரைபடத்திலிருந்து விட்டம் 6 செ.மீ ஆக இருக்கும் பொழுது வட்டத்தின் சுற்றளவு 18.6 செ.மீ ஆகும். ஆகவே வட்டத்தின் சுற்றளவு 18.6 செ.மீ ஆகும்.

**சரிபார்த்தல்:**

$x = 6$, எனில் $y = (3.1) \times 6 = 18.6$

---

**2. ஒரு பேருந்து மணிக்கு 50 கி.மீ/மணி என்ற சீரான வேகத்தில் பயணிக்கிறது. இத்தொடர்புக்கான தூரம் – நேரம் வரைபடம் வரைந்து, பின்வருவனவற்றைக் காண்க.**

**(i) விகிதசம மாறிலியைக் காண்க. (ii) 1½ மணி நேரத்தில் பயணிக்கும் தூரம் எவ்வளவு?**

**(iii) 300 கி.மீ தூரத்தை பயணிக்க எவ்வளவு நேரம் ஆகும்?**

**தீர்வு:**

**I. அட்டவணை:**

$x$ ஆனது நேரத்தையும் (நிமிடங்களில்), $y$ ஆனது பயணித்த தூரத்தையும் (கி.மீ இல்) குறிப்பதாகக் கொள்வோம்.

| பயண நேரம் $x$ (நிமிடங்களில்) | 60 | 120 | 180 | 240 | 300 | 360 |
|---|---|---|---|---|---|---|
| பயண தூரம் y (கி.மீ-ல்) | 50 | 100 | 150 | 200 | 250 | 300 |




**II. மாறுபாடு:**

அட்டவணையிலிருந்து '$x$' அதிகரிக்க '$y$' யும் அதிகரிக்கிறது. ஆகவே, இது நேர்மாறுபாடு ஆகும்.

$k = \frac{y}{x} = \frac{50}{60} = \frac{100}{120} = \frac{5}{6}$ $\therefore$ சமன்பாடு $y = \frac{5}{6}x$

**III. புள்ளிகள்:**

(60, 50), (120, 100), (180, 150), (240, 200), (300, 250)

**IV. தீர்வு:**

i) விகிதசம மாறிலி $k = \frac{y}{x} = \frac{5}{6}$

ii) வரைபடத்திலிருந்து $x = 90$ எனில் $y = \frac{5}{6} \times 90 = \frac{450}{6} = 75$ கி.மீ. எனவே 90 நிமிடங்களில் பயணித்த தூரமானது 75 கி.மீ ஆகும்.

iii) 300கி.மீ தூரம் பயணிக்க எடுத்துக்கொண்ட நேரம் 360 நிமிடங்கள், அதாவது 6 மணி நேரம்.

**3. ஒரு நிறுவனமானது தொடக்கத்தில் 40 வேலையாள்களுடன் 150 நாள்களில் ஒரு வேலையை முடிக்கத் தொடங்கியது. பிறகு, வேலையை விரைவாக முடித்திட பின்வருமாறு வேலையாள்களை அதிகரித்தது.**

| வேலையாள்களின் எண்ணிக்கை $(x)$ | 40 | 50 | 60 | 75 |
|---|---|---|---|---|
| நாள்களின் எண்ணிக்கை (y) | 150 | 120 | 100 | 80 |

**(i) மேலே கொடுக்கப்பட்டுள்ள தரவுகளுக்கு வரைபடம் வரைந்து மாறுபாட்டின் வகையை அடையாளம் காண்க.**

**(ii) வரைபடத்திலிருந்து, நிறுவனமானது 120 வேலையாள்களை வேலைக்கு அமர்த்த விரும்பினால், வேலை முடிய எத்தனை நாள்கள் ஆகும் எனக் காண்க.**

**(iii) வேலையானது 30 நாள்களில் முடிய வேண்டும் எனில், எத்தனை வேலையாள்கள் தேவை?**

**தீர்வு:**

**I. அட்டவணை (கொடுக்கப்பட்டுள்ளது)**

| வேலையாள்களின் எண்ணிக்கை $(x)$ | 40 | 50 | 60 | 75 |
|---|---|---|---|---|
| நாள்களின் எண்ணிக்கை (y) | 150 | 120 | 100 | 80 |

**II. மாறுபாடு**

அட்டவணையிலிருந்து '$x$' அதிகரிக்க 'y' குறைகிறது என நாம் காண்கிறோம்.

ஆகவே, இது எதிர்மாறுபாடு ஆகும்.

*i.e.* $xy = k$

$xy = 40 \times 150 = 50 \times 120 = \ldots.. 75 \times 80 = 6000 = k$

$\therefore$ சமன்பாடு $xy = 6000$

**III. புள்ளிகள்:**

(40, 150) (50, 120) (60, 100), (75, 80)

**IV. தீர்வு:**

i. இது ஒரு எதிர்மாறுபாடு ஆகும்.

ii. $x = 120$ எனில் $120 \times y = 6000 \Rightarrow y = \frac{6000}{120} = 50$. வரைபடத்திலிருந்து நிரூபணமானது.

120 வேலையாட்களுடன் வேலை செய்ய முடிவு செய்தால் அவ்வேலையானது 50 நாட்களில் முடிவடையும்.

iii. $y = 200$ எனில் $x \times 200 = 6000 \Rightarrow x = \frac{6000}{200} = 30$. வரைபடத்திலிருந்து 200 நாட்களில் வேலையை முடிக்க வேண்டும் எனில் தேவையான வேலையாட்களின் எண்ணிக்கை 30 ஆகும்.



www.Padasalai.Net www.CBSEtips.in



**4. நிஷாந்தி, 12 கி.மீ தூரத்திற்கான மாரத்தான் ஓட்டத்தின் வெற்றியாளர் ஆவார். அவர் மணிக்கு 12 கி.மீ என்ற சீரான வேகத்தில் ஓடி, இலக்கினை 1 மணி நேரத்தில் அடைந்தார். அவரைத் தொடர்ந்து ஆராதனா, பொன்மொழி, ஜெயந்த், சத்யா மற்றும் சுவேதா ஆகியோர் முறையே 6 கி.மீ/மணி, 4 கி.மீ/மணி, 3 கி.மீ/மணி மற்றும் 2 கி.மீ/மணி என்ற வேகத்தில் ஓடி வந்தனர். அவர்கள் அந்த தூரத்தை முறையே 2 மணி, 3 மணி, 4 மணி, மற்றும் 6 மணி நேரத்தில் அடைந்தனர். வேகம் – நேரம், வரைபடம் வரைந்து அதனைப் பயன்படுத்தி, மணிக்கு 2.4 கி.மீ/மணி வேகத்தில் சென்ற கௌசிக் எடுத்துக்கொண்ட நேரத்தைக் காண்க.**

**தீர்வு:**

**I. அட்டவணை:**

கொடுக்கப்பட்ட விவரங்களிலிருந்து நாம் ஒரு அட்டவணையை அமைப்போம்.

| வேகம் (x) (கி.மீ/மணி) | 12 | 6 | 4 | 3 | 2 |
|---|---|---|---|---|---|
| நேரம் y மணி | 1 | 2 | 3 | 4 | 6 |

**II. மாறுபாடு:**

அட்டவணையிலிருந்து $x$ குறையும்போது $y$ அதிகரிக்கின்றது என நாம் காண்கிறோம். ஆகவே, இது எதிர் மாறுபாடு ஆகும்.

$\Rightarrow xy = k, k > 0$ இங்கு $k$ என்பது விகிதசம மாறிலியாகும்.

இங்கு $xy = 12 \times 1 = 6 \times 2 = \ldots\ldots\ldots = 2 \times 6 = 12 = k$

$\therefore xy = 12$

**III. புள்ளிகள்:**

(12, 1), (6, 2), (4, 3), (3, 4), (2,6)

**IV. தீர்வு:**

$x = 2.4 \Rightarrow 2.4 \times y = 12$

$$y = \frac{12}{2.4} = 5$$

வரைபடத்திலிருந்து மணிக்கு 2.4 கி.மீ/மணி வேகத்தில் கௌசிக் எடுத்து கொண்ட நேரம் 5 மணி நேரமாகும்.




**5. ஒரு துணிக்கடையானது தனது வாடிக்கையாளர்களுக்கு வாங்கும் ஒவ்வொரு பொருளின் மீதும் 50% தள்ளுபடியை அறிவிக்கிறது. குறித்த விலைக்கும் தள்ளுபடிக்குமான வரைபடம் வரையவும். மேலும்,**

**(i) வரைபடத்திலிருந்து, ஒரு வாடிக்கையாளர் ₹ 3250 ஐ தள்ளுபடியாகப் பெற்றால் குறித்த விலையைக் காண்க.**

**(ii) குறித்த விலையானது ₹ 2500 எனில் தள்ளுபடியைக் காண்க.**

Kindly send me your study materials to email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



**தீர்வு:**

**I. அட்டவணை:**

| குறித்த தொகை ₹ $(x)$ | 1000 | 2000 | 3000 | 4000 | 5000 | 6000 |
|---|---|---|---|---|---|---|
| தள்ளுபடி ₹ (y) | 500 | 1000 | 1500 | 2000 | 2500 | 3000 |

**II. மாறுபாடு:**

அட்டவணையிலிருந்து '$x$' அதிகரிக்க '$y$' யும் அதிகரிக்கிறது என நாம் காண்கிறோம். ஆகவே, இது நேர் மாறுபாடு ஆகும்.

$y = kx$, இங்கு $k$ என்பது விகிதசம மாறிலியாகும்.

$$k = \frac{y}{x} = \frac{500}{1000} = \frac{1000}{2000} = \frac{1}{2}$$

∴ தேவையான சமன்பாடு $y = \frac{1}{2}x$

**III. புள்ளிகள்:**

(1000, 500), (2000, 1000), (3000, 1500), (4000, 2000), (5000, 2500), (6000, 3000)

**IV. தீர்வு:**

i. வரைபடத்திலிருந்து $y$ = ₹3250 எனில் $x$ = ₹6500 அதாவது குறித்த தொகை = ₹6500

ii. வரைபடத்திலிருந்து $x$ = ₹2500 எனில் $y$ = ₹1250. அதாவது தள்ளுபடி = ₹1250




---

**6. $xy = 24$, $x, y > 0$ என்ற வரைபடத்தை வரையவும். வரைபடத்தைப் பயன்படுத்தி, (i) $x = 3$ எனில் $y$ ஐக் காண்க மற்றும் (ii) $y = 6$ எனில் $x$–ஐக் காண்க.**

**தீர்வு:**

**I. அட்டவணை:**

| $x$ | 1 | 2 | 3 | 4 | 6 | 12 | 24 |
|---|---|---|---|---|---|---|---|
| $y$ | 24 | 12 | 8 | 6 | 4 | 2 | 1 |

**II. மாறுபாடு:**

அட்டவணையிலிருந்து '$x$' அதிகரிக்க '$y$' குறைகிறது என நாம் காண்கிறோம். ஆகவே இது எதிர்மாறுபாடு ஆகும்.



Kindly send me your study materials to email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



*i.e.* $xy = k$

$xy = 1 \times 24 = 2 \times 12 = ….. = 12 \times 2 = 24 \times 1 = 24 = k$

$\therefore xy = 24$

**III. புள்ளிகள்:**

(1, 24), (2, 12), (3, 8), (4, 6), (6, 4), (12, 2), (24, 1)




**IV. தீர்வு:**

i. $x = 3 \Rightarrow 3 \times y = 24$

$y = \frac{24}{3} = 8 \quad \therefore\ y = 8$

ii) $y = 6 \Rightarrow x \times 6 = 24$

$x = \frac{24}{6} = 4 \quad \therefore\ x = 4$

---

**7. $y = \frac{1}{2}x$ என்ற நேரிய சமன்பாட்டின்/சார்பின் வரைபடம் வரையவும். விகிதசம மாறிலியை அடையாளம் கண்டு, அதனை வரைபடத்துடன் சரிபார்க்க. மேலும் (i) $x = 9$ எனில் $y$ ஐக் காண்க. (ii) $y = 7.5$ எனில் $x$ ஐக் காண்க.**

**தீர்வு:**

**I. அட்டவணை:**

| $x$ | 2 | 4 | 6 | 8 | 10 |
|---|---|---|---|---|---|
| $y$ | 1 | 2 | 3 | 4 | 5 |

**II. மாறுபாடு:**

அட்டவணையிலிருந்து '$x$' அதிகரிக்க '$y$' யும் அதிகரிக்கிறது என நாம் காண்கிறோம்.

ஆகவே, இது நேர்மாறுபாடு ஆகும்.

$y = kx$, இங்கு $k$ என்பது விகிதசம மாறிலியாகும்.

$k = \frac{y}{x} = \frac{1}{2} = \frac{2}{4} = \frac{3}{6} = …. = \frac{1}{2}$; $\therefore$ தேவையான சமன்பாடு $y = \frac{1}{2}x$

**III. புள்ளிகள்:**

(2, 1), (4, 2), (6, 3), (8, 4), (10, 5)

Kindly send me your study materials to email id - padasalai.net@gmail.com




**IV. தீர்வு:**

வரைபடத்திலிருந்து $x = 9$ எனில், $y = 4.5$

வரைபடத்திலிருந்து $y = 7.5$, எனில் $x = 15$

---

**8. ஒரு தொட்டியை நிரப்பத் தேவையான குழாய்களின் எண்ணிக்கையும் அவை எடுத்துக் கொள்ளும் நேரமும் பின்வரும் அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளது.**

| | | | | |
|---|---|---|---|---|
| **குழாய்களின் எண்ணிக்கை ($x$)** | **2** | **3** | **6** | **9** |
| **எடுத்துக் கொள்ளும் நேரம் (y) நிமிடங்களில்** | **45** | **30** | **15** | **10** |

**மேற்காணும் தரவுகளுக்கு வரைபடம் வரைந்து,**
**(i) 5 குழாய்களை பயன்படுத்தினால், தொட்டி நிரம்ப எடுத்துக் கொள்ளப்பட நேரத்தைக் காண்க.**
**(ii) 9 நிமிடங்களில் தொட்டி நிரம்பினால், பயன்படுத்தப்பட்ட குழாய்களின் எண்ணிக்கையைக் காண்க.**

**தீர்வு:**

**I. அட்டவணை (கொடுக்கப்பட்டுள்ளது)**

| | | | | |
|---|---|---|---|---|
| குழாய்களின் எண்ணிக்கை ($x$) | 2 | 3 | 6 | 9 |
| எடுத்துக்கொள்ளும் நேரம் ($y$) நிமிடங்களில் | 45 | 30 | 15 | 10 |

**II. மாறுபாடு:**

அட்டவணையிலிருந்து ‘x’ அதிகரிக்க ‘$y$’ குறைகிறது என நாம் காண்கிறோம்.

ஆகவே, இது எதிர்மாறுபாடு ஆகும்.

$i.e.\ xy = k$

$xy = 2 \times 45 = 3 \times 30 = \ldots.. = 9 \times 10 = 90\ (k)$

$\therefore$ தேவையான சமன்பாடு $xy = 90$

**III. புள்ளிகள்:**

(2, 45), (3, 30), (6, 15), (9, 10)




**IV. தீர்வு:**

வரைபடத்திலிருந்து $x = 5 \Rightarrow 5 \times y = 90$

$$y = \frac{90}{5} = 18$$

எனவே குழாய்களைக் கொண்டு தொட்டியை நிரப்ப எடுத்துக் கொள்ளும் காலம் 18 நிமிடங்கள்.

வரைபடத்திலிருந்து $y = 9 \Rightarrow x \times 9 = 90 \quad \Rightarrow \quad x = \frac{90}{9} = 10$

9 நிமிடங்களில் தொட்டியை நிரப்பத் தேவைப்படும் குழாய்களின் எண்ணிக்கை 10.

**9.** **ஒரு பள்ளியானது, குறிப்பிட்ட சில போட்டிகளுக்கு, பரிசுத் தொகையினை எல்லா பங்கேற்பாளர்களுக்கும் பின்வருமாறு சமமாக பிரித்து வழங்குவதாக அறிவிக்கிறது.**

| பங்கேற்பாளர்களின் எண்ணிக்கை ($x$) | 2 | 4 | 6 | 8 | 10 |
|---|---|---|---|---|---|
| ஒவ்வொரு பங்கேற்பாளரின் தொகை ₹ ($y$) | 180 | 90 | 60 | 45 | 36 |

**(i) விகிதசம மாறிலியைக் காண்க.**

**(ii) மேற்காணும் தரவுகளுக்கு வரைபடம் வரைந்து, 12 பங்கேற்பாளர்கள் பங்கெடுத்துக் கொண்டால் ஒவ்வொரு பங்கேற்பாளரும் பெறும் பரிசுத் தொகை எவ்வளவு என்பதைக் காண்க.**

தீர்வு:




**I.** அட்டவணை (கொடுக்கப்பட்டுள்ளது)

| பங்கேற்பாளர்களின் எண்ணிக்கை $(x)$ | 2 | 4 | 6 | 8 | 10 |
|---|---|---|---|---|---|
| ஒவ்வொரு பங்கேற்பாளரின் தொகை ₹ $(y)$ | 180 | 90 | 60 | 45 | 36 |

**II.** மாறுபாடு:

அட்டவணையிலிருந்து '$x$' அதிகரிக்க '$y$' குறைகிறது என நாம் காண்கிறோம்.

ஆகவே, இது எதிர்மாறுபாடு ஆகும்.

*i.e.* $xy = k$ இங்கு $k$ என்பது விகிதசம மாறிலியாகும்.

$xy = 2 \times 180 = 4 \times 90 = ….. = 10 \times 36 = 360\ (k)$

$\therefore$ தேவையான சமன்பாடு $xy = 360$

**III.** புள்ளிகள்:

(2, 180), (4, 90), (6, 60), (8, 45), (10, 36)

**IV.** தீர்வு:

i. விகிதசம மாறிலி $k = xy = 2 \times 180 = 360$

ii. வரைபடத்திலிருந்து $x = 12$ எனில் $xy = 360 \Rightarrow 12y = 360$

$$y = \frac{360}{12} = 30$$

கலந்து கொள்ளும் ஒவ்வொருவரும் பெறும் தொகை ₹ 30

---

**10. பேருந்து நிலையம் அருகே உள்ள இரு சக்கர வாகனம் நிறுத்துமிடத்தில் பெறப்படும் கட்டணத் தொகை பின்வருமாறு:**

| நேரம் (மணியில்) $(x)$ | 4 | 8 | 12 | 24 |
|---|---|---|---|---|
| கட்டணத் தொகை ₹ $(y)$ | 60 | 120 | 180 | 360 |

**பெறப்படும் கட்டணத் தொகையானது வாகனம் நிறுத்தப்படும் நேரத்திற்கு நேர் மாறுபாட்டில் உள்ளதா அல்லது எதிர் மாறுபாட்டில் உள்ளதா என ஆராய்க. கொடுக்கப்பட்ட தரவுகளை வரைபடத்தில் குறிக்கவும். மேலும், (i) நிறுத்தப்படும் நேரம் 6 மணி எனில், கட்டணத்தொகையைக் காண்க. (ii) ₹150 ஐ கட்டணத் தொகையாகச் செலுத்தி இருந்தால், நிறுத்தப்பட்ட நேரத்தின் அளவைக் காண்க.**

**தீர்வு:**

**I. அட்டவணை (கொடுக்கப்பட்டுள்ளது)**

| நேரம் (மணியில்) $(x)$ | 4 | 8 | 12 | 24 |
|---|---|---|---|---|
| கட்டணத் தொகை ₹ $(y)$ | 60 | 120 | 180 | 360 |

**II. மாறுபாடு:**

அட்டவணையிலிருந்து '$x$' அதிகரிக்க 'y' யும் அதிகரிக்கிறது என நாம் காண்கிறோம். ஆகவே, இது நேர்மாறுபாடு ஆகும்.

$y = kx$, இங்கு $k$ என்பது விகிதசம மாறிலியாகும்.

$$k = \frac{y}{x} = \frac{60}{4} = \frac{120}{8} = \ldots = \frac{30}{2} = 15\ (k)$$

$\therefore$ தேவையான சமன்பாடு $y = 15x$

**III. புள்ளிகள்:**

(4, 60), (8, 120), (12, 180), (24, 360)

**IV. தீர்வு:**

வரைபடத்திலிருந்து, $x = 6$ எனில் $y = 15 \times 6 = 90$ அதாவது செலுத்த வேண்டிய தொகை ₹ 90.

வரைபடத்திலிருந்து $y = 150$ எனில் $x = \frac{150}{15} = 10$ அதாவது வாகனம் நிறுத்தப்பட அனுமதிக்கும் கால அளவு = 10 மணி



**11. பின்வரும் இருபடிச் சமன்பாடுகளின் தீர்வுகளின் தன்மையை வரைபடம் மூலம் ஆராய்க.**

**தீர்வு:**

**i.** $x^2 + x - 12 = 0$ **செப்.20** **செப்.21**

**அட்டவணை:**

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| $x$ | –5 | –4 | –3 | –2 | –1 | 0 | 1 | 2 | 3 | 4 |
| $x^2$ | 25 | 16 | 9 | 4 | 1 | 0 | 1 | 4 | 9 | 16 |
| $x$ | –5 | –4 | –3 | –2 | –1 | 0 | 1 | 2 | 3 | 4 |
| **–12** | –12 | –12 | –12 | –12 | –12 | –12 | –12 | –12 | –12 | –12 |
| y | 8 | 0 | –6 | –10 | –12 | –12 | –10 | -6 | 0 | 8 |

**புள்ளிகள்:** (–4, 72), (–3, 56), (–2, 42), (–1, 30), (0, 20), (1,12), (2, 6), (3,2), (4, 0)

**பரவளையம் $x$ அச்சை வெட்டும் புள்ளிகள்:** (–4, 0) மற்றும் (3, 0). x- ஆயத்தொலைவுகள் –4 மற்றும் 3




**தீர்வுகளின் தன்மை:**

பரவளையம் $x$ அச்சை ஒரே இருவேறு புள்ளிகளில் வெட்டுகிறது. எனவே மூலங்கள் இரு சமமற்ற மெய்யெண்களாக இருக்கும்.

---

**ii.** $x^2 - 8x + 16 = 0$

**அட்டவணை:**

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| $x$ | –1 | 0 | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 |
| $x^2$ | 1 | 0 | 1 | 4 | 9 | 16 | 25 | 36 | 49 | 64 |
| $-8x$ | 8 | 0 | –8 | –16 | –24 | –32 | –40 | –48 | –56 | –64 |
| +7 | 7 | 7 | 7 | 7 | 7 | 7 | 7 | 7 | 7 | 7 |
| $y$ | 25 | 16 | 9 | 4 | 1 | 0 | 1 | 4 | 9 | 16 |

**புள்ளிகள்:** (–1, 25), (0, 16), (1, 9), (2, 4), (3, 1), (4,0), (5, 1), (6,4), (7, 9), (8, 16)

**பரவளையம் $x$ அச்சை வெட்டும் புள்ளிகள்:** (4, 0) $x$- ஆயத்தொலைவுகள் 4




**தீர்வுகளின் தன்மை:**

கொடுக்கப்பட்ட இருபடிச் சமன்பாட்டிற்கு மெய் மற்றும் சமமான தீர்வுகள் உண்டு.

**iii.** $x^2 + 2x + 5 = 0$ **செப்.20** **செப்.21**

| $x$ | −3 | −2 | −1 | 0 | 1 | 2 | 3 | 4 |
|---|---|---|---|---|---|---|---|---|
| $x^2$ | 9 | 4 | 1 | 0 | 1 | 4 | 9 | 16 |
| $2x$ | −6 | −4 | −2 | 0 | 2 | 4 | 6 | 8 |
| 5 | 5 | 5 | 5 | 5 | 5 | 5 | 5 | 5 |
| $y$ | 8 | 5 | 4 | 5 | 8 | 13 | 20 | 29 |

**புள்ளிகள்:** (−3, 8), (−2, 5), (−1, 4), (0, 5), (1, 8), (2,13), (3, 20), (4, 29)

**பரவளையம் $x$ அச்சை வெட்டும் புள்ளிகள்:** பரவளையம் $x$-அச்சை எந்தப் புள்ளியிலும் வெட்டவில்லை.



**தீர்வுகளின் தன்மை:**

கொடுக்கப்பட்ட இருபடிச் சமன்பாட்டிற்கு மெய்யெண் மூலங்கள் இல்லை.

---

iv. $x^2 - 9x + 20 = 0$

**அட்டவணை:**

| $x$ | –4 | –3 | –2 | –1 | 0 | 1 | 2 | 3 | 4 |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| $x^2$ | 16 | 9 | 4 | 1 | 0 | 1 | 4 | 9 | 16 |
| $-9x$ | 36 | 27 | 18 | 9 | 0 | –9 | –18 | –27 | –36 |
| +20 | 20 | 20 | 20 | 20 | 20 | 20 | 20 | 20 | 20 |
| $y$ | 72 | 56 | 42 | 30 | 20 | 12 | 6 | 2 | 0 |

**புள்ளிகள்** (–4, 72), (–3, 56), (–2, 42), (–1, 30), (0, 20), (1,12), (2, 6), (3,2), (4, 0)

**பரவளையம் $x$ அச்சை வெட்டும் புள்ளிகள்:** (4, 0) மற்றும் (5, 0). $X$-ஆயத்தொலைவுகள் 4 மற்றும் 5




**தீர்வுகளின் தன்மை:**

பரவளையம் x அச்சை இருவேறு புள்ளிகளில் வெட்டுகிறது. எனவே மூலங்கள் மெய், சமமில்லை.

v. $x^2 - 4x + 4 = 0$

**அட்டவணை:**

| $x$ | –4 | –3 | –2 | –1 | 0 | 1 | 2 | 3 | 4 |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| $x^2$ | 16 | 9 | 4 | 1 | 0 | 1 | 4 | 9 | 16 |
| $-4x$ | 16 | 12 | 8 | 4 | 0 | –4 | –8 | –12 | –16 |
| +4 | 4 | 4 | 4 | 4 | 4 | 4 | 4 | 4 | 4 |
| $y$ | 36 | 25 | 16 | 9 | 4 | 1 | 0 | 1 | 4 |

**புள்ளிகள்:** (–4, 36), (–3, 25), (–2, 16), (–1, 9), (0, 4), (1,1), (2, 0), (3,1), (4, 4)




**தீர்வுகளின் தன்மை:**

பரவளையம் x அச்சை ஒரே ஒரு புள்ளியில் தொட்டு வெட்டுகிறது. எனவே மூலங்கள் மெய், சமம்.

vi. $x^2 + x + 7 = 0$

**அட்டவணை:**

| $x$ | –4 | –3 | –2 | –1 | 0 | 1 | 2 | 3 | 4 |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| $x^2$ | 16 | 9 | 4 | 1 | 0 | 1 | 4 | 9 | 16 |
| $+x$ | –4 | –3 | –2 | –1 | 0 | 1 | 2 | 3 | 4 |
| +7 | 7 | 7 | 7 | 7 | 7 | 7 | 7 | 7 | 7 |
| $y$ | 19 | 13 | 9 | 7 | 7 | 9 | 13 | 19 | 27 |

**புள்ளிகள்** (–4, 19), (–3, 13), (–2, 9), (–1, 7), (0, 7), (1,9), (2, 13), (3,9), (4, 27)




**தீர்வுகளின் தன்மை:**

பரவளையம் $x$ – அச்சை வெட்டவும் இல்லை, தொட்டுச் செல்லவில்லை.

எனவே மூலங்கள் மெய்யல்ல.

---

**vii.** $x^2 - 9 = 0$

**அட்டவணை:**

| $x$ | –4 | –3 | –2 | –1 | 0 | 1 | 2 | 3 | 4 |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| $x^2$ | 16 | 9 | 4 | 1 | 0 | 1 | 4 | 9 | 16 |
| –9 | –9 | –9 | –9 | –9 | –9 | –9 | –9 | –9 | –9 |
| $y$ | 7 | 0 | –5 | –8 | –9 | –8 | –5 | 0 | 7 |

**புள்ளிகள்:** (–4, 7), (–3, 0), (–2, –5), (–1, –8), (0, –9), (1,–8), (2, –5), (3, 0), (4, 7)



**தீர்வுகளின் தன்மை:** பரவளையம் $x$ – அச்சை இருவேறு புள்ளிகளில் வெட்டுகிறது.
எனவே, மூலங்கள் மெய் சமமில்லை.

**viii. $x^2 - 6x + 9 = 0$**

**அட்டவணை:**

| $x$ | –4 | –3 | –2 | –1 | 0 | 1 | 2 | 3 | 4 |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| $x^2$ | 16 | 9 | 4 | 1 | 0 | 1 | 4 | 9 | 16 |
| $-6x$ | 24 | 18 | 12 | 6 | 0 | –6 | –12 | –18 | –24 |
| $+9$ | 9 | 9 | 9 | 9 | 9 | 9 | 9 | 9 | 9 |
| $y$ | 49 | 36 | 25 | 16 | 9 | 4 | 1 | 0 | 1 |

**புள்ளிகள்** (–4, 49), (–3,36), (–2, 25), (–1, 16), (0, 9), (1, 4), (2, 1), (3, 0), (4, 1)




**தீர்வுகளின் தன்மை:**

பரவளையம் x – அச்சை ஒரே ஒரு புள்ளியில் தொட்டு வெட்டுகிறது.
எனவே, மூலங்கள் மெய், சமம்.

---

**ix. $(2x - 3)(x + 2) = 0$**

$y = (2x - 3)(x + 2) = 2x^2 + 4x - 3x - 6 = 2x^2 + x - 6$

**அட்டவணை:**

| $x$ | –4 | –3 | –2 | –1 | 0 | 1 | 2 | 3 | 4 |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| $x^2$ | 16 | 9 | 4 | 1 | 0 | 1 | 4 | 9 | 16 |
| $2x^2$ | 32 | 18 | 8 | 2 | 0 | 2 | 8 | 18 | 32 |
| $+x$ | –4 | –3 | –2 | –1 | 0 | 1 | 2 | 3 | 4 |
| $-6$ | –6 | –6 | –6 | –6 | –6 | –6 | –6 | –6 | –6 |
| $y$ | 22 | 9 | 0 | –5 | –6 | –3 | 4 | 15 | 30 |

**புள்ளிகள்:** (–4, 22), (–3,9), (–2, 0), (–1,–5), (0,–6), (1, –3), (2, 4), (3,15), (4, 30)




**தீர்வுகளின் தன்மை:**

பரவளையம் $x$-அச்சை ஒரே இருவேறு புள்ளிகளில் வெட்டுகிறது.

எனவே மூலங்கள் மெய், சமமில்லை.

---

**12.** $y = x^2 + x - 2$ -ன் வரைபடம் வரைந்து அதன் மூலம் $x^2 + x - 2 = 0$ என்ற சமன்பாட்டினைத் தீர்க்கவும்.

**தீர்வு:**

**அட்டவணை:**

| $x$ | –4 | –3 | –2 | –1 | 0 | 1 | 2 | 3 | 4 |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| $x^2$ | 16 | 9 | 4 | 1 | 0 | 1 | 4 | 9 | 16 |
| +x | –4 | –3 | –2 | –1 | 0 | 1 | 2 | 3 | 4 |
| –2 | –2 | –2 | –2 | –2 | –2 | –2 | –2 | –2 | –2 |
| $y$ | 10 | 4 | 0 | –2 | –2 | 0 | 4 | 10 | 18 |

**புள்ளிகள்:** (–4, 10), (–3, 4), (–2, 0), (–1, –2), (0, –2), (1, 0), (2, 4), (3, 10), (4, 18)

**கழித்தல்:**

$$y = x^2 + x - 2$$
$$0 = x^2 + x - 2$$
$$(-) \quad (-)\ (-)\ (-)$$
$$y = 0$$



Kindly send me your study materials to email id - padasalai.net@gmail.com




**தீர்வுகள்:** −2 மற்றும் 1

---

13. **$y = x^2 + 3x - 4$ யின் வரைபடம் வரைந்து, அதனைப் பயன்படுத்தி $x^2 + 3x - 4 = 0$ என்ற சமன்பாட்டைத் தீர்க்கவும்.** **செப்.21**

**தீர்வு:**

**அட்டவணை:**

| $x$ | −4 | −3 | −2 | −1 | 0 | 1 | 2 | 3 | 4 |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| $x^2$ | 16 | 9 | 4 | 1 | 0 | 1 | 4 | 9 | 16 |
| $3x$ | −12 | −9 | −6 | -3 | 0 | 3 | 6 | 9 | 12 |
| -4 | -4 | -4 | -4 | -4 | -4 | -4 | -4 | -4 | -4 |
| $y$ | 0 | -4 | -6 | -6 | -4 | 0 | 6 | 14 | 24 |

**புள்ளிகள்:** (−4, 0), (−3, −4), (−2, −6), (−1, −6), (0, −4), (1, 0), (2, 6), (3, 14), (4, 24)

**கழித்தல்:**

$y = x^2 + 3x - 4$

$0 = x^2 + 3x - 4$

(−) (−) (−) (+)

$y = 0$



**தீர்வு:**

$x^2 + 3x - 4 = 0$ என்ற பரவளையம் $x$ அச்சை $(-4, 0)$ மற்றும் $(1, 0)$ என்ற புள்ளிகளில் வெட்டுவதால் இதற்கு மெய் மற்றும் சமமற்ற இரு தீர்வுகள் உண்டு. அவை $x = -4, x = 1$

**14. $y = x^2 - 5x - 6$ யின் வரைபடம் வரைந்து, அதனைப் பயன்படுத்தி $x^2 - 5x - 14 = 0$ என்ற சமன்பாட்டைத் தீர்க்கவும்.**

**தீர்வு:**

**அட்டவணை:**

| $x$ | –4 | –3 | –2 | –1 | 0 | 1 | 2 | 3 | 4 |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| $x^2$ | 16 | 9 | 4 | 1 | 0 | 1 | 4 | 9 | 16 |
| $-5x$ | 20 | 15 | 10 | 5 | 0 | –5 | –10 | –15 | –20 |
| –6 | –6 | –6 | –6 | –6 | –6 | –6 | –6 | –6 | –6 |
| $y$ | 30 | 18 | 8 | 0 | –6 | –10 | –12 | –12 | –10 |

**புள்ளிகள்:** (–4, 30), (–3, 4),(–2, 8), (–1, 0), (0, –6),(1, –10), (2, –12), (3, –12), (4, 10)

**கழித்தல்:**

$$y = x^2 - 5x - 6$$
$$0 = x^2 - 5x - 14$$
$$(-) \quad (-)\ (+)\ (+)$$
$$y = 8$$




**தீர்வுகள்:** –2 மற்றும் 7

★★★

## பயிற்சிக்காக

1. $y = 2x^2$ என்ற வரைபடம் வரைந்து அதன் மூலம் $2x^2 - x - 6 = 0$ என்ற சமன்பாட்டை தீர்க்க.
2. $y = x^2 + 4x + 3$-ன் வரைபடம் வரைந்து அதனைப் பயன்படுத்தி $x^2 + x + 1 = 0$ என்ற சமன்பாட்டின் தீர்வைக் காண்க.
3. $y = x^2 - 4x + 3$ -யின் வரைபடம் வரைந்து அதன் மூலம் $x^2 - 6x + 9 = 0$ என்ற சமன்பாட்டைத் தீர்க்கவும்.
4. $y = x^2 - 4$ வரைபடம் வரைந்து, அதனைப் பயன்படுத்தி $x^2 - x - 12 = 0$ என்ற சமன்பாட்டைத் தீர்க்கவும்.
5. $y = x^2 + x$ -யின் வரைபடம் வரைந்து, $x^2 + 1 = 0$ என்ற சமன்பாட்டைத் தீர்க்கவும்.
6. $y = x^2 + 3x + 2$ யின் வரைபடம் வரைந்து, அதனைப் பயன்படுத்தி $x^2 + 2x + 1 = 0$ என்ற சமன்பாட்டைத் தீர்க்கவும்.
7. $y = 2x^2 - 3x - 5$ யின் வரைபடம் வரைந்து, அதனைப் பயனபடுத்தி $2x^2 - 4x - 6 = 0$ என்ற சமன்பாட்டைத் தீர்க்கவும்.
8. $y = (x - 1)(x + 3)$ யின் வரைபடம் வரைந்து, அதனைப் பயன்படுத்தி $x^2 - x - 6 = 0$ என்ற சமன்பாட்டைத் தீர்க்கவும். **செப்.20**

★★★

www.Padasalai.Net www.CBSEtips.in



# 1 உறவுகளும் சார்புகளும்

## பயிற்சி 1.6

### பலவுள் தெரிவு வினாக்கள்

1. $n(A \times B) = 6$ மற்றும் $A = \{1, 3\}$ எனில், $n(B)$ ஆனது **செப்.21**
அ) 1 ஆ) 2 இ) 3 ஈ) 6

2. $A = \{a, b, p\}, B = \{2, 3\}, C = \{p, q, r, s\}$ எனில், $n[(A \cup C) \times B] =$
அ) 8 ஆ) 20 இ) 12 ஈ) 16

3. $A = \{1, 2\}$, $B = \{1, 2, 3, 4\}$, $C = \{5, 6\}$ மற்றும் $D = \{5, 6, 7, 8\}$ எனில் கீழே கொடுக்கப் பட்டவைகளில் எது சரியான கூற்று? **செப்.20**
அ) $(A\times C) \subset (B\times D)$ ஆ) $(B\times D) \subset (A\times C)$
இ) $(A\times B) \subset (A\times D)$ ஈ) $(D\times A) \subset (B\times A)$

4. $A=\{1,2,3,4,5\}$ -லிருந்து, $B$ என்ற கணத்திற்கு, 1024 உறவுகள் உள்ளது எனில் $B$ -ல் உள்ள உறுப்புகளின் எண்ணிக்கை **ஆக.22**
அ) 3 ஆ) 2 இ) 4 ஈ) 8

5. $R = \{(x, x^2) \mid x$ ஆனது 13-ஐ விடக் குறைவான பகா எண்கள்$\}$ என்ற உறவின் வீச்சகமானது **ஆக.22**
அ) $\{2,3,5,7\}$ ஆ) $\{2,3,5,7,11\}$
இ) $\{4,9,25,49,121\}$ ஈ) $\{1,4,9,25,49,121\}$

6. $(a+2, 4)$ மற்றும் $(5, 2a+b)$ ஆகிய வரிசைச் சோடிகள் சமம் எனில், $(a, b)$ என்பது **மே 22**
அ) $(2, -2)$ ஆ) $(5,1)$ இ) $(2,3)$ ஈ) $(3, -2)$

7. $n(A) = m$ மற்றும் $n(B) = n$ என்க. $A$-லிருந்து $B$-க்குவரையறுக்கப்பட்ட வெற்றுகணமில்லாத உறவுகளின் மொத்த எண்ணிக்கை.
அ) $m^n$ ஆ) $n^m$ இ) $2^{mn} - 1$ ஈ) $2^{mn}$

8. $\{(a, 8), (6, b)\}$ ஆனது ஒரு சமனிச் சார்பு எனில், $a$ மற்றும் $b$ மதிப்புகளாவன முறையே
அ) $(8, 6)$ ஆ) $(8, 8)$ இ) $(6, 8)$ ஈ) $(6, 6)$

9. $A = \{1, 2, 3, 4\}$ $B = \{4, 8, 9, 10\}$ என்க. சார்பு $f : A \to B$ ஆனது $f = \{(1, 4), (2, 8), (3, 9), (4, 10)\}$ எனக் கொடுக்கப்பட்டால் $f$-என்பது
அ) பலவற்றிலிருந்து ஒன்றுக்கான சார்பு
ஆ) சமனிச் சார்பு
இ) ஒன்றுக்கொன்றான சார்பு
ஈ) உட்சார்பு

10. $f(x) = 2x^2$ மற்றும் $g(x) = \dfrac{1}{3x}$, எனில் $f o g$ ஆனது
அ) $\dfrac{3}{2x^2}$ ஆ) $\dfrac{2}{3x^2}$ இ) $\dfrac{2}{9x^2}$ ஈ) $\dfrac{1}{6x^2}$

11. $f : A \to B$ ஆனது இருபுறச் சார்பு மற்றும் $n(B) = 7$ எனில் $n(A)$ ஆனது
அ) 7 ஆ) 49 இ) 1 ஈ) 14

12. $f$ மற்றும் $g$ என்ற இரண்டு சார்புகளும்
$f = \{(0, 1), (2, 0), (3, -4), (4, 2), (5, 7)\}$
$g = \{(0, 2), (1, 0), (2, 4), (-4, 2), (7, 0)\}$ எனக் கொடுக்கப்பட்டால் $f o g$ -ன் வீச்சகமானது
அ) $\{0, 2, 3, 4, 5\}$ ஆ) $\{-4, 1, 0, 2, 7\}$
இ) $\{1, 2, 3, 4, 5\}$ ஈ) $\{0, 1, 2\}$

13. $f(x) = \sqrt{1 + x^2}$ எனில்
அ) $f(xy) = f(x) . f(y)$
ஆ) $f(xy)^3 \geq f(x) . f(y)$
இ) $f(xy) \leq f(x) . f(y)$
ஈ) இவற்றில் ஒன்றுமில்லை

14. $g = \{(1, 1), (2, 3), (3, 5), (4, 7)\}$ என்ற சார்பானது $g(x) = \alpha x + \beta$ எனக் கொடுக்கப்பட்டால் o $f$ $\alpha$ மற்றும் $\beta$-வின் மதிப்பானது
அ) $(-1, 2)$ ஆ) $(2, -1)$
இ) $(-1, -2)$ ஈ) $(1, 2)$

15. $f(x) = (x + 1)^3 - (x - 1)^3$ குறிப்பிடும் சார்பானது
அ) நேரிய சார்பு ஆ) ஒரு கனச் சார்பு
இ) தலைகீழ்ச் சார்பு ஈ) இருபடிச் சார்பு

***

### 2 மதிப்பெண்கள் — STAGE 1

1. $A \times B = \{(3, 2), (3, 4), (5, 2), (5, 4)\}$ எனில் $A$ மற்றும் $B$-ஐ காண்க. **செப்.20** **ஆக.22**

**தீர்வு:**

$A \times B = \{(3, 2), (3, 4), (5, 2), (5, 4)\}$

$A = \{A \times B$ -யின் முதல் ஆயத்தொலைவு உறுப்புகளின் கணம்$\}$. எனவே $A = \{3, 5\}$

$B = \{A \times B$ -யின் இரண்டாம் ஆயத்தொலைவு உறுப்புகளின் கணம்$\}$. எனவே $B = \{2, 4\}$

$A = \{3, 5\}$ மற்றும் $B = \{2, 4\}$



Kindly send me your study materials to email id - padasalai.net@gmail.com

**2. பின்வருவனவற்றிற்கு $A \times B$, $A \times A$ மற்றும் $B \times A$ ஐக் காண்க.**

**i) $A=\{2, -2, 3\}$ மற்றும் $B = \{1, -4\}$**

**ii) $A = B = \{p, q\}$ iii) $A = \{m, n\}$; $B = \varphi$**

**தீர்வு:**

i) $A \times B = \{2, -2, 3\} \times \{1, -4\}$

$= \{(2, 1), (2, -4), (-2, 1), (-2, -4), (3, 1), (3, -4)\}$

$A \times A = \{2, -2, 3\} \times \{2, -2, 3\}$

$= \{(2, 2),(2, -2),(2, 3),(-2, 2),(-2, -2), (-2, 3),(3, 2),(3, -2), (3, 3)\}$

$B \times A = \{1, -4\} \times \{2, -2, 3\}$

$= \{(1, 2), (1, -2), (1, 3), (-4, 2), (-4, -2), (-4, 3)\}$

ii) $A = B = \{p, q\}$

$A \times B = \{p, q\} \times \{p, q\}$

$= \{(p, p), (p, q), (q, p), (q ,q)\}$

$A \times A = \{p, q\} \times p, q\}$

$= \{(p, p), (p, q), (q, p),(q ,q)\}$

$B \times A = \{p, q\} \times \{p, q\}$

$= \{(p, p), (p, q), (q, p), (q ,q)\}$

iii) $A = \{m, n\}, B = \varphi$

$A \times B = \{(m, n) \times \{\ \} = \{\ \}$

$A \times A = \{(m, n)\} \times \{m, n\}$

$= \{(m, m), (m, n), (n, m), (n, n)\}$

$B \times A = \{\ \} \times \{m, n\} = \{\ \}$

**3. $A = \{1, 2, 3\}$ மற்றும் $B = \{x \mid x$ என்பது 10 -ஐ விடச் சிறிய பகா எண்$\}$ எனில், $A \times B$ மற்றும் $B \times A$ ஆகியவற்றைக் காண்க.** மே 22

**தீர்வு:**

$A = \{1, 2, 3\}$, $B = \{2, 3, 5, 7\}$

$A \times B = \{1,2,3\} \times \{2,3,5,7\}$

$= \{(1, 2), (1, 3), (1, 5), (1, 7), (2, 2), (2, 3), (2, 5), (2, 7), (3, 2), (3, 3), (3, 5), (3, 7)\}$

$B \times A = \{2, 3, 5, 7\} \times \{1, 2, 3\}$

$= \{(2, 1), (2, 2), (2, 3), (3, 1), (3, 2), (3, 3), (5, 1), (5, 2), (5, 3), (7, 1), (7, 2), (7, 3)\}$

**4. $B \times A = \{(-2, 3), (-2, 4), (0, 3), (0, 4), (3, 3), (3, 4)\}$ எனில், $A$ மற்றும் $B$ ஆகியவற்றைக் காண்க.**

**தீர்வு:**

$A = \{B \times A$-யின் இரண்டாவது ஆயத்தொலைவு உறுப்புகளின் கணம்$\}$

எனவே, $A = \{3, 4\}$

$B = \{B\times A$-யின் முதல் ஆயத் தொலைவு உறுப்புகளின் கணம்$\}$

எனவே, $B = \{-2, 0, 3\}$

எனவே, $A = \{3, 4\}, B = \{-2, 0, 3\}$

**5. படத்தில் காட்டப்பட்டுள்ள (படம்) அம்புக்குறி படமானது $P$ மற்றும் $Q$ கணங்களுக்கான உறவைக் குறிக்கின்றது. இந்த உறவை**




**(i) கண கட்டமைப்பு முறை**

**(ii) பட்டியல் முறைகளில் எழுதுக.**

**(iii) $R$-ன் மதிப்பகம் மற்றும் வீச்சகத்தைக் காண்க.**

**தீர்வு:**

i) $R$ யின் கண கட்டமைப்பு முறை

$= \{(x, y) \mid y = x - 2, x \in P, y \in Q\}$

ii) $R$ யின் பட்டியல் முறை

$= \{(5, 3), (6, 4), (7, 5)\}$

iii) $R$ யின் மதிப்பகம் $= \{5, 6, 7\}$ மற்றும்

$R$ யின் வீச்சகம் $= \{3, 4, 5\}$

**6. $X = \{1, 2, 3, 4\}$, $Y = \{2, 4, 6, 8, 10\}$ மற்றும் $R = \{(1, 2), (2, 4), (3, 6), (4, 8)\}$ எனில், $R$ ஆனது ஒரு சார்பு எனக் காட்டுக. மேலும் அதன் மதிப்பகம், துணை மதிப்பகம் மற்றும் வீச்சகத்தைக் காண்க.**

**தீர்வு:**




படத்தில் $R$ குறிக்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு $x \in X$-க்கும், ஒரே ஒரு $y \in Y$ உறுப்பு மட்டும் கிடைக்கிறது.

எனவே $X$-ன் எல்லா உறுப்புகளுக்கும் $Y$-ல் ஒரே ஒரு நிழல் உரு உள்ளது.

எனவே $R$-ஆனது ஒரு சார்பு ஆகும்.

மதிப்பகம் $X = \{1, 2, 3, 4\}$

துணை மதிப்பகம் $Y = \{ 2, 4, 6, 8, 10\}$

வீச்சகம் $f = \{2, 4, 6, 8\}$

**7. $A = \{1, 2, 3, 4, ..., 45\}$ மற்றும் $R$ என்ற உறவு "$A$-யின் மீது, ஓர் எண்ணின் வர்க்கம்" என வரையறுக்கப்பட்டால் $R$ -ஐ $A\times A$-யின் உட்கணமாக எழுதுக. மேலும் $R$-க்கான மதிப்பகத்தையும், வீச்சகத்தையும் காண்க.**

**தீர்வு:** செப்.21

$A = \{1, 2, 3, ...., 45\}$

$R = \{(1, 1), (2, 4), (3, 9), (4, 16), (5, 25), (6, 36)\}$

R ஆனது $(A \times A)$ யின் உட்கணம் என்பது தெளிவாகிறது.

$\therefore$ மதிப்பகம் $= \{1, 2, 3, 4, 5, 6\}$

வீச்சகம் $= \{1, 4, 9, 16, 25, 36\}$

---

**8. $R$ என்ற ஒரு உறவு $\{(x, y) / y = x + 3, x \in \{0, 1, 2, 3, 4, 5\}\}$ எனக் கொடுக்கப்பட்டுள்ளது இதன் மதிப்பகத்தையும் வீச்சகத்தையும் கண்டறிக.**

**தீர்வு:**

$x = \{0, 1, 2, 3, 4, 5\}$

$f(x) = y = x + 3$

$f(0) = 3; f(1) = 4; f(2) = 5;$

$f(3) = 6; f(4) = 7; f(5) = 8$

$\therefore R = \{(0, 3), (1, 4), (2, 5), (3, 6), (4, 7), (5, 8)\}$

மதிப்பகம் $= \{0, 1, 2, 3, 4, 5\}$

வீச்சகம் $= \{3, 4, 5, 6, 7, 8\}$

---

**9. கொடுக்கப்பட்ட சார்பு $f : x \to x^2 - 5x + 6$, எனில், (i) $f(-1)$ (ii) $f(2)$ ஆகியவற்றை மதிப்பிடுக.**

**தீர்வு:**

இங்கு $f : x \to x^2 - 5x + 6$

$\Rightarrow f(x) = x^2 - 5x + 6$

i) $f(-1) = (-1)^2 - 5(-1) + 6$

$= 1 + 5 + 6$

$= 12$

iii) $f(2) = (2)^2 - 5(2) + 6$

$= 4 - 10 + 6$

$= 0$

---

**10. $f$ என்ற சார்பு $f(x) = 3 - 2x$ என வரையறுக்கப் படுகிறது. $f(x^2) = (f(x))^2$ எனில் $x$ ஐக் காண்க.**

**தீர்வு:**

$f(x) = 3 - 2x$

கொடுக்கப்பட்டுள்ளது $f(x^2) = [f(x)]^2$

$3 - 2x^2 = [3 - 2x]^2$

$\Rightarrow \quad 3 - 2x^2 = 9 + 4x^2 - 12x$

$3 - 2x^2 - 9 - 4x^2 + 12x = 0$

$\Rightarrow \quad -6x^2 + 12x - 6 = 0 \div -6$

$x^2 - 2x + 1 = 0$

$(x - 1)(x - 1) = 0 \Rightarrow x = 1, 1$

---

**11. $A = \{1, 2, 3, 4\}$ மற்றும் $B = N$ என்க. மேலும் $f : A \to B$ ஆனது $f(x) = x^3$ என வரையறுக்கப்படுகிறது எனில், (i) $f$ -யின் வீச்சகத்தைக் காண்க. (ii) $f$ எவ்வகை சார்பு எனக் காண்க.**

**தீர்வு:**

$A = \{1, 2, 3, 4\}, B = N$

$f : A \to B, \ f(x) = x^3$

$f(1) = (1)^3 = 1; \quad f(2) = (2)^3 = 8;$

$f(3) = (3)^3 = 27; \quad f(4) = (4)^3 = 64$

i) வீச்சகம் $= \{1, 8, 27, 64\}$

ii) வீச்சகம் $\neq$ துணை மதிப்பகம் என்பதால் இது ஒரு உள் சார்பு ஆகும்.

★★★

## 5 மதிப்பெண்கள் STAGE I

**1. $A = \{1, 3, 5\}, B = \{2, 3\}$ எனில்**

**(i) $A \times B$ மற்றும் $B \times A$ -ஐ காண்க.**

**(ii) $A \times B = B \times A$ ஆகுமா? இல்லையெனில் ஏன்?**

**(iii) $n(A \times B) = n(B \times A) = n(A) \times n(B)$ எனக் காட்டுக.** செப்.21

**தீர்வு:**

கொடுக்கப்பட்டுள்ளது: $A = \{1, 3, 5\}, B = \{2, 3\}$

i) $A \times B = \{1, 3, 5\} \times \{2 \times 3\}$

$= \{(1, 2), (1, 3), (3, 2), (3, 3), (5, 2), (5, 3)\}$ ---- (1)

$B \times A = \{2 \times 3\} \times \{1, 3, 5\}$

$= \{(2, 1), (2, 3), (2, 5), (3, 1), (3, 3), (3, 5)\}$ ---- (2)

ii) (1) மற்றும் (2)-ன் மூலமாக $A \times B \neq B \times A$ ஏனெனில் $(1, 2) \neq (2, 1)$ மற்றும் $(1, 3) \neq (3, 1)$...

iii) $n(A) = 3; n(B) = 2$

(1) மற்றும் (2)-லிருந்து நாம் காண்பது,

$n(A \times B) = n(B \times A) = 6;$

$n(A) \times n(B) = 3 \times 2 = 6$

ஆகவே, $n(A \times B) = n(B \times A)$

$= n(A) \times n(B)$

---

**2. $A = \{x \in N \mid 1 < x < 4\}, B = \{x \in W \mid 0 \leq x < 2\}$ மற்றும் $C = \{x \in N \mid x < 3\}$ என்க.**

**(i) $A \times (B \cup C) = (A \times B) \cup (A \times C)$**

**(ii) $A \times (B \cap C) = (A \times B) \cap (A \times C)$ என்பனவற்றைச் சரிபார்க்க.**

**தீர்வு:**

$A = \{x \in N \mid 1 < x < 4\} = \{2, 3\},$

$B = \{x \in W \mid 0 \leq x < 2\} = \{0, 1\},$

$C = \{x \in N \mid x < 3\} = \{1, 2\}$

**i)** $A \times (B \cup C) = (A \times B) \cup (A \times C)$

$B \cup C = \{0, 1\} \cup \{1, 2\} = \{0, 1, 2\}$

$A \times (B \cup C) = \{2, 3\} \times \{0, 1, 2\}$

$= \{(2, 0), (2, 1), (2, 2), (3, 0), (3, 1), (3, 2)\}$ ---- (1)

$A \times B = \{2, 3\} \times \{0, 1\}$

$= (2, 0), (2, 1), (3, 0), (3, 1)\}$

$A \times C = \{2, 3\} \times \{1, 2\}$

$= \{(2, 1), (2, 2), (3, 1), (3, 2)\}$

$(A\times B) \cup (A\times C) = \{(2,0), (2,1), (3, 0), (3,1)\} \cup \{(2,1), (2, 2), (3, 1), (3, 2)\}$

$= \{(2, 0), (2, 1), (2, 2), (3, 0), (3, 1), (3, 2)\}$ ---- (2)

(1) = (2)

$\therefore A \times (B \cup C) = (A \times B) \cup (A \times C)$ என்பது சரிபார்க்கப்பட்டது.

---

**ii)** $A \times (B \cap C) = (A \times B) \cap (A \times C)$

$B \cap C = \{0, 1\} \cap \{1, 2\} = \{1\}$

$A \times (B \cap C) = \{2, 3\} \times \{1\}$

$= \{(2, 1), (3, 1)\}$ ---- (1)

$A \times B = \{2, 3\} \times \{0, 1\}$

$= \{(2, 0), (2,1), (3, 0), (3, 1)\}$

$A \times C = \{2, 3\} \times \{1, 2\}$

$= \{(2, 1), (2, 2), (3, 1), (3, 2)\}$

$(A\times B) \cap (A\times C) = \{(2, 0), (2, 1), (3, 0), (3, 1)\} \cap \{(2, 1), (2, 2), (3, 1), (3, 2)\}$

$= \{(2, 1), (3, 1)\}$ ---- (2)

(1) = (2)

$\therefore A \times (B \cap C) = (A \times B) \cap (A \times C)$

என்பது சரிபார்க்கப்பட்டது.

---

**3. $A = \{5, 6\}, B = \{4, 5, 6\}, C = \{5, 6, 7\}$, எனில் $A \times A = (B \times B) \cap (C \times C)$ எனக் காட்டுக.** ஆக.22

**தீர்வு:**

$A = \{5, 6\}, B = \{4, 5, 6\}, C = \{5, 6, 7\}$

**LHS:**

$A \times A = \{5, 6\} \times \{5, 6\}$

$= \{(5, 5), (5, 6), (6, 5), (6, 6)\}$ ---- (1)

**RHS:** $(B \times B) \cap (C \times C)$

$B \times B = \{4, 5, 6\} \times \{4, 5, 6\}$

$= \{(4, 4), (4, 5), (4, 6), (5, 4), (5, 5), (5, 6), (6, 4), (6, 5), (6, 6)\}$

$C \times C = \{5, 6, 7\} \times \{5, 6, 7\}$

$= \{(5, 5), (5, 6), (5, 7), (6, 5), (6, 6), (6, 7), (7, 5), (7, 6), (7, 7)\}$

$\therefore (B\times B) \cap (C\times C) = \{(5, 5), (5, 6), (6, 5), (6,6)\}$ ---- (2)

$\therefore$ (1) மற்றும் (2) லிருந்து LHS = RHS.

---

**4. $A=\{1, 2, 3\}$, $B = \{2, 3, 5\}$, $C = \{3, 4\}$ மற்றும் $D = \{1, 3, 5\}$ எனில் $(A \cap C) \times (B \cap D) = (A \times B) \cap (C \times D)$ என்பது உண்மையா என சோதிக்கவும்.**

**தீர்வு:**

$A \cap C = \{1, 2, 3\} \cap \{3, 4\}$

$A \cap C = \{3\}$

$B \cap D = \{2, 3, 5\} \cap \{1, 3, 5\}$

$B \cap D = \{3, 5\}$

$(A \cap C) \times (B \cap D) = \{3\} \times \{3, 5\}$

**8. ஒரு பையில் 5 சிவப்பு நிறப்பந்துகளும், 6 வெள்ளை நிறப்பந்துகளும், 7 பச்சை நிறப்பந்துகளும், 8 கருப்பு நிறப்பந்துகளும் உள்ளன. சமவாய்ப்பு முறையில் பையிலிருந்து ஒரு பந்து எடுக்கப்படுகிறது அந்தப் பந்து**
**(i) வெள்ளை**
**(ii) கருப்பு அல்லது சிவப்பு**
**(iii) வெள்ளையாக இல்லாமல்**
**(iv) வெள்ளையாகவும், கருப்பாகவும் இல்லாமல் இருப்பதற்கான நிகழ்தகவுகளைக் காண்க.** **ஆக.22**

**தீர்வு:**

$S = \{5$ சி, 6 வெ, 7 ப, 8 க$\}$

$n(S) = 26$

i. $A$ என்பது வெள்ளை நிற பந்து என்க.

$n(A) = 6; \quad P(A) = \frac{6}{26} = \frac{3}{13}$

ii. $B$ என்பது கருப்பு (அ) சிகப்பு நிற பந்து என்க.

$n(B) = 8 + 5 = 13; P(B) = \frac{13}{26} = \frac{1}{2}$

iii. $C$ என்பது வெள்ளை நிற பந்து இல்லை என்க.

$n(C) = 20; \quad P(C) = \frac{20}{26} = \frac{10}{13}$

iv. $D$ என்பது வெள்ளை அல்லது கருப்பு நிற பந்து என்க.

$n(D) = 12; \quad P(D) = \frac{12}{26} = \frac{6}{13}$

**9. ஒரு பெட்டியில் 20 குறைபாடில்லாத விளக்குகளும் ஒரு சில குறைபாடுடைய விளக்குகளும் உள்ளன. பெட்டியிலிருந்து சமவாய்ப்பு முறையில் தேர்ந்தெடுக்கப்படும் ஒரு விளக்கானது குறைபாடுடையதாக இருப்பதற்கான வாய்ப்பு $\frac{3}{8}$ எனில், குறைபாடுடைய விளக்குகளின் எண்ணிக்கையைக் காண்க.**

**தீர்வு:**

ஒரு பெட்டியில் 20 குறைபாடில்லாத விளக்குகள் மற்றும் $x$ என்பது குறைபாடுடைய விளக்குகள் என்பதால்

$n(S) = x + 20$

$A$ என்பது குறைபாடுடைய விளக்குகள் எடுக்கும் நிகழ்ச்சி என்க.

$n(A) = x$

$P(A) = \frac{n(A)}{n(S)} = \frac{x}{x+20}$

கொடுக்கப்பட்ட விவரத்தின் படி

$$\frac{x}{x+20} = \frac{3}{8}$$
$$8x = 3x + 60$$
$$5x = 60$$
$$x = 12$$

∴ குறைபாடுடைய விளக்குகளின் எண்ணிக்கை = 12

**10. நன்கு கலைத்து அடுக்கப்பட்ட 52 சீட்டுகள் கொண்ட ஒரு சீட்டுக்கட்டில், டைமண்ட் சீட்டுகளிலிருந்து இராசா மற்றும் இராணி சீட்டுகளும், ஹார்ட் சீட்டுகளிலிருந்து, இராணி மற்றும் மந்திரி சீட்டுகளும், ஸ்பேடு சீட்டுகளிலிருந்து, மந்திரி மற்றும் இராசா சீட்டுகளும் நீக்கப்படுகிறது. மீதமுள்ள சீட்டுகளிலிருந்து, ஒரு சீட்டு சமவாய்ப்பு முறையில் எடுக்கப்படுகிறது. அந்த சீட்டானது (i) க்ளாவர் ஆக (ii) சிவப்பு இராணியாக (iii) கருப்பு இராசாவாக இருப்பதற்கான நிகழ்தகவுகளைக் காண்க.**

**தீர்வு:**

டைமண்ட் சீட்டிலிருந்து இராசா மற்றும் இராணி சீட்டுகளும் ஹார்ட் சீட்டிலிருந்து இராணி மற்றும் மந்திரி சீட்டுகளும், ஸ்பேடு சீட்டிலிருந்து மந்திரி மற்றும் இராசா சீட்டுகளும் நீக்கப்பட்டால் மீதமுள்ள மொத்த சீட்டுகளின் எண்ணிக்கை $= 52 - 6 = 46$

அதாவது $n(S) = 52 - 6 = 46$

i. $A$ = க்ளாவர் கிடைக்கும் நிகழ்ச்சி என்க.

$n(A) = 13 \quad P(A) = \frac{n(A)}{n(S)} = \frac{13}{46}$

ii. $B$ = சிவப்பு இராணி கிடைக்கும் நிகழ்ச்சி என்க.

சிவப்பு நிற இராணி இரண்டும் நீக்கப்பட்டதால் $n(B) = 0$

$P(B) = \frac{n(B)}{n(S)} = \frac{0}{46} = 0$



Kindly send me your study materials to email id - padasalai.net@gmail.com

**iii.** $C$ கருப்பு இராசா கிடைக்கும் நிகழ்ச்சி என்க. ஸ்பேடு சீட்டில் உள்ள ஒரு கருப்பு இராணி நீக்கப்பட்டதால்

$n(C) = 1 \quad P(C) = \frac{n(C)}{n(S)} = \frac{1}{46}$

---

**11. மாணவர்கள் விளையாடும் ஒரு விளையாட்டில் அவர்களால் எறியப்படும் கல்லானது வட்டப்பரிதிக்குள் விழுந்தால் அதை வெற்றியாகவும், வட்டப்பரிதிக்கு வெளியே செவ்வகத்திற்குள் விழுந்தால் அதைத் தோல்வியாகவும் கருதப்படுகிறது. விளையாட்டில் வெற்றி கொள்வதற்கான நிகழ்தகவு என்ன? ($\pi = 3.14$)**




**தீர்வு:**

மொத்த பரப்பளவு $= 4 \times 3 = 12$ ச.அ

$\therefore n(S) = 12$

வெற்றி பெறும் பரப்பளவு = வட்டத்தின் பரப்பு

$= \pi r^2 = \pi(1)^2 = \pi = 3.14$ ச.அ

அதாவது $n(A) = 3.14$

$P(\text{வெற்றி பெற}) = \frac{n(A)}{n(S)} = \frac{3.14}{12}$

$= \frac{314}{1200} = \frac{157}{600}$

---

**12. ஒரு தரவின் திட்ட விலக்கம் மற்றும் மாறுபாட்டுக் கெழு ஆகியன முறையே 1.2 மற்றும் 25.6 எனில் அதன் சராசரியைக் காண்க.**

**தீர்வு:**

தரவின் திட்ட விலக்கம் $\sigma = 1.2$,

மாறுபாட்டுக் கெழு $CV = 25.6$,

$CV = \frac{\sigma}{\bar{x}} \times 100$

$\bar{x} = \frac{\sigma}{C.V} \times 100 = \frac{1.2}{25.6} \times 100 = \frac{1200}{256}$

$\bar{x} = 4.7$

---

**13. இரண்டு நுகர்வோர்கள், பிரியா மற்றும் அமுதன் ஒரு குறிப்பிட்ட அங்காடிக்கும், குறிப்பிட்ட வாரத்தில் (திங்கள் முதல் சனி வரை) செல்கிறார்கள். அவர்கள் அங்காடிக்குச் சமவாய்ப்பு முறையில் ஒவ்வொரு நாளும் செல்கிறார்கள். இருவரும் அங்காடிக்கு,**

**(i) ஒரே நாளில்**

**(ii) வெவ்வேறு நாட்களில்**

**(iii) அடுத்தடுத்த நாட்களில் செல்வதற்கான நிகழ்தகவுகளைக் காண்க.**

**தீர்வு:**

$n(S) = 36$

**i.** $A$ என்பது இருவரும் ஒரே நாளில் பார்வையிடும் நிகழ்ச்சி என்க.

$A$ = {(தி, தி), (செ, செ), (பு, பு), (வி, வி), (வெ, வெ), (ச, ச)}

$n(A) = 6$

$P(A) = \frac{n(A)}{n(S)} = \frac{6}{36} = \frac{1}{6}$

**ii.** $P$(வெவ்வேறு நாட்களில் பார்வையிட)

$= P(\bar{A}) = 1 - P(A) = 1 - \frac{1}{6} = \frac{5}{6}$

**iii.** $C$ என்பது அடுத்தடுத்த நாட்களில் பார்வையிடும் நிகழ்ச்சி என்க.

$C$ = {(தி, செ), (செ, பு), (பு, வி), (வி, வெ), (வெ, ச) (செ, தி), (பு, செ), (வி, பு), (வெ, வி), (ச, வெ)}

$n(C) = 10$

$P(C) = \frac{n(C)}{n(S)} = \frac{10}{36} = \frac{5}{18}$

---

**14. ஒரு விளையாட்டிற்கான, நுழைவுக் கட்டணம் ₹ 150. அந்த விளையாட்டில் ஒரு நாணயம் மூன்று முறை சுண்டப்படுகிறது. தனா, ஒரு நுழைவுச் சீட்டு வாங்கினாள். அவ்விளையாட்டில் ஒன்று அல்லது இரண்டு தலைகள் விழுந்தால் அவள் செலுத்திய நுழைவுக் கட்டணம் திரும்பக் கிடைத்துவிடும். மூன்று தலைகள் கிடைத்தால் அவளது நுழைவுக் கட்டணம் இரண்டு மடங்காகக் கிடைக்கும். இல்லையென்றால் அவளுக்கு எந்தக் கட்டணமும் திரும்பக் கிடைக்காது. இவ்வாறெனில், (i) இரண்டு மடங்காக (ii) நுழைவுக் கட்டணம் திரும்பப்பெற (iii) நுழைவுக் கட்டணத்தை இழப்பதற்கு, ஆகிய நிகழ்ச்சிகளுக்கான நிகழ்தகவுகளைக் காண்க.**

**தீர்வு:**

$S = \{HHH, HHT, HTH, THH, TTT, TTH, THT, HTT\}$

$n(S) = 8$

**i.** இரண்டு மடங்காக நுழைவுக் கட்டணம் திரும்பப்பெற மூன்று தலை பெற வேண்டும்.

$A$ = மூன்று தலை கிடைக்கும் நிகழ்ச்சி என்க.

www.Padasalai.Net www.CBSEtips.in



$A = \{HHH\}$

$n(A) = 1$

$P(A) = \frac{n(A)}{n(S)} = \frac{1}{8}$

**ii.** நுழைவுக் கட்டணம் திரும்பப் பெற ஒன்று அல்லது இரண்டு தலைகள் கிடைக்கப் பெற வேண்டும்.

$B$ = ஒன்று அல்லது இரண்டு தலை கிடைக்கும் நிகழ்ச்சி என்க.

$B = \{TTH, THT, HTT, HHT, HTH, THH\}$

$n(B) = 6$

$P(B) = \frac{n(B)}{n(S)} = \frac{6}{8} = \frac{3}{4}$

**iii.** நுழைவுக் கட்டணத்தை இழப்பதற்கு தலையே விழாமல் இருக்க வேண்டும்.

$C$ = தலையே விழாமல் கிடைக்கும் நிகழ்ச்சி என்க.

$C = \{TTT\}$

$n(C) = 1$

$P(C) = \frac{n(C)}{n(S)} = \frac{1}{8}$

---

**15. இரண்டு பகடைகள் உருட்டப்படுகின்றன. இரண்டு முக மதிப்புகளும் சமமாக இருக்க அல்லது முக மதிப்புகளின் கூடுதல் 4 ஆக இருப்பதற்கான நிகழ்தகவைக் காண்க.**

**தீர்வு:**

$n(S) = 36$

இரண்டு பகடைகள் ஒன்றாக உருட்டப்படும் பொழுது அதன் கூறுவெளியில் $6 \times 6 = 36$ உறுப்புகள் இருக்கும். எனவே, $n(S) = 36$

$A$ ஆனது இரண்டு பகடைகளிலும் ஒரே முக மதிப்புகள் மற்றும் $B$ ஆனது இரண்டு பகடைகளின் முக மதிப்புகளின் கூடுதல் 4 -ஆக கிடைக்கப்பெறும் நிகழ்ச்சிகள் என்க.

எனவே $A = \{(1,1), (2,2), (3,3), (4,4), (5,5), (6,6)\}$

$B = \{(1,3),(2,2),(3,1)\}$

$\therefore\ A \cap B = \{(2,2)\}$

எனவே $n(A) = 6$ , $n(B) = 3$ , $n(A \cap B) = 1$

$P(A) = \frac{n(A)}{n(S)} = \frac{6}{36}$

$P(B) = \frac{n(B)}{n(S)} = \frac{3}{36}$

$P(A \cap B) = \frac{n(A \cap B)}{n(S)} = \frac{1}{36}$

$\therefore P$ (ஒரே முக மதிப்புகள் அல்லது முக மதிப்புகளின் கூடுதல் 4 கிடைக்க) $= P(A \cup B)$

$P(A \cup B) = P(A) + P(B) - P(A \cap B)$

$= \frac{6}{36} + \frac{3}{36} - \frac{1}{36} = \frac{8}{36} = \frac{2}{9}$

எனவே, தேவையான நிகழ்தகவு $\frac{2}{9}$ ஆகும்.

---

**16. $A$ மற்றும் $B$ ஆகியவை $P(A) = \frac{1}{4}$ $P(B) = \frac{1}{2}$ மற்றும் $P(A$ மற்றும் $B) = \frac{1}{8}$, என இருக்குமாறு அமையும் இரண்டு நிகழ்ச்சிகள் எனில், பின்வருவனவற்றைக் காண்க.**

**(i) $P(A$ அல்லது $B)$**

**(ii) $P(A$-ம் இல்லை மற்றும் $B$-ம் இல்லை)**

**தீர்வு:**

**i.** $P(A$ அல்லது $B) = P(A \cup B)$

$= P(A) + P(B) - P(A \cap B)$

$P(A$ அல்லது $B) = \frac{1}{4} + \frac{1}{2} - \frac{1}{8} = \frac{5}{8}$

**ii.** $P(A$ -ம் இல்லை மற்றும் $B$-ம் இல்லை)

$= P(\overline{A} \cap \overline{B})$

$= P\left(\overline{A \cup B}\right)$

$= 1 - P(A \cup B)$

$P(A$-ம் இல்லை மற்றும் $B$-ம் இல்லை)

$= 1 - \frac{5}{8} = \frac{3}{8}$

---

**17. 52 சீட்டுகள் கொண்ட சீட்டுக் கட்டிலிருந்து ஒரு சீட்டு எடுக்கப்படுகின்றது. அந்தச் சீட்டு இராசா அல்லது ஹார்ட் அல்லது சிவப்பு நிறச் சீட்டாக இருப்பதற்கான நிகழ்தகவைக் காண்க.**

**தீர்வு:**

மொத்த சீட்டுகளின் எண்ணிக்கை = 52

$n(S) = 52$

$A$ ஆனது இராசா சீட்டு கிடைப்பதற்கான நிகழ்ச்சி என்க.

$n(A) = 4$ ; $P(A) = \frac{n(A)}{n(S)} = \frac{4}{52}$

$B$ ஆனது ஹார்ட் சீட்டு கிடைப்பதற்கான நிகழ்ச்சி என்க.

$n(B) = 13$; $P(B) = \frac{n(B)}{n(S)} = \frac{13}{52}$

$C$ ஆனது சிவப்பு சீட்டு கிடைப்பதற்கான நிகழ்ச்சி என்க.

$n(C) = 26$; $P(C) = \frac{n(C)}{n(S)} = \frac{26}{52}$



Kindly send me your study materials to email id - padasalai.net@gmail.com

$P(A \cap B) = P$(ஹார்ட் மற்றும் இராசா சீட்டு கிடைக்க) $= \frac{1}{52}$

$P(B \cap C) = P$(சிவப்பு நிற ஹார்ட் சீட்டு கிடைக்க) $= \frac{13}{52}$

$P(A \cap C) = P$(சிவப்பு நிற இராசா சீட்டு கிடைக்க) $= \frac{2}{52}$

$P(A \cap B \cap C) = P$(ஹார்ட், இராசா சீட்டு சிவப்பு நிறத்தில் கிடைக்க) $= \frac{1}{52}$

எனவே, தேவையான நிகழ்தகவானது

$$P(A \cup B \cup C) = P(A) + P(B) + P(C) - P(A \cap B) - P(B \cap C) - P(A \cap C) + P(A \cap B \cap C)$$

$$= \frac{4}{52} + \frac{13}{52} + \frac{26}{52} - \frac{1}{52} - \frac{13}{52} - \frac{2}{52} + \frac{1}{52}$$

$$= \frac{28}{52} = \frac{7}{13}$$

**18. 50 மாணவர்கள் உள்ள ஒரு வகுப்பில், 28 பேர் NCC-யிலும், 30 பேர் NSS-லும் மற்றும் 18 பேர் NCC மற்றும் NSS-லும் சேர்கிறார்கள். ஒரு மாணவர் சமவாய்ப்பு முறையில் தேர்ந்தெடுக்கப்படுகிறார். அவர்**

**(i) NCC-யில் இருந்து, ஆனால் NSS -ல் இல்லாமல்**

**(ii) NSS-ல் இருந்து, ஆனால் NCC-யில் இல்லாமல்.**

**(iii) ஒன்றே ஒன்றில் மட்டும் சேர்ந்து இருப்பதற்கான நிகழ்தகவுகளைக் காண்க.**

**மே 22**

**தீர்வு:**




மொத்த மாணவர்களின் எண்ணிக்கை

$n(S) = 50$

i. $A$ : $NCC$ யில் சேர்ந்து $NSS$-யில் சேராமல் உள்ள மாணவர்கள்

$$P(A) = \frac{n(A)}{n(S)} = \frac{10}{50} = \frac{1}{5}$$

ii. $B$ : $NSS$-ல் இருந்து $NCC$-யில் சேராமல் உள்ள மாணவர்கள்

$$P(B) = \frac{n(B)}{n(S)} = \frac{12}{50} = \frac{6}{25}$$

iii. $C$ : ஒன்றே ஒன்றில் மட்டும் சேர்ந்து இருக்கும் மாணவர்கள்

$$P(C) = \frac{n(C)}{n(S)} = \frac{(10+12)}{50} = \frac{22}{50} = \frac{11}{25}$$

**19. இரண்டு பகடைகள் ஒரு முறை உருட்டப் படுகின்றன. முதல் பகடையில் முக மதிப்பு இரட்டைப் படை எண் அல்லது முக மதிப்புகளின் கூடுதல் 8 ஆகக் கிடைப்பதற்கான நிகழ்தகவைக் காண்க.**

**தீர்வு:**

$S = \{(1,1),(1,2),(1,3),(1,4),(1,5),(1,6)$
$(2,1),(2,2),(2,3),(2,4),(2,5),(2,6)$
$(3,1),(3,2),(3,3),(3,4),(3,5),(3,6)$
$(4,1),(4,2),(4,3),(4,4),(4,5),(4,6)$
$(5,1),(5,2),(5,3),(5,4),(5,5),(5,6)$
$(6,1),(6,2),(6,3),(6,4),(6,5),(6,6)\}$

$n(S) = 36$

$A$ = முதல் பகடையில் முக மதிப்பு இரட்டைப்படை எண் கிடைக்கும் நிகழ்ச்சி என்க.

$A = \{(2,1),(2,2),(2,3),(2,4),(2,5),(2,6)$
$(4,1),(4,2),(4,3),(4,4),(4,5),(4,6)$
$(6,1),(6,2),(6,3),(6,4),(6,5),(6,6)\}$

$n(A) = 18;\quad P(A) = \frac{n(A)}{n(S)} = \frac{18}{36}$

$B$ = முக மதிப்புகளின் கூடுதல் 8 கிடைக்கும் நிகழ்ச்சி என்க.

$B = \{(2,6),(3,5),(4,4),(5,3),(6,2)\}$

$n(B) = 5;\quad P(B) = \frac{n(B)}{n(S)} = \frac{5}{36}$

$A \cap B = \{(2,6),(4,4),(6,2)\}$

$n(A \cap B) = 3$

$P(A \cap B) = \frac{3}{36}$

$$P(A \cup B) = P(A) + P(B) - P(A \cap B)$$

$$= \frac{18}{36} + \frac{5}{36} - \frac{3}{36} = \frac{20}{36} = \frac{5}{9}$$

**20. ஒரு பெட்டியில் 3, 5, 7, 9, ... 35, 37. என்ற எண்கள் குறிக்கப்பட்ட சீட்டுகள் உள்ளன. சமவாய்ப்பு முறையில் எடுக்கப்படும் ஒரு சீட்டு ஆனது 7 -ன் மடங்காக அல்லது பகா எண்ணாக இருப்பதற்கான நிகழ்தகவைக் காண்க.**

**தீர்வு:**

$S = \{3, 5, 7, 9, 11, 13, 15, 17, 19, 21, 23, 25, 27, 29, 31, 33, 35, 37\}$

$n(S) = 18$

www.Padasalai.Net www.CBSEtips.in



$A$ என்பது 7-ன் மடங்காக இருக்கும் நிகழ்ச்சி என்க.

$A = \{7, 21, 35\}, n(A) = 3$

$P(A) = \frac{3}{18}$

$B$ என்பது பகா எண்ணாக இருக்கும் நிகழ்ச்சி என்க.

$B = \{3, 5, 7, 11, 13, 17, 19, 23, 29, 31, 37\}$

$n(B) = 11; P(B) = \frac{11}{18}$

$A \cap B = \{7\} \Rightarrow n(A \cap B) = 1$

$P(A \cap B) = \frac{1}{18}$

$P(A$ அல்லது $B$ ஆக இருக்க$) = P(A \cup B)$

$P(A \cup B) = P(A) + P(B) - P(A \cap B)$

$= \frac{3}{18} + \frac{11}{18} - \frac{1}{18} = \frac{13}{18}$

**21. சீரான மூன்று நாணயங்கள் ஒரு முறை சுண்டப்படுகின்றன. அதிபட்சம் 2 பூக்கள் அல்லது குறைந்தபட்சம் 2 தலைகள் கிடைப்பதற்கான நிகழ்தகவைக் காண்க.**

**தீர்வு:**

$S = \{HHH, HHT, HTH, THH, TTT, TTH, THT, HTT\}$

$n(S) = 8$

$A$ = அதிகபட்சம் இரண்டு பூக்கள் கிடைக்கும் நிகழ்ச்சி என்க.

$A = \{HHH, HHT, HTH, THH, TTH, THT, HTT\}$

$n(A) = 7 \; P(A) = \frac{7}{8}$

$B$ = குறைந்தபட்சம் இரண்டு தலைகள் கிடைக்கும் நிகழ்ச்சி என்க.

$B = \{HHT, HTH, THH, HHH\}$

$n(B) = 4, P(B) = \frac{4}{8}, \; P(A \cap B) = \frac{4}{8}$

$P(A \cup B) = P(A) + P(B) - P(A \cap B)$

$= \frac{7}{8} + \frac{4}{8} - \frac{4}{8} = \frac{7}{8}$

## சூத்திரங்கள்

| | | |
|---|---|---|
| 1. | ஒரு நிகழ்ச்சியின் நிகழ்தகவு | $P(A) = \frac{\text{நிகழ்தகவிற்கான சாதகமான வாய்ப்புகள்}}{\text{மொத்த வாய்ப்புகள்}}$<br>$P(A) = \frac{n(A)}{n(S)}$ |
| 2. | உறுதியான நிகழ்ச்சியின் நிகழ்தகவு | $P(S) = 1$ |
| 3. | உறுதியற்ற நிகழ்ச்சியின் நிகழ்தகவு | $P(\phi) = 0$ |
| 4. | நிகழ்தகவின் மதிப்பானது எப்பொழுதும் | 0 to 1 (அ) $0 \leq P(A) \leq 1$ |
| 5. | இயலா நிகழ்ச்சி | $P(\bar{A}) = 1 - P(A)$ $[\because P(A) + P(\bar{A}) = 1]$ |

****



Kindly send me your study materials to email id - padasalai.net@gmail.com

# விடைகள்

## பாடம் : 1

| | | | | |
|---|---|---|---|---|
| 1. இ | 2. இ | 3. அ | 4. ஆ | 5. இ |
| 6. ஈ | 7. இ | 8. ஆ | 9. இ | 10. அ |
| 11. அ | 12. ஈ | 13. இ | 14. ஆ | 15. ஈ |

## பாடம் : 2

| | | | | |
|---|---|---|---|---|
| 1. இ | 2. அ | 3. ஆ | 4. இ | 5. ஈ |
| 6. அ | 7. ஈ | 8. இ | 9. அ | 10. இ |
| 11. இ | 12. ஈ | 13. ஆ | 14. ஆ | 15. இ |

## பாடம் : 3

| | | | | |
|---|---|---|---|---|
| 1. ஈ | 2. அ | 3. ஆ | 4. அ | 5. ஆ |
| 6. இ | 7. ஈ | 8. ஆ | 9. இ | 10. இ |
| 11. ஆ | 12. அ | 13. ஆ | 14. ஈ | 15. ஆ |
| 16. ஆ | 17. ஈ | 18. ஆ | 19. இ | 20. அ |

## பாடம் : 4

| | | | | |
|---|---|---|---|---|
| 1. இ | 2. ஆ | 3. ஈ | 4. அ | 5. ஈ |
| 6. அ | 7. ஆ | 8. இ | 9. அ | 10. ஈ |
| 11. ஆ | 12. ஆ | 13. ஆ | 14. ஈ | 15. அ |

## பாடம் : 5

| | | | | |
|---|---|---|---|---|
| 1. ஆ | 2. அ | 3. ஆ | 4. இ | 5. இ |
| 6. ஈ | 7. ஆ | 8. ஆ | 9. அ | 10. இ |
| 11. இ | 12. அ | 13. ஆ | 14. ஆ | 15. ஆ |

## பாடம் : 6

| | | | | |
|---|---|---|---|---|
| 1. ஆ | 2. ஈ | 3. ஆ | 4. அ | 5. ஆ |
| 6. ஆ | 7. அ | 8. இ | 9. ஆ | 10. ஈ |
| 11. ஆ | 12. ஆ | 13. ஈ | 14. ஆ | 15. அ |

## பாடம் : 7

| | | | | |
|---|---|---|---|---|
| 1. ஈ | 2. அ | 3. அ | 4. ஆ | 5. இ |
| 6. ஆ | 7. ஆ | 8. இ | 9. இ | 10. அ |
| 11. ஈ | 12. அ | 13. அ | 14. ஆ | 15. ஈ |

## பாடம் : 8

| | | | | |
|---|---|---|---|---|
| 1. இ | 2. அ | 3. இ | 4. ஆ | அ |
| 6. ஈ | 7. ஆ | 8. அ | 9. அ | 10. ஆ |
| 11. ஆ | 12. ஆ | 13. இ | 14. இ | 15. ஈ |

***

Kindly send me your study materials to email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



# அரசு வினாத்தாள் செப்டம்பர் 2020

வகுப்பு: 10 கணிதம்

கால அளவு : 15 நிமிடம் + 3 மணி மதிப்பெண்கள் : 100

**அறிவுரை:**

1) அனைத்து வினாக்களும் சரியாக அச்சுப் பதிவாகி உள்ளதா என்பதனை சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின் அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாக தெரிவிக்கவும்.
2) நீலம் அல்லது கருப்பு மையினை மட்டுமே எழுதுவதற்கும் அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும். படங்கள் வரைவதற்கு பென்சில் பயன்படுத்தவும்.

## பகுதி - I

**குறிப்பு: i) அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.** **14×1=14**

**ii) கொடுக்கப்பட்டுள்ள மாற்று விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.**

**1. A = {1, 2}, B = {1, 2, 3, 4}, C = {5, 6} மற்றும் D = {5, 6, 7, 8} எனில் கீழே கொடுக்கப்பட்டவைகளில் எது சரியான கூற்று?**

1) $(A\times C)\subset(B\times D)$ 2) $(B\times D)\subset(A\times C)$ 3) $(A\times B)\subset(A\times D)$ 4) $(D\times A)\subset(B\times A)$

**2. $f(x) = x^2 - x$ எனில், $f(x-1) - f(x+1) =$**

1) $4x$ 2) $2-2x$ 3) $2-4x$ 4) $4x-2$

**3. யூக்ளிடின் வகுத்தல் துணைத் தேற்றத்தைப் பயன்படுத்தி, எந்த மிகை முழுவின் கனத்தையும் 9-ஆல் வகுக்கும்போது கிடைக்கும் மீதிகள்**

1) 0, 1, 8 2) 1, 4, 8 3) 0, 1, 3 4) 1, 3, 5

**4. $A = 2^{65}$ மற்றும் $B = 2^{64} + 2^{63} + 2^{62} + \ldots\ldots + 2^0$ எனக் கொடுக்கப்பட்டுள்ளது. பின்வருவனவற்றில் எது உண்மை?**

1) B ஆனது A– ஐ விட $2^{64}$ அதிகம் 2) A மற்றும் B சமம்
3) B ஆனது A– ஐ விட 1 அதிகம் 4) A ஆனது B– ஐ விட 1 அதிகம்

**5. $\dfrac{a^2}{a^2-b^2}+\dfrac{b^2}{b^2-a^2}$ -ன் மதிப்பு**

1) $a-b$ 2) $a+b$ 3) $a^2-b^2$ 4) 1

**6. ஒரு நிரல் அணியின், நிரை நிரல் மாற்று அணி**

1) அலகு அணி 2) மூலைவிட்ட அணி 3) நிரல் அணி 4) நிரை அணி

**7. $\Delta LMN$–ல் $\angle L = 60°$, $\angle M = 50°$ மேலும் $\Delta LMN \sim \Delta PQR$ எனில் $\angle R$–ன் மதிப்பு**

1) 40° 2) 70° 3) 30° 4) 110°

**8. படத்தில் உள்ளவாறு O–வை மையமாகக் கொண்ட வட்டத்தின் P–ல் தொடுகோடு PR எனில், $\angle POQ$ ஆனது**




1) 120°
2) 100°
3) 110°
4) 90°

**9. $x = 11$ எனக் கொடுக்கப்பட்ட நேர்க்கோட்டின் சமன்பாடானது**

1) $x$–அச்சுக்கு இணை 2) y–அச்சுக்கு இணை
3) ஆதிப்புள்ளி வழிச்செல்லும் 4) (0, 11) என்ற புள்ளி வழிச்செல்லும்

**10. $\tan\theta + \cot\theta = 2$ எனில் $\tan^2\theta + \cot^2\theta$-ன் மதிப்பு**

1) 0 2) 1 3) 2 4) 4

**11. 24 செ.மீ உயரமும், 6 செ.மீ ஆரமும் உடைய களிமண்ணினால் செய்யப்பட்ட ஒரு கூம்பினை ஒரு சிறுமி கோளமாக மாற்றினால், கோளத்தின் ஆரம்**

1) 24 செ.மீ 2) 12 செ.மீ 3) 6 செ.மீ 4) 48 செ.மீ



Kindly send me your study materials to email id - padasalai.net@gmail.com

**12.** $r_1$ அலகுகள் ஆரமுள்ள ஒரு கோளப்பந்து உருக்கப்பட்டு $r_2$ அலகுகள் ஆரமுடைய 8-சம கோள பந்துகளாக ஆக்கப்படுகிறது எனில் $r_1:r_2$

1) 2 : 1  2) 1 : 2  3) 4 : 1  4) 1 : 4

**13.** 100 தரவுப் புள்ளிகளின் சராசரி 40 மற்றும் திட்டவிலக்கம் 3 எனில் விலக்கங்களின் வர்க்கக் கூடுதலானது

1) 40000  2) 160900  3) 160000  4) 30000

**14.** ஆங்கில எழுத்துக்கள் {a, b, c, ......., z} யிலிருந்து ஓர் எழுத்து சமவாய்ப்பு முறையில் தேர்வு செய்யப்படுகிறது. அந்த எழுத்து 4-க்கு முந்தைய எழுத்துக்களில் ஒன்றாக இருப்பதற்கான நிகழ்தகவு

1) $\frac{12}{13}$  2) $\frac{1}{13}$  3) $\frac{23}{26}$  4) $\frac{3}{26}$

## பகுதி - II

**குறிப்பு: எவையேனும் 10 வினாக்களுக்கு விடையளிக்க. வினா எண் 28-க்கு கட்டாயமாக விடையளிக்கவும். 10×2=20**

15. A×B = {(3, 2) (3, 4) (5, 2) (5, 4)} எனில், A மற்றும் B–ஐ காண்க.
16. $f : N \to N$ என்ற சார்பு $f(m) = m^2+m+3$ என வரையறுக்கப்பட்டால் அது ஒன்றுக்கு ஒன்றான சார்பு எனக் காட்டுக.
17. m மற்றும் n இயல் எண்கள் எனில், எந்த m– ன் மதிப்புகளுக்கு $2^n \times 5^m$ என்ற எண் 5 என்ற இலக்கத்தைக் கொண்டு முடியும்?
18. ஒரு தொடர் வரிசையின் பொது உறுப்பு $a_n = \begin{cases} n^2; & n \text{ ஒரு ஒற்றை எண்} \\ \frac{n^2}{2}; & n \text{ ஒரு இரட்டை எண்} \end{cases}$ எனில் 3-வது மற்றும் 4–வது உறுப்புகளைக் காண்க.
19. $1^2 + 2^2 + 3^2 + ..... + 10^2$– ன் மதிப்பு காண்க. இதிலிருந்து $2^2 + 4^2 + 6^2 + ..... + 20^2$-ன் மதிப்பு காண்க.
20. $9x^2 + 3kx + 4 = 0$ என்ற இருபடிச்சமன்பாட்டின் மூலங்கள் மெய் மற்றும் சமம் எனில் k-ன் மதிப்பு காண்க.
21. $A = \begin{pmatrix} \sqrt{7} & -3 \\ -\sqrt{5} & 2 \\ \sqrt{3} & -5 \end{pmatrix}$ எனில் –A-யின் நிரைநிரல் மாற்று அணியைக் காண்க.
22. பின்வருவனவற்றில் ΔABC-யில் AD ஆனது, ∠Aயின் இருசமவெட்டி ஆகுமா என சோதிக்கவும். AB = 5 செ.மீ, AC = 10 செ.மீ, BD = 1.5 செ.மீ. மற்றும் CD = 3.5 செ.மீ,
23. (14, 10) மற்றும் (14, –6) ஆகிய புள்ளிகளை இணைக்கும் நேர்க்கோட்டின் சாய்வைக் காண்க.
24. நிரூபிக்கவும்: $\sqrt{\frac{1+\sin\theta}{1-\sin\theta}} = \sec\theta + \tan\theta$
25. ஒரு கோளத்தின் புறப்பரப்பு 154 ச.மீ எனில் அதன் விட்டம் காண்க.
26. ஒரு திண்ம அரைக்கோளத்தின் அடிப்பரப்பு 1386 ச.மீ எனில் அதன் புறப்பரப்பினைக் காண்க.
27. கீழ்க்காணும் தரவுகளுக்கு வீச்சு மற்றும் வீச்சுக் கெழுவைக் காண்க. 63, 89, 98, 125, 79, 108, 117, 68.
28. ஒரு உள்ளீடற்ற உருளையின் உயரம், உட்புற மற்றும் வெளிப்புற ஆரங்கள் முறையே 9 செ.மீ, 3 செ.மீ, மற்றும் 5 செ.மீ, ஆகும். உருளையை உருவாக்கத் தேவைப்படும் இரும்பின் கன அளவினைக் காண்க.

## பகுதி - III

**குறிப்பு: எவையேனும் 10 வினாக்களுக்கு விடையளிக்க. வினா எண் 42-க்கு கட்டாயமாக விடையளிக்கவும். 10×5=50**

29. A என்பது 8-ஐ விட குறைவான இயல் எண்களின் கணம், B என்பது 8-ஐ விட குறைவான பகா எண்களின் கணம், மற்றும் C என்பது இரட்டைப்படை பகா எண்களின் கணம் எனில், $(A \cap B) \times C = (A \times C) \cap (B \times C)$ சரிபார்க்கவும்.
30. A = {1, 2, 3, 4} மற்றும் B = {2, 5, 8, 11, 14} என்பன இரு கணங்கள் என்க. $f : A \to B$ எனும் சார்பு $f(x) = 3x - 1$ எனக் கொடுக்கப்பட்டுள்ளது. இச்சார்பினை i) அம்புக்குறிபடம் ii) அட்டவணை iii) வரிசை சோடிகளின் கணம் iv) வரைபடம் ஆகியவற்றால் குறிக்கவும்.
31. 100- க்கும் 1000- க்கும் இடையே 11-ஆல் வகுபடும் அனைத்து இயல் எண்களின் கூடுதல் காண்க.
32. தீர்க்க: $6x + 2y - 5z = 13;\ 3x + 3y - 2z = 13;\ 7x + 5y - 3z = 26$

Kindly send me your study materials to email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



33. பின்வரும் பல்லுறுப்புக் கோவைகளின் மீ.பொ.வ காண்க. $x^4 + 3x^3 - x - 3,\ x^3 + x^2 - 5x + 3$

34. $\frac{x^2}{y^2} - \frac{10x}{y} + 27 - \frac{10y}{x} + \frac{y^2}{x^2}$ என்ற கோவையின் வர்க்கமூலம் காண்க.

35. $A = \begin{pmatrix} 1 & 2 & 1 \\ 2 & -1 & 1 \end{pmatrix}$ மற்றும் $B = \begin{pmatrix} 2 & -1 \\ -1 & 4 \\ 0 & 2 \end{pmatrix}$ எனில் $(AB)^T = B^T.A^T$ என்பதைச் சரிபார்க்க.

36. கோண இருசமவெட்டி தேற்றத்தினை எழுதி நிறுவுக.

37. $(-4, -2), (-3, k), (3, -2)$ மற்றும் $(2, 3)$ ஆகியவற்றை முனைகளாகக் கொண்ட நாற்கரத்தின் பரப்பளவு 28 ச.அலகுகள் எனில் k-யின் மதிப்பு காண்க.

38. 60 மீ. உயரமுள்ள கோபுரத்தின் உச்சியிலிருந்து செங்குத்தாக உள்ள ஒரு விளக்குக் கம்பத்தின் உச்சி மற்றும் அடியின் இறக்கக் கோணங்கள் முறையே 38° மற்றும் 60° எனில், விளக்குக் கம்பத்தின் உயரத்தைக் காண்க. ($\tan 38° = 0.7813$, $\sqrt{3} = 1.732$)

39. விட்டம் 20 செ.மீ உள்ள ஓர் உருளை வடிவக் கண்ணாடி குவளையில் 9 செ.மீ உயரத்திற்கு நீர் உள்ளது. ஆரம் 5 செ.மீ மற்றும் உயரம் 4 செ.மீ உடைய ஓர் சிறிய உலோக உருளை நீரில் முழுமையாக மூழ்கும் போது ஏற்படும் நீரின் உயர்வைக் கணக்கிடுக.

40. 7 போட்டிகளில் ஒரு கிரிக்கெட் வீரர் எடுத்த ஓட்டங்கள் முறையே 70, 80, 60, 50, 40, 90, 95. திட்ட விலக்கம் காண்க.

41. இரண்டு சீரான பகடைகள் முறையாக ஒரே நேரத்தில் உருட்டப்படுகிறது.
   i) இரண்டு பகடைகளிலும் ஒரே முகமதிப்பு கிடைக்க,
   ii) முகமதிப்புகளின் பெருக்கற்பலன் பகா எண்ணாகக் கிடைக்க,
   iii) முகமதிப்புகளின் கூடுதல் பகா எண்ணாகக் கிடைக்க,
   iv) முகமதிப்புகளின் கூடுதல் 1-ஆக இருக்க,
   ஆகிய நிகழ்ச்சிகளின் நிகழ்தகவுகளைக் காண்க.

42. AB என்ற நேர்க்கோடு ஆய அச்சுகளை A மற்றும் B புள்ளிகளில் வெட்டுகிறது. AB-ன் நடுப்புள்ளி (2, 3) எனில் AB-ன் சமன்பாட்டினைக் காண்க.




## பகுதி - IV

**குறிப்பு: அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.** **2×8=16**

43. அ) கொடுக்கப்பட்ட முக்கோணம் ABC–யின் ஒத்த பக்கங்களின் விகிதம் $\frac{6}{5}$ என அமையுமாறு ஒரு வடிவொத்த முக்கோணம் வரைக. (அளவு காரணி $\frac{6}{5}$)

**(அல்லது)**

ஆ) 5 செ.மீ ஆரமுள்ள வட்டத்தின் மையத்திலிருந்து 10 செ.மீ தொலைவிலுள்ள புள்ளியிலிருந்து வட்டத்திற்குத் தொடுகோடுகள் வரையவும். மேலும் தொடுகோடுகளின் நீளங்களைக் கணக்கிடுக.

44. அ) $x^2 - 8x + 16 = 0$ என்ற இருபடிச் சமன்பாட்டின் வரைபடம் வரைந்து தீர்வின் தன்மையைக் கூறுக.

**(அல்லது)**

ஆ) ஒரு துணிக்கடையானது தனது வாடிக்கையாளர்களுக்கு வாங்கும் ஒவ்வொரு பொருளின் மீதும் 50% தள்ளுபடியை அறிவிக்கிறது. குறித்த விலைக்கும் தள்ளுபடிக்குமான வரைபடம் வரைக. மேலும்,
   i) வரைபடத்திலிருந்து ஒரு வாடிக்கையாளர் ₹ 3250 ஐ தள்ளுபடியாகப் பெற்றால் குறித்த விலையைக் காண்க.
   ii) குறித்த விலையானது ₹ 2500 எனில், தள்ளுபடியைக் காண்க.

★★★



Kindly send me your study materials to email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



# STAGE - II


| அலகு | பாடத் தலைப்பு | பக்க எண் |
|---|---|---|
| 1 | உறவுகளும் சார்புகளும் | 102 |
| 2 | எண்களும் தொடர்வரிசைகளும் | 106 |
| 3 | இயற்கணிதம் | 112 |
| 4 | வடிவியல் | 124 |
| 5 | ஆயத்தொலை வடிவியல் | 130 |
| 6 | முக்கோணவில் | 141 |
| 7 | அளவியல் | 144 |
| 8 | புள்ளியியலும் நிகழ்தகவும் | 148 |


Kindly send me your study materials to email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



# 1 உறவுகளும் சார்புகளும்

**2 மதிப்பெண்கள்** STAGE 2

**1. $f(x) = 3x - 2$ , $g(x) = 2x + k$ மற்றும் $fog = gof$, எனில், $k$ யின் மதிப்பைக் காண்க.**

**தீர்வு:**

$f(x) = 3x - 2$ $\quad$ $g(x) = 2x + k$

$fog = f[g(x)]$ $\quad$ $gof = g[f(x)]$

$= f[2x + k)]$ $\quad$ $gof = g[3x - 2]$

$= 3(2x + k) - 2$ $\quad$ $= 2(3x - 2) + k$

$= 6x + 3k - 2$ $\quad$ $= 6x - 4 + k$

$fog = gof \Rightarrow 6x + 3k - 2 = 6x - 4 + k$

$\Rightarrow 3k - k = -4 + 2 \Rightarrow 2k = -2 \Rightarrow k = -1$

**2. $fof(k) = 5$, $f(k) = 2k - 1$ எனில், $k$-யின் மதிப்பைக் காண்க.**

**தீர்வு:**

$$\begin{aligned} fof(k) &= 5 \\ fo(2k-1) &= 5 \\ (2x-1)\text{ o }(2k-1) &= 5 \\ 2(2k-1)-1 &= 5 \\ 4k-2 &= 5+1 \\ 4k-2 &= 6 \\ 4k &= 8 \\ k &= 2 \end{aligned}$$

**3. கீழேக் கொடுக்கப்பட்டுள்ள $f$ மற்றும் $g$ எனும் சார்புகளைப் பயன்படுத்தி $fog$ மற்றும் $gof$-ஐக் காண்க. $fog = gof$ என்பது சரியா சோதிக்க.**

**(i) $f(x) = x - 6$, $g(x) = x^2$**

**(ii) $f(x) = \frac{2}{x}$, $g(x) = 2x^2 - 1$**

**(iii) $f(x) = \frac{x+6}{3}$, $g(x) = 3 - x$**

**(iv) $f(x) = 3 + x$, $g(x) = x - 4$**

**(v) $f(x) = 4x^2 - 1$, $g(x) = 1 + x$**

**தீர்வு:**

i) $f(x) = x - 6$, $g(x) = x^2$

$(f\text{ o }g)(x) = f(g(x)) = f(x^2) = x^2 - 6$

$(g\text{ o }f)(x) = g(f(x)) = g(x - 6)$

$= (x - 6)^2 = x^2 - 12x + 36$

$\therefore fog \neq gof$

**மாற்று முறை:**

$f\text{ o }g = (x - 6)\text{ o }(x^2) = x^2 - 6$

$g\text{ o }f = x^2\text{ o }(x - 6) = (x - 6)^2$

$\therefore fog \neq gof$

இதே போல் மற்ற கணக்குகளையும் செய்து பார்க்கலாம்.

**ii) $f(x) = \frac{2}{x}$, $g(x) = 2x^2 - 1$**

$(fog)(x) = f(g(x)) = f(2x^2 - 1) = \frac{2}{2x^2 - 1}$

$(gof)(x) = g(f(x))$

$= g\left(\frac{2}{x}\right) = 2\left(\frac{2}{x}\right)^2 - 1$

$= 2\left(\frac{4}{x^2} - 1\right) = \frac{8}{x^2} - 2$

$\therefore fog \neq gof$

**iii) $f(x) = \frac{x+6}{3}$, $g(x) = 3 - x$**

$(fog)(x) = f(g(x)) = f(3 - x) = \frac{(3-x)+6}{3}$

$= \frac{9-x}{3}$

$(gof)(x) = g(f(x)) = g\left(\frac{x+6}{3}\right)$

$= 3 - \frac{x+6}{3} = \frac{9-x-3}{3} = \frac{6-x}{3}$

$\therefore fog \neq gof$

**iv) $f(x) = 3 + x$, $g(x) = x - 4$**

$(fog)(x) = f(g(x)) = f(x - 4)$

$= 3 + (x - 4) = x - 1$

$(gof)(x) = g(f(x)) = g(3 + x)$

$= 3 + x - 4 = x - 1$

$\therefore fog = gof$

**v) $f(x) = 4x^2 - 1$, $g(x) = 1 + x$**

$(fog)(x) = f(g(x))$

$= f(1 + x)$

$= 4(1 + x^2 + 2x) - 1$

$= 4x^2 + 8x + 3$

$(gof)(x) = g(f(x))$

$= g(4x^2 - 1)$

$= 1 + 4x^2 - 1$

$= 4x^2$

$\therefore fog \neq gof$



Kindly send me your study materials to email id - padasalai.net@gmail.com

**4. $fog = gof$ எனில் $k$-யின் மதிப்பைக் காண்க.**

**(i) $f(x) = 3x + 2,\ g(x) = 6x - k$**

**(ii) $f(x) = 2x - k,\ g(x) = 4x + 5$**

**தீர்வு:**

i) $f(x) = 3x + 2 \quad g(x) = 6x - k$

$$\begin{aligned} (3x+2) \text{ o } (6x-k) &= (6x-k) \text{ o } (3x+2) \\ 3(6x-k)+2 &= 6(3x+2)-k \\ 18x - 3k + 2 &= 18x + 12 - k \\ -3k + k &= 12 - 2 \\ -2k &= 10 \\ k &= \frac{-10}{2} \\ k &= -5 \end{aligned}$$

ii) $f(x) = 2x - k \quad g(x) = 4x + 5$

$$\begin{aligned} fog &= gof \\ (2x-k) \text{ o } (4x+5) &= (4x+5) \text{ o } (2x-k) \\ 2(4x+5)-k &= 4(2x-k)+5 \\ 8x + 10 - k &= 8x - 4k + 5 \\ -k + 4k &= 5 - 10 \\ 3k &= -5 \\ k &= \frac{-5}{3} \end{aligned}$$

**5. $f(x) = 2x - 1,\ g(x) = \frac{x+1}{2}$ எனில், $fog = gof = x$ எனக் காட்டுக.**

**தீர்வு:**

$$\begin{aligned} fog &= gof \\ (2x-1) \text{ o } \left(\frac{x+1}{2}\right) &= \left(\frac{x+1}{2}\right) \text{ o } (2x-1) \\ 2 = \left(\frac{x+1}{2}\right) - 1 &= \frac{2x - 1 + 1}{2} \\ x + 1 - 1 &= \frac{2x}{2} \\ x &= x \end{aligned}$$

$\therefore fog = gof = x$

சரிபார்க்கப்பட்டது.

**6. $f(x) = x^2 - 1,\ g(x) = x - 2$ மற்றும் $gof(a) = 1$ எனில், $a$-ஐக் காண்க.**

**தீர்வு:**

$$\begin{aligned} g \text{ o } f &= 1 \\ (x-2) \text{ o } (a^2-1) &= 1 \\ a^2 - 1 - 2 &= 1 \\ a^3 - 3 &= 1 \\ a^2 &= 4 \\ \therefore \quad a &= \pm 2 \end{aligned}$$

**5 மதிப்பெண்கள்** **STAGE 2**

**1. சார்பு $f: R \to R$ ஆனது**

$$f(x) = \begin{cases} 2x+7; & x < -2 \\ x^2 - 2; & -2 \le x < 3 \\ 3x - 2; & x \ge 3 \end{cases}$$

**என வரையறுக்கப்பட்டால்**

**(i) $f(4)$ (ii) $f(-2)$ (iii) $f(4) + 2f(1)$**

**(iv) $\frac{f(1) - 3f(4)}{f(-3)}$ ஆகியவற்றின் மதிப்புகளைக் காண்க.**

**தீர்வு:**




$f(x) = 2x+7 \qquad f(x) = x^2-2 \qquad f(x) = 3x-2$

அருகில் காட்டியுள்ளபடி சார்பு $f$ ஆனது I, II, III என்ற இடைவெளிகளில் வரையறுக்கப் படுகிறது.

$x = a$ என்ற கொடுக்கப்பட்ட மதிப்பிற்கு $a$ இருக்கும் இடைவெளியைக் கண்டுபிடித்து, அந்த இடைவெளியில் $f(a)$-ஐக் காண வேண்டும்.

**i.** $x = 4$ ஆனது மூன்றாவது இடைவெளியில் உள்ளதை நாம் காணலாம்.
இங்கு, $f(x) = 3x - 2; f(4) = 3(4) - 2 = 10$

**ii.** $x = -2$ ஆனது இரண்டாவது இடைவெளியில் உள்ளதை நாம் காணலாம்.
எனவே, $f(x) = x^2 - 2; f(-2) = (-2)^2 - 2 = 2$

**iii.** (i)-லிருந்து, $f(4) = 10$. $f(1)$-ன் மதிப்பைக் காண, $x = 1$ ஆனது இரண்டாவது இடைவெளியில் உள்ளது. ஆகையினால் $f(x) = x^2 - 2$ லிருந்து, $f(1) = 1^2 - 2 = -1$
எனவே, $f(4) + 2f(1) = 10 + 2(-1) = 8$

**iv.** $f(1) = -1, f(4) = 10$. எனக் கண்டோம். $f(-3)$ -யைக் காண $x = -3$ ஆனது ஒன்றாவது இடைவெளியில் உள்ளதைக் காணலாம். ஆகையினால் $f(x) = 2x + 7$,
எனவே, $f(-3) = 2(-3) + 7 = 1$

எனவே, $\frac{f(1) - 3f(4)}{f(-3)} = \frac{-1 - 3(10)}{1} = -31$

**2. $f$ என்ற சார்பானது**

$$f(x) = \begin{cases} x+2; & x > 1 \\ 2; & -1 \le x \le 1 \\ x - 1 & -3 < x < -1 \end{cases}$$

**என வரையறுக்கப்பட்டால்**

www.Padasalai.Net www.CBSEtips.in



**(i) $f(3)$ (ii) $f(0)$ (iii) $f(-1\ 5)$ (iv) $f(2)+f(-2)$ ஆகியவற்றின் மதிப்புகளைக் காண்க.**

**தீர்வு:**

i. $f(3) = x + 2 = 3 + 2 = 5$

ii. $f(0) = 2$

iii. $f(-1.5) = x - 1 = -1.5 - 1 = -2.5$

iv. $f(2) + f(-2)$

$= [x + 2] + [x - 1]$

$= [2 + 2] + [-2 - 1] = 4 + [-3] = 4 - 3 = 1$

---

**3. $f : [-5, 9] \to R$ என்ற சார்பானது பின்வருமாறு வரையறுக்கப்படுகிறது**

$$f(x) = \begin{cases} 6x+1; & -5 \le x < 2 \\ 5x^2-1; & 2 \le x < 6 \\ 3x-4; & 6 \le x \le 9 \end{cases}$$ **என**

**வரையறுக்கப்படுகிறது எனில், பின்வருவனற்றைக் காண்க.**

**(i) $f(-3)+f(2)$ (ii) $f(7)-f(1)$**

**(iii) $2f(4)+f(8)$ (iv) $\dfrac{2f(-2)-f(6)}{f(4)+f(-2)}$**

**தீர்வு:**

i. $f(-3) + f(2)$

$= [6x + 1] + [5x^2 - 1]$

$= [6(-3) + 1] + [5(2)^2 - 1]$

$= [-18 + 1] + [5(4) -1] = -17 + [20 - 1]$

$= -17 + 19 = 2$

ii. $f(7) - f(1)$

$= [3x - 4] - [6x + 1]$

$= [3(7) - 4] - [6(1) + 1]$

$= [21 - 4] - [6 + 1] = 17 - 7 = 10$

iii. $2f(4) + f(8)$

$= 2[5x^2 - 1] + [3x - 4]$

$= 2[5(4)^2 - 1] + [3(8) - 4]$

$= 2[5(16) -1] + [24 - 4]$

$= 2[80 - 1] + [20] = 2[79] + 20$

$= 158 + 20 = 178$

iv. $\dfrac{2f(-2)-f(6)}{f(4)+f(-2)}$

$= \dfrac{2[6x+1]-[3x-4]}{[5x^2-1]+[6x+1]}$

$= \dfrac{2[6(-2)+1]-[3(6)-4]}{[5(4)^2-1]+[6(-2)+1]}$

$= \dfrac{2[-12+1]-[18-4]}{[5(16)-1]+[-12+1]}$

$= \dfrac{2[-11]-[14]}{[80-1]+[-11]}$

$= \dfrac{-22-14}{79-11} = \dfrac{-36}{68} = \dfrac{-9}{17}$

---

**4. புவியீர்ப்பு விசையின் காரணமாக $t$ வினாடிகளில் ஒரு பொருள் கடக்கும் தூரமானது $S(t) = \frac{1}{2}gt + at + b$ எனக் கொடுக்கப்பட்டுள்ளது. இங்கு $a$, $b$ ஆகியவை மாறிலிகள் ($g$ ஆனது புவியீர்ப்பு விசையின் காரணமாக ஏற்படும் முடுக்கம்) $S(t)$ ஆனது ஒன்றுக்கொன்றான சார்பாகுமா என ஆராய்க.**

**தீர்வு:**

$s(t) = \frac{1}{2}gt^2 + at + b$

$s(t)$ என்பது 1 - 1 ஆன சார்பு என நிரூபிக்க வேண்டியிருப்பதால்

$s(t_1) = s(t_2)$

$\frac{1}{2}gt_1^2 + at_1 + b = \frac{1}{2}gt_2^2 + at_2 + b$

$\frac{1}{2}gt_1^2 + at_1 + b - \frac{1}{2}gt_2^2 - at_2 - b = 0$

$\frac{1}{2}g(t_1^2 - t_2^2) + a(t_1 - t_2) = 0$

$\Rightarrow \frac{1}{2}g[(t_1 - t_2)(t_1 + t_2) + a(t_1 - t_2)] = 0$

$(t_1 - t_2)[\frac{1}{2}g(t_1 + t_2) + a] = 0$

$\Rightarrow t_1 - t_2 = 0$

$[\because \frac{1}{2}g[(t_1 + t_2) + a \neq 0]$

$t_1 = t_2$

$\therefore s(t)$ என்பது 1 - 1 ஆன சார்பாகும்.

---

**5. '$t$' என்ற சார்பானது செல்சியஸில் ($C$) உள்ள வெப்பநிலையையும், பாரன்ஹீட்டில் ($F$) உள்ள வெப்பநிலையையும் இணைக்கும் சார்பாகும். மேலும் அது $t(C) = F$ என வரையறுக்கப்பட்டால், (இங்கு $F = \frac{9}{5}C + 32$).**

**(i) $t(0)$ (ii) $t(28)$ (iii) $t(-10)$**

**(iv) $t(C) = 212$ ஆக இருக்கும்போது $C$-ன் மதிப்பு**

**(v) செல்சியஸ் மதிப்பும் பாரன்ஹீட் மதிப்பும் இருக்கும்போது வெப்பநிலை ஆகியவற்றைக் கண்டறிக.**

**தீர்வு:**

$t(c) = F = \frac{9}{5}C + 32$



Kindly send me your study materials to email id - padasalai.net@gmail.com

i. $t(0) = \frac{9}{5}(0) + 32 = 32°F$

ii. $t(28) = \frac{9}{5}(28) + 32 = 50.4 + 32 = 82.4°F$

iii. $t(-10) = \frac{9}{5}(-10) + 32 = -18 + 32 = 14°F$

iv. $t(c) = 212$ ஆக இருக்கும்பொழுது

$$212 = \frac{9}{5}C + 32 \Rightarrow \frac{9}{5}C + 32 = 212$$

$$\frac{9}{5}C = 212 - 32 \Rightarrow \frac{9}{5}C = 180$$

$$\Rightarrow \quad C = 180 \times \frac{5}{9} = 100°C$$

v. செல்சியஸ் மதிப்பு = பாரன்ஹீட் மதிப்பு

$$C = \frac{9}{5}C + 32 \Rightarrow 5C = 9C + 160$$

$$\Rightarrow 9C - 5C = -160 \Rightarrow 4C = -160$$

$$\Rightarrow \quad C = \frac{-160}{4} = -40°$$

---

**6. $f(x) = 2x + 3$, $g(x) = 1 - 2x$ மற்றும் $h(x) = 3x$ எனில் $fo(goh) = (fog)oh$ என நிறுவுக.**

**தீர்வு:**

$f(x) = 2x + 3$, $g(x) = 1 - 2x$, $h(x) = 3x$

இப்பொழுது, $(fog)(x) = f(g(x))$

$= f(1 - 2x)$

$= 2(1 - 2x) + 3$

$= 2 - 4x + 3$

$= 5 - 4x$

மேலும் $(fog) \text{ o } h(x) = (fog)(h(x)) = (fog)(3x)$

$= 5 - 4(3x)$

$= 5 - 12x$ ---- (1)

$(goh)(x) = g(h(x)) = g(3x) = 1 - 2(3x)$

$= 1 - 6x$

மேலும் $fo(goh)(x) = f(1 - 6x)$

$= 2(1 - 6x) + 3$

$= 2 - 12x + 3$

$= 5 - 12x$ ---- (2)

(1) மற்றும் (2) -லிருந்து நமக்குக் கிடைப்பது,

$(fog)oh = fo(goh)$

---

**7. $f(x) = 3x + 1$ $g(x) = x + 3$ ஆகியவை இரு சார்புகள். மேலும் $gff(x) = fgg(x)$ எனில் $x$ ஐக் காண்க.**

**தீர்வு:**

$gff(x) = g[f\{f(x)\}] = g[f(3x + 1)]$

$= g[3(3x + 1) + 1] = g(9x + 4)$

$g(9x+4) = [(9x + 4) + 3] = 9x + 7$

$fgg(x) = f[g\{g(x)\}] = f[g(x+3)]$

$= f[(x+3) + 3] = f(x + 6)$

$f(x+6) = [3(x+6) + 1] = 3x + 19$

$gff(x) = fgg(x)$

எனவே $9x + 7 = 3x + 19$

$9x - 3x = 12 \Rightarrow 6x = 12 \Rightarrow x = 3$

---

**8. கொடுக்கப்பட்ட $f(x), g(x), h(x)$ ஆகியவற்றைக் கொண்டு $(fog)oh = fo(goh)$ எனக் காட்டுக.**

**(i) $f(x) = x - 1$, $g(x) = 3x + 1$ மற்றும் $h(x) = x^2$**

**(ii) $f(x) = x^2$, $g(x) = 2x$ மற்றும் $h(x) = x + 4$**

**(iii) $f(x) = x - 4$, $g(x) = x^2$ மற்றும் $h(x) = 3x - 5$**

**தீர்வு:**

i. $(fog)oh = fo(goh)$

$[(x-1) \text{ o } (3x+1)] \text{ o } x^2 = (x-1) \text{ o } [(3x+1) \text{ o } x^2]$

$[3x + 1 - 1] \text{ o } x^2 = (x - 1) \text{ o } [3x^2 + 1]$

$[3x] \text{ o } x^2 = 3x^2 + 1 - 1$

$3x^2 = 3x^2$

$(fog)oh = fo(goh)$

சரிபார்க்கப்பட்டது.

---

ii. $(fog)oh = fo(goh)$

$[(x-4) \text{ o } x^2] \text{ o } (3x-5) = (x-4) \text{ o } [x^2 \text{o } (3x-5)]$

$[x^2 - 4] \text{ o } [3x - 5] = (x - 4) \text{ o } [(3x - 5)^2]$

$[3x - 5]^2 - 4 = [3x - 5]^2 - 4$

$[\because (a-b)2 = a2 - 2ab + b2]$

$(fog)oh = fo(goh)$

சரிபார்க்கப்பட்டது.

---

iii. $(fog)oh = fo(goh)$

$[(x^2 \text{ o } 2x] \text{ o } (x + 4) = (x^2 \text{ o } [2x \text{ o } (x + 4)]$

$[2x]^2 \text{ o } (x + 4] = x^2 \text{ o } [2(x + 4)]$

$[2(x + 4)]^2 = [2(x + 4)]^2$

$(fog)oh = fo(goh)$

சரிபார்க்கப்பட்டது.

★★★

# 2 எண்களும் தொடர்வரிசைகளும்

## 2 மதிப்பெண்கள் — STAGE 2

**1. 210 மற்றும் 55 ஆகியவற்றின் மீப்பெரு பொது வகுத்தியை $55x - 325$ என்ற வடிவில் எழுதினால் $x$-யின் மதிப்பு காண்க.**

**தீர்வு:**

யூக்ளிடின் வகுத்தல் வழிமுறையைப் பயன்படுத்தி கொடுக்கப்பட்ட எண்களுக்கு மீ.பொ.வ காண்போம்.

$$210 = 55 \times 3 + 45$$
$$55 = 45 \times 1 + 10$$
$$45 = 10 \times 4 + 5$$
$$10 = 5 \times 2 + 0$$

மீதி = 0

ஆகவே, கடைசி படிநிலையின் வகுத்தி 5 ஆனது 210 மற்றும் 55-யின் மீப்பெரு பொது வகுத்தியாகும்.

மீப்பெரு பொது வகுத்தி $55x - 325 = 5$ எனக் கொடுக்கப்பட்டுள்ளது.

$$55x = 330$$
$$x = 6$$

**2. யூக்ளிடின் வகுத்தல் வழிமுறையைப் பயன் படுத்திப் பின்வருவனவற்றின் மீ.பொ.வ காண்க.**

**(i) 340 மற்றும் 412**
**(iii) 10224 மற்றும் 9648**
**(ii) 867 மற்றும் 255**

**தீர்வு:**

யூக்ளிடின் தேற்றப்படி

$a = bq + r$

i. 340 மற்றும் 412-க்கு மீ.பொ.வ காண வேண்டும்.

$$412 = 340(1) + 72 \qquad 72 \neq 0$$
$$340 = 72(4) + 52 \qquad 52 \neq 0$$
$$72 = 52(1) + 20 \qquad 20 \neq 0$$
$$52 = 20(2) + 12 \qquad 12 \neq 0$$
$$20 = 12(1) + 8 \qquad 8 \neq 0$$
$$12 = 8(1) + 4 \qquad 4 \neq 0$$
$$8 = 4(2) + 0 \qquad \text{மீதி} = 0$$

கடைசி வகுத்தி 4 எனில் மீதி = 0

$\therefore$ 340 மற்றும் 412 இன் மீ.பொ.வ 4

**ii. 867 மற்றும் 255**

$$867 = 255(3) + 102 \qquad 102 \neq 0$$
$$255 = 102(2) + 51 \qquad 51 \neq 0$$
$$102 = 51(2) + 0 \qquad \text{மீதி} = 0$$

$\therefore$ 867 மற்றும் 255 இன் மீ.பொ.வ = 51

**iii. 10224 மற்றும் 9648**

$$10224 = 9648(1) + 576 \qquad 576 \neq 0$$
$$9648 = 576(16) + 432 \qquad 432 \neq 0$$
$$576 = 432(1) + 144 \qquad 144 \neq 0$$
$$432 = 144(3) + 0 \qquad \text{மீதி} = 0$$

$\therefore$ 10224 மற்றும் 9648 இன் மீ.பொ.வ = 144

**3. 32 மற்றும் 60 ஆகியவற்றின் மீப்பெரு பொது வகுத்தி $d$ என்க. $d = 32x + 60y$ எனில் $x$ மற்றும் $y$ என்ற முழுக்களைக் காண்க. .**

**தீர்வு:**

யூக்ளிடின் தேற்றப்படி

$$a = bq + r$$
$$60 = 32 \times 1 + 28$$
$$\Rightarrow \quad 32 = 28 \times 1 + 4$$
$$28 = 4 \times 7 + 0$$

$\therefore$ 32, 60 ன் மீ.பொ.வ 4

அதாவது $d = 4$ மேலும் $d = 32x + 60y$

$$\Rightarrow \quad 4 = 32x + 60y$$
$$4 = 32(2) + 60(-1)$$

$\Rightarrow \therefore x = 2, y = -1$ ஆகும்.

**4. 70004 மற்றும் 778 ஆகிய எண்களை 7 ஆல் வகுக்கக் கிடைக்கும் மீதியைக் காண்க.**

**தீர்வு:**

70000 ஆனது 7 ஆல் வகுபடும் என்பதால்

$$70000 \equiv 0 \ (\text{மட்டு } 7)$$
$$70000 + 4 \equiv 0 + 4 \ (\text{மட்டு } 7)$$
$$70004 \equiv 4 \ (\text{மட்டு } 7)$$

எனவே,

70004 -ஐ 7 ஆல் வகுக்கக் கிடைக்கும் மீதி 4

$\because$ 777 ஆனது 7 ஆல் வகுபடும் என்பதால்

$$777 \equiv 0 \ (\text{மட்டு } 7)$$
$$777 + 1 \equiv 0 + 1 \ (\text{மட்டு } 7)$$
$$778 \equiv 1 \ (\text{மட்டு } 7)$$

எனவே,

778-ஐ 7ஆல் வகுக்கக் கிடைக்கும் மீதி 1.



Kindly send me your study materials to email id - padasalai.net@gmail.com

**5. 15 ≡ 3 (மட்டு $d$) என்றவாறு அமையும் $d$-யின் மதிப்பை தீர்மானிக்க.**

**தீர்வு:**

$15 \equiv 3$ (மட்டு $d$) என்பதன் பொருள்

$15 - 3 = kd,$

இங்கு $k$ என்பது ஒரு முழு எண்.

$12 = kd$

$d$ ஆனது 12 ஐ வகுக்கும்.

12 இன் வகுத்திகளாவன 1, 2, 3, 4, 6, 12.

$d$ ஆனது 3 ஐ விட அதிகமாக இருக்க வேண்டும், ஏனெனில் மீதி 3 வந்துள்ளது.

எனவே, $d$ -க்கு சாதகமான மதிப்புகள் 4, 6, 12 ஆகும்.

---

**6. பின்வருவனவற்றிற்குப் பொருந்தக்கூடிய குறைந்தபட்ச மிகை $x$-ஐக் காண்க.**

**(i) $67 + x \equiv 1$ (மட்டு 4)**

**(ii) 98 $(x + 4)$ (மட்டு 5)**

**தீர்வு:**

i. $67 + x \equiv 1$ (மட்டு 4)

$67 + x - 1 = 4n$

$66 + x = 4n$

$66 + x$ என்பது 4 ன் மடங்கு.

66 ஐ விட அதிகமான 4 ன் மடங்கு 68.

எனவே $x$ ன் குறைந்தபட்ச மதிப்பு 2.

ii. $98 \equiv (x + 4)$ (மட்டு 5)

$98 - (x+4) = 5n,$

$n$ என்பது ஏதேனும் ஒரு முழுக்கள்.

$94 - x = 5n$

$94 - x$ என்பது 5 இன் மடங்கு.

94 ஐ விடக் குறைவான 5 இன் மடங்கு 90

எனவே $x$ இன் குறைந்தபட்ச மதிப்பு 4.

---

**7. தீர்க்க: $8x \equiv 1$ (மட்டு 11)**

**தீர்வு:**

$8x - 1 = 11n \Rightarrow 8x = 11n + 1 \Rightarrow x = \frac{11n+1}{8}$

$n = 5 \Rightarrow x = 7$

$n = 13 \Rightarrow x = 18$ …….

---

**8. $10^4 \equiv x$ (மட்டு 19) என்றவாறு அமையும் $x$ மதிப்பைக் கணக்கிடுக.**

**தீர்வு:**

$10^2 = 100 \equiv 5$ (மட்டு 19)

$10^1 = (10^2)^2 \equiv 5^2$ (மட்டு 19)

$10^4 = 25$ (மட்டு 19)

$10^4 = 6$ (மட்டு 19)

[என்றவாறு $25 \equiv 6$ (மட்டு 19)] எனவே, $x = 6$

---

**9. $3x \equiv 1$ (மட்டு 15) என்ற சமன்பாட்டிற்கு எத்தனை முழு எண் தீர்வுகள் உள்ளன எனக் காண்க.**

**தீர்வு:**

$3x \equiv 1$ (மட்டு 15) என்பதை

$3x - 1 = 15k$

$k$ என்பது ஏதேனும் ஒரு முழு என எழுதலாம்.

$3x = 15k + 1$

$x = \frac{15k+1}{3}$

$x = 5k + \frac{1}{3}$

$5k$ என்பது ஒரு முழு எண் என்பதால்

$5k + \frac{1}{3}$ என்பது ஒரு முழு எண் அல்ல.

எனவே, இச்சமன்பாட்டிற்கு முழு எண் தீர்வே இல்லை.

---

**10. பின்வரும் சமன்பாடுகளை நிறைவு செய்யக் கூடிய குறைந்தபட்ச மிகை முழு $x$-ன் மதிப்பைக் காண்க.**

**(i) $71 \equiv x$ (மட்டு 8)** **(iv) $96 \equiv \frac{x}{7}$ (மட்டு 5)**

**(ii) $78+x \equiv 3$ (மட்டு 5)** **(v) $5x \equiv 4$ (மட்டு 6)**

**(iii) $89 \equiv (x+3)$ (மட்டு 4)**

**தீர்வு:**

i. $71 \equiv x$ (மட்டு 8)

$\Rightarrow 71 - x = 8k$

$\Rightarrow 64 + 7 - x = 8k$

$\therefore x = 7$

---

ii. **$78 + x \equiv 3$ (மட்டு 5)**

$\Rightarrow 78 + x - 3 = 5k$

$\Rightarrow 75 + x$ என்பது 5 இன் மடங்கு.

$\therefore x = 0$

---

iii. **$89 \equiv (x + 3)$ (மட்டு 4)**

$\Rightarrow 89 - x - 3 = 4k$

$\Rightarrow 86 - x = 4k$

$\Rightarrow 86 - x$ என்பது 4 இன் மடங்கு.

86 ஐ விடக் குறைவான 4 இன் மடங்கு 84

$\therefore x = 2$

---

iv. **$96 \equiv \frac{x}{7}$ (மட்டு 5)**

$96 - \frac{x}{7} = 5k$

$96 - \frac{x}{7}$ என்பது 96 ஐ விட குறைவான 5 இன் மடங்கு 95

$\therefore x = 7$

www.Padasalai.Net www.CBSEtips.in



**v.** $5x \equiv 4$ (மட்டு 6)

$5x - 4 = 6k$

$k = 1$ எனில்,

$5x - 4 = 6$

$x = 2$

**11. தீர்க்க: $5x \equiv 4$ (மட்டு 6)**

**தீர்வு:**

$5x \equiv 4$ (மட்டு 6)

$5x - 4 = 6k$

$5x = 6k + 4$

$x = \frac{6k+4}{5}, k = 1, 6, 11, \ldots.$

$k = 1$ எனில்

$x = \frac{6(1)+4}{5} = \frac{6+4}{5} = \frac{10}{5} = 2$

$k = 6$ எனில்

$x = \frac{6(6)+4}{5} = \frac{36+4}{5} = \frac{40}{5} = 8$

$k = 11$ எனில்

$x = \frac{6(11)+4}{5} = \frac{66+4}{5} = \frac{70}{5} = 14$

$\therefore \quad x = 2, 8, 14, \ldots\ldots$

**12. தீர்க்க: $3x - 2 \equiv 0$ (மட்டு 11)**

**தீர்வு:**

$3x - 2 \equiv 0$ (மட்டு 11)

$3x - 2 = 11k$

$3x = 11k + 2$

$x = \frac{11k+2}{3}, \quad k = 2, 5, 8, \ldots.$

$k = 2$ எனில்

$x = \frac{11(2)+2}{3} = \frac{22+2}{3} = \frac{24}{3} = 8$

$k = 5$ எனில்

$x = \frac{11(5)+2}{3} = \frac{55+2}{3} = \frac{57}{3} = 19$

$k = 8$ எனில்

$x = \frac{11(8)+2}{3} = \frac{88+2}{3} = \frac{90}{3} = 30$

$\therefore \quad x = 8, 19, 30, \ldots\ldots$

**5 மதிப்பெண்கள்** **STAGE 2**

**1. 396, 504, 636 ஆகியவற்றின் மீ.பொ.வ காண்க.** **செப்.21**

**தீர்வு:**

கொடுக்கப்பட்ட மூன்று எண்களின் மீ.பொ.வ காண, நாம் முதலில் முதல் இரு எண்களின் மீ.பொ.வ காண்போம்.

396 மற்றும் 504 ஆகியவற்றின் மீ.பொ.வ காண, யூக்ளிடின் வகுத்தல் வழிமுறையைப் பயன்படுத்த நாம் பெறுவது,

$504 = 396 \times 1 + 108$ இங்கு மீதி $108 \neq 0$

$396 = 108 \times 3 + 72$ இங்கு மீதி $72 \neq 0$

$108 = 72 \times 1 + 36$ இங்கு மீதி $36 \neq 0$

$72 = 36 \times 2 + 0$ இங்கு மீதி $= 0$

எனவே, 396, மற்றும் 504-யின் மீ.பொ.வ 36

636 மற்றும் 36-யின் மீ.பொ.வ காண, யூக்ளிடின் வகுத்தல் வழிமுறையைப் பயன்படுத்த நாம் பெறுவது

$636 = 36 \times 17 + 24$ இங்கு மீதி $24 \neq 0$

$36 = 24 \times 1 + 12$ இங்கு மீதி $12 \neq 0$

$24 = 12 \times 2 + 0.$ இங்கு மீதி $= 0$

எனவே 636 மற்றும் 36-யின் மீ.பொ.வ 12

எனவே 396, 504 மற்றும் 636-யின் மீப்பெரு பொது வகுத்தி 12 ஆகும்.

**2. யூக்ளிடின் வகுத்தல் வழிமுறையைப் பயன்படுத்திப் பின்வருவனவற்றின் மீ.பொ.வ காண்க.**
**84, 90 மற்றும் 120**

**தீர்வு:**

84, 90 மற்றும் 120

யூக்ளிடின் தேற்றப்படி $a = bq + r$

$90 = 84q + r \quad (6 \neq 0)$

$90 = 84 \times 1 + 6$

$84 = 6 \times 14 + 0$

$\therefore$ 84, 90 ன் மீ.பொ.வ = 6

மேலும் 120, 6 ன் மீ.பொ.வ காண

$120 = 6 \times 20 + 0$

$\therefore$ 84, 90, 120 ன் மீ.பொ.வ = 6



Kindly send me your study materials to email id - padasalai.net@gmail.com

**3. ஒரு கூட்டுத் தொடர்வரிசையில் அமைந்த அடுத்தடுத்த மூன்று உறுப்புகளின் கூடுதல் 27 மற்றும் அவற்றின் பெருக்கற்பலன் 288 எனில், அந்த மூன்று உறுப்புகளைக் காண்க.** |செப்.21|

**தீர்வு:**

கூட்டுத் தொடர்வரிசையில் அமைந்த அடுத்தடுத்த மூன்று உறுப்புகள் $a-d,\ a,\ a+d$ என்க.

மூன்று உறுப்புகளின் கூடுதல்

$$a-d+a+a+d = 27$$
$$3a = 27$$
$$a = \frac{27}{3}$$
$$a = 9$$

மூன்று உறுப்புகளின் பெருக்கல்

$$(a-d)(a)(a+d) = 288$$
$$a(a^2-d^2) = 288$$
$$9(9^2-d^2) = 288$$
$$81-d^2 = \frac{288}{9}$$
$$81-d^2 = 32$$
$$49 = d^2$$
$$\therefore\ d = \pm 7$$

∴ கூட்டுத் தொடர்வரிசையில் அமைந்த மூன்று உறுப்புகள் 2, 9, 16 (அல்லது) 16, 9, 2

**4. ஒரு கூட்டுத் தொடர்வரிசையின் 6-வது மற்றும் 8வது உறுப்புகளின் விகிதம் 7 : 9 எனில், 9-வது மற்றும் 13-வது உறுப்புகளின் விகிதம் காண்க.** மே 22

**தீர்வு:**

$t_6 : t_8 = 7 : 9$

$$\Rightarrow \frac{t_6}{t_8} = \frac{7}{9} \Rightarrow \frac{a+5d}{a+7d} = \frac{7}{9}$$

$\Rightarrow 9a + 45d = 7a + 49d \Rightarrow a = 2d$

$t_9 : t_{13}$-வை காண வேண்டும்.

$$\Rightarrow \frac{t_9}{t_{13}} = \frac{a+8d}{a+12d} = \frac{10d}{14d} = \frac{5}{7}$$

5 : 7 என்பன தேவையான விகிதமாகும்.

**5. பிரியா தனது முதல் மாத வருமானமாக ₹15,000 ஈட்டுகிறார். அதன் பிறகு ஒவ்வோர் ஆண்டும் அவரது மாத வருமானம் ₹1500 உயர்கிறது. அவளுடைய முதல் மாத செலவு ₹13,000 மற்றும் அவளது மாதாந்திரச் செலவு ஒவ்வோர் ஆண்டும் ₹900 உயர்கிறது. பிரியாவின் மாதாந்திரச் சேமிப்பு ₹20,000 அடைய எவ்வளவு காலம் ஆகும்?**

**தீர்வு:**

| | 1 வருடம் | 2 வருடம் |
|---|---|---|
| வருமானம் | ₹ 15,000 | ₹ 16,500 |
| செலவு | ₹ 13,000 | ₹ 13,900 |
| சேமிப்பு | ₹ 2,000 | ₹ 2,600 |

∴ வருட சேமிப்பு ₹ 2,000, ₹ 2,600, ₹ 3,200 .....

$a = 2{,}000,\ d = 600,\ t_n = 20{,}000$

$$a+(n-1)d = 20{,}000$$
$$\Rightarrow 2000+(n-1)600 = 20{,}000$$
$$\Rightarrow (n-1)600 = 20{,}000-2000 = 18000$$
$$\Rightarrow n-1 = \frac{18000}{600}$$
$$\Rightarrow n-1 = 30$$
$$\Rightarrow n = 31 \text{ வருடங்கள்}$$

31 வருடங்களுக்குப் பிறகு பிரியாவின் சேமிப்பு ₹ 20,000 ஆகும்.

**6. ஒரு தாய் தன்னிடம் உள்ள ₹ 207ஐ கூட்டுத் தொடர்வரிசையில் அமையும் மூன்று பாகங்களாகப் பிரித்துத் தனது மூன்று குழந்தைகளுக்கும் கொடுக்க விரும்பினார். அவற்றில் இரு சிறிய தொகைகளின் பெருக்கற்பலன் ₹ 4623 ஆகும். ஒவ்வொரு குழந்தையும் பெறும் தொகையினைக் காண்க.**

**தீர்வு:**

மூன்று குழந்தைகள் பெறும் தொகை கூட்டுத் தொடர்வரிசையில் அமைவதால் அவற்றை $a-d,\ a,\ a+d$ என்க.

தொகையின் கூடுதல் ₹ 207 என்பதால்

$$(a-d)+a+(a+d) = 207$$
$$3a = 207$$
$$a = 69$$

இரு சிறிய தொகைகளின் பெருக்கற்பலன் 4623 என்பதால்

$$(a-d)a = 4623$$
$$(69-d)69 = 4623$$
$$69-d = \frac{4623}{69} = 67$$
$$\therefore d = 2$$

www.Padasalai.Net www.CBSEtips.in



எனவே, மூன்று குழந்தைகளுக்கும் தாய் பிரித்துக் கொடுத்த தொகை

₹ (69 – 2), ₹ 69, ₹ (69 + 2)

அதாவது ₹ 67, ₹ 69 மற்றும் ₹ 71.

**7. 300-க்கும் 600-க்கும் இடையே 7-ஆல் வகுபடும் அனைத்து இயல் எண்களின் கூடுதல் காண்க.**

**தீர்வு:**

$301 + 308 + 315 + \ldots + 595 = ?$

$a = 300;\ d = 7;\ l = 595$

$n = \left(\frac{l-a}{d}\right) + 1$

$$\begin{array}{r|l} 7 & 300 \ (42) \\ & 28 \\ \hline & 20 \\ & 14 \\ \hline & 6 \end{array} \qquad \begin{array}{r|l} 7 & 600 \ (8) \\ & 56 \\ \hline & 40 \\ & 35 \\ \hline & 5 \end{array}$$

$a = 300 + 7 - 6$ $\qquad l = 600 - 5$

$a = 301$ $\qquad l = 595$

$n = \frac{595-300}{7} + 1$

$\Rightarrow = \frac{294}{7} + 1$

$n = 42 + 1$

$n = 43$

$S_n = \frac{n}{2}(a + l)$

$S_{43} = \frac{43}{2}(301 + 595)$

$\Rightarrow \frac{43}{2}(896)$

$= 43 \times 448$

$S_{43} = 19264$

**8. $S_1, S_2$, மற்றும் $S_3$ என்பன முறையே ஒரு கூட்டுத் தொடர்வரிசையின் முதல் $n$, $2n$ மற்றும் $3n$ உறுப்புகளின் கூடுதல் ஆகும். $S_3 = 3(S_2 - S_1)$ என நிறுவுக.**

**தீர்வு:**

$S_1$, $S_2$, $S_3$ என்பன முறையே ஒரு கூட்டுத் தொடர் வரிசையின் முதல் $n$, $2n$ மற்றும் $3n$ உறுப்புகளின் கூடுதல் எனில்,

$S_1 = \frac{n}{2}[2a+(n-1)d]$,

$S_2 = \frac{2n}{2}[2a+(2n-1)d]$,

$S_3 = \frac{3n}{2}[2a+(3n-1)d]$,

$S_2 - S_1 = \frac{2n}{2}[2a+(2n-1)d] - \frac{n}{2}[2a+(n-1)d]$

$= \frac{n}{2}[[4a+2(2n-1)d] - [2a+(n-1)d]]$

$S_2 - S_1 = \frac{n}{2} \times [2a+(3n-1)d]$

$3(S_2 - S_1) = \frac{3n}{2}[2a+(3n-1)d]$

$3(S_2 - S_1) = S_3$

**9. ஒரு பெருக்குத் தொடர் வரிசையின் 4 -வது உறுப்பு $\frac{8}{9}$ மற்றும் 7-வது உறுப்பு, $\frac{64}{243}$ எனில் அந்தப் பெருக்குத் தொடர்வரிசையைக் காண்க.**

**தீர்வு:**

4வது உறுப்பு $t_4 = \frac{8}{9} \Rightarrow ar^3 = \frac{8}{9}$ ---- (1)

7வது உறுப்பு $t_7 = \frac{64}{243}$

$\Rightarrow \quad ar^6 = \frac{64}{243}$ ---- (2)

சமன்பாடு (2) ஐ (1) ஆல் வகுக்க பெறுவது,

$\frac{ar^6}{ar^3} = \frac{\frac{64}{243}}{\frac{8}{9}} = \frac{64}{243} \times \frac{9}{8} = \frac{8}{27}$

$r^3 = \frac{8}{27} \Rightarrow r = \frac{2}{3}$

$r$ இன் மதிப்பை சமன்பாடு (1) இல் பிரதியிட,

$a \times \left(\frac{2}{3}\right)^3 = \frac{8}{9} \Rightarrow a = 3$

எனவே, தேவையான பெருக்குத் தொடர்வரிசை $a, ar, ar^2 \ldots$..

அதாவது $3, 2, \frac{4}{3}, \ldots$.



Kindly send me your study materials to email id - padasalai.net@gmail.com

**10. ஒரு கூட்டுத் தொடர்வரிசையின் ஒன்பதாவது உறுப்பின் ஒன்பது மடங்கும், பதினைந்தாவது உறுப்பின் பதினைந்து மடங்கும் சமம் எனில் இருபத்து நான்காவது உறுப்பின் ஆறு மடங்கானது பூச்சியம் என நிறுவுக.** ஆக.22

**தீர்வு:**

$9t_9 = 15t_{15}$ .....(1) என்க

$6t_{24} = 0$ எனக் காட்ட வேண்டும்

$(1) \Rightarrow \quad 9(a + 8d) = 15(a + 14d)$

$9a + 72d = 15a + 210d$

$15a - 9a + 210d - 72d = 0$

$\Rightarrow \quad 6a + 138d = 0$

$\Rightarrow \quad 6(a + 23d) = 0$

$\Rightarrow \quad 6t_{24} = 0$

என நிரூபிக்கப்பட்டது.

---

**11. 450-க்குக் குறைவாக உள்ள அனைத்து ஒற்றை மிகை முழுக்களின் கூடுதல் காண்க.**

**தீர்வு:**

தேவையான கூட்டுத் தொடர்

$= 1 + 3 + 5 + ... + 449$

இங்கு, $a = 1, d = 2, l = 449$

$$n = \left(\frac{l-a}{d}\right) + 1$$

$$= \frac{449-1}{2} + 1 = 225$$

$$\Rightarrow S_n = \frac{225}{2}[1 + 449]$$

$$\because \quad S_n = \frac{n}{2}[a + 1]$$

$$= 225 \times 225 = 50625$$

***

www.Padasalai.Net www.CBSEtips.in



# 3 இயற்கணிதம்

## STAGE 2

### 2 மதிப்பெண்கள்

**1. தீர்க்க: $2x - 3y = 6, \quad x + y = 1$**

**தீர்வு:**

$$2x - 3y = 6 \qquad ----(1)$$
$$x + y = 1 \qquad ----(2)$$

$(1) \times 1 \Rightarrow \quad 2x - 3y = 6$

$(2) \times 3 \Rightarrow \quad 3x + 3y = 3(+)$

$5x = 9$

$\Rightarrow \quad x = \frac{9}{5}$

$(2) \Rightarrow \quad \frac{9}{5} + y = 1$

$y = 1 - \frac{9}{5} \Rightarrow \frac{5-9}{5}$

$y = \frac{-4}{5}$

எனவே, $x = \frac{9}{5}, y = \frac{-4}{5}$

**2. பின்வரும் விகிதமுறு கோவைகளை எளிய வடிவிற்குச் சுருக்குக.**

**i) $\frac{x^2-1}{x^2+x}$ ii) $\frac{x^2-11x+18}{x^2-4x+4}$**

**iii) $\frac{9x^2-81x}{x^3-8x^2-9x}$ iv) $\frac{p^2-3p-40}{2p^3-24p^2-64p}$**
நேர்க்கோடு s-யின் சாய்வு, $m_2 = \frac{0-7}{-2+8} = \frac{-7}{6}$

சாய்வுகளின் பெருக்கல் $= \frac{6}{7} \times \frac{-7}{6} = -1$

அதாவது $m_1\, m_2 = -1$

எனவே, நேர்க்கோடு r ஆனது, நேர்க்கோடு

www.Padasalai.Net www.CBSEtips.in



s-க்கு செங்குத்தாக அமையும்.

**11. (3, –2), (12, 4) என்ற புள்ளிகள் வழிச் செல்லும் நேர்க்கோடு p மற்றும் (6, –2) மற்றும் (12, 2) என்ற புள்ளிகள் வழிச் செல்லும் நேர்க்கோடு q ஆகும். p ஆனது q-க்கு இணையாகுமா?** **மே 22**

**தீர்வு:**

p -யின் சாய்வு $m_1 = \frac{4+2}{12-3} = \frac{6}{9} = \frac{2}{3}$

q -யின் சாய்வு $m_2 = \frac{2+2}{12-6} = \frac{4}{6} = \frac{2}{3}$

இதிலிருந்து நேர்க்கோடு p -யின் சாய்வு = நேர்க்கோடு q -யின் சாய்வு.

எனவே, நேர்க்கோடு p -யானது நேர்க்கோடு q -க்கு இணை ஆகும்.

**12. பின்வரும் விவரங்களைப் பயன்படுத்தி நேர்க்கோட்டின் சமன்பாடு காண்க.**

**(i) சாய்வு 5 மற்றும் $y$ வெட்டுத்துண்டு $c = -9$**

**(ii) சாய்வு கோணம் 45° மற்றும் $y$ வெட்டுத்துண்டு 11**

**தீர்வு:**

**i.** இங்கு சாய்வு $m = 5$,

$y$ வெட்டுத்துண்டு $c = -9$

நேர்க்கோட்டின் சமன்பாடு $y = mx + c$

$y = 5x - 9$

$0 = 5x - y - 9$

$\therefore$ தேவையான சமன்பாடு $5x - y - 9 = 0$

**ii.** சாய்வுக்கோணம் $\theta = 45°$,

சாய்வு $m = \tan\theta$

$m = \tan 45°$

சாய்வு $m = 1$

$y$ வெட்டுத்துண்டு $C = 11$

நேர்க்கோட்டின் சமன்பாடு $y = mx + C$

$y = 1x + 11$

$0 = x - y + 11$

$\therefore$ தேவையான சமன்பாடு $x - y + 11 = 0$

**13. $8x - 7y + 6 = 0$ என்ற கோட்டின் சாய்வு மற்றும் $y$ வெட்டுத்துண்டு ஆகியவற்றை கணக்கிடுக.** **செப்.21**

**தீர்வு:**

$8x - 7y + 6 = 0$

$8x + 6 = 7y$

7 ஆல் வகுக்க

$\frac{8}{7}x + \frac{6}{7} = \frac{7}{7}y$

$\frac{8}{7}x + \frac{6}{7} = y$

$y = mx + C$ யுடன் ஒப்பிட

சாய்வு $m = \frac{8}{7}$

$y$ வெட்டுத்துண்டு $C = \frac{6}{7}$

**14. (3, –4) என்ற புள்ளியின் வழி செல்வதும், $\frac{-5}{7}$ -ஐ சாய்வாக உடையதுமான நேர்க்கோட்டின் சமன்பாட்டைக் காண்க.**

**தீர்வு:**

$(x_1, y_1) = (3, -4)$

சாய்வு, $m = -\frac{5}{7}$

நேர்க்கோட்டின் சமன்பாடு

$y - y_1 = m(x - x_1)$

$y - (-4) = -\frac{5}{7}(x - 3)$

$7(y + 4) = -5(x - 3)$

$7y + 28 = -5x + 15$

$5x + 7y + 28 - 15 = 0$

$5x + 7y + 13 = 0$

**15. (2, 5) மற்றும் (4, 7) என்ற புள்ளிகளைச் சேர்க்கும் நேர்க்கோட்டிற்குச் செங்குத்தாகவும், $A$ (1, 4) என்ற புள்ளி வழி செல்லுவதுமான நேர்க்கோட்டின் சமன்பாட்டைக் காண்க.**




**தீர்வு:**

கொடுக்கப்பட்ட புள்ளிகள் $A$ (1, 4) , $B$ (2, 5) மற்றும் $C$ (4, 7)

$BC$-யின் சாய்வு $= \frac{7-5}{4-2} = \frac{2}{2} = 1$

தேவையான நேர்க்கோட்டின் சாய்வு $m$ என்க.



Kindly send me your study materials to email id - padasalai.net@gmail.com

இந்த நேர்க்கோடு $BC$-க்கு செங்குத்தாக உள்ளது. எனவே,

$$m \times 1 = -1$$
$$m = -1$$

இக்கோடானது $A\,(1, 4)$ வழி செல்வதால், தேவையான நேர்க்கோட்டின் சமன்பாடு

$$y - y_1 = m(x - x_1)$$
$$y - 4 = -1(x - 1)$$
$$y - 4 = -x + 1$$

எனவே, $x + y - 5 = 0$

**16. ஆய அச்சுகளுடன் சமமாகவும், எதிர் குறியும் உடைய வெட்டுத்துண்டுகளை ஏற்படுத்தி, (5,7) என்ற புள்ளி வழி செல்லும் நேர்க்கோட்டின் சமன்பாட்டைக் காண்க.**

**தீர்வு:**

$x$ வெட்டுத்துண்டு '$a$', $y$ வெட்டுத்துண்டு '$-a$' வெட்டுத்துண்டு வடிவில் நேர்க்கோட்டின் சமன்பாடு

$$\frac{x}{a} + \frac{y}{b} = 1$$
$$\frac{x}{a} + \frac{y}{b} = 1 \text{ (இங்கே } b = -a)$$

எனவே, $x - y = a$ ----(1)

(1) ஆனது (5,7) வழிச் செல்வதால்

$5 - 7 = a$ -லிருந்து $a = -2$

ஆகவே, தேவையான நேர்க்கோட்டின் சமன்பாடு $x - y = -2$; அதாவது $x - y + 2 = 0$

**17. $4x-9y+36=0$ என்ற நேர்க்கோடு ஆய அச்சுகளில் ஏற்படுத்தும் வெட்டுத்துண்டுகளைக் காண்க.**

**தீர்வு:**

கொடுக்கப்பட்ட நேர்கோட்டு சமன்பாடு

$4x - 9y + 36 = 0$

எனவே $4x - 9y = -36$

இருபுறமும் $-36$ ஆல் வகுக்க,

$$\frac{x}{-9} + \frac{y}{4} = 1 \quad \text{----(1)}$$

(1)-ஐ வெட்டுத்துண்டு வடிவத்துடன் ஒப்பிட,

$x$ வெட்டுத்துண்டு $a = -9$;

$y$ வெட்டுத்துண்டு $b = 4$

**18. (1, –5) மற்றும் (4, 2) என்ற புள்ளிகளை இணைக்கும் கோட்டுத்துண்டின் நடுப்புள்ளி வழியாகச் செல்வதும், கீழ்க்கண்டவற்றிற்கு இணையானதுமான நேர்க்கோட்டின் சமன்பாட்டைக் காண்க. (i) $X$ அச்சு (ii) $Y$ அச்சு**

**தீர்வு:**

$(1, -5)$ மற்றும் $(4, 2)$ என்ற புள்ளிகளை இணைக்கும் கோட்டின் நடுப்புள்ளி $M$ என்க.

$$\therefore M(x, y) = \left(\frac{1+4}{2}, \frac{-5+2}{2}\right) = \left(\frac{5}{2}, \frac{-3}{2}\right)$$

i. $X$-அச்சிற்கு இணையான கோட்டின் சமன்பாடு $y = b$

இக்கோடு $\left(\frac{5}{2}, \frac{-3}{2}\right)$ வழி செல்கிறது.

$$\therefore \quad y = -\frac{3}{2}$$
$$\Rightarrow \quad y + \frac{3}{2} = 0$$
$$\Rightarrow \quad 2y + 3 = 0$$

ii. $Y$-அச்சிற்கு இணையான கோட்டின் சமன்பாடு $x = a$

இக்கோடு $\left(\frac{5}{2}, \frac{-3}{2}\right)$ வழி செல்கிறது.

$$\therefore x = \frac{5}{2}$$
$$\Rightarrow \quad x - \frac{5}{2} = 0 \qquad \Rightarrow 2x - 5 = 0$$

**19. கொடுக்கப்பட்ட இரு புள்ளிகள் வழிச் செல்லும் நேர்கோட்டின் சமன்பாட்டைக் காண்க.**

**(i) $\left(2, \frac{2}{3}\right)$ மற்றும் $\left(\frac{-1}{2}, -2\right)$**

**(ii) (2, 3) மற்றும் (–7, –1)**

**தீர்வு:**

இரண்டு புள்ளி வழிச் செல்லும் கோட்டின் சமன்பாடு

$$\frac{y - y_1}{y_2 - y_1} = \frac{x - x_1}{x_2 - x_1}$$

i. $\left(2, \frac{2}{3}\right)$ மற்றும் $\left(\frac{-1}{2}, -2\right)$

தேவையான சமன்பாடு

$$\frac{y - \frac{2}{3}}{-2 - \frac{2}{3}} = \frac{x - 2}{-\frac{1}{2} - 2}$$
$$\Rightarrow \frac{\frac{3y - 2}{3}}{\frac{-8}{3}} = \frac{x - 2}{\frac{-5}{2}}$$
$$\Rightarrow \frac{3y - 2}{-8} = \frac{2x - 4}{-5}$$
$$\Rightarrow -15y + 10 = -16x + 32$$
$$\Rightarrow 16x - 15y - 22 = 0$$

www.Padasalai.Net www.CBSEtips.in



**ii.** (2, 3) மற்றும் (–7, –1)

தேவையான சமன்பாடு

$$\Rightarrow \frac{y-3}{-1-3} = \frac{x-2}{-7-2}$$

$$\Rightarrow \frac{y-3}{-4} = \frac{x-2}{-9}$$

$$\Rightarrow -9y + 27 = -4x + 8$$

$$\Rightarrow 4x - 9y + 19 = 0$$

**20. ஒரு பூனை $xy$-தளத்தில் (–6, –4) என்ற புள்ளியில் உள்ளது. (5, 11) என்ற புள்ளியில் ஒரு பால் புட்டி வைக்கப்பட்டுள்ளது. பூனை மிகக் குறுகிறய தூரம் பயணித்துப் பால் அருந்த விரும்புகிறது எனில், பாலைப் பருகுவதற்குத் தேவையான பாதையின் சமன்பாட்டைக் காண்க.** **ஆக.22**

**தீர்வு:**

(–6, –4) மற்றும் (5, 11) என்ற புள்ளிகளை இணைக்கும் கோட்டின் சமன்பாடு

$$\frac{y-y_1}{y_2-y_1} = \frac{x-x_1}{x_2-x_1}$$

$$\Rightarrow \frac{y-(-4)}{11-(-4)} = \frac{x-(-6)}{5-(-6)}$$

$$\Rightarrow \frac{y+4}{15} = \frac{x+6}{11}$$

$$\Rightarrow 11y + 44 = 15x + 90$$

$$\Rightarrow 15x - 11y + 90 - 44 = 0$$

$$\Rightarrow 15x - 11y + 46 = 0$$

**21. (–1, 2) என்ற புள்ளி வழி செல்வதும், சாய்வு $-\frac{5}{4}$ உடையதுமான நேர்க்கோட்டின் சமன்பாட்டைக் காண்க.** **மே 22**

**தீர்வு:**

தரப்பட்ட புள்ளி (–1, 2) சாய்வு $\frac{-5}{4}$

தேவையான சமன்பாடு $y - y_1 = m(x - x_1)$

$$\Rightarrow y - 2 = \frac{-5}{4}(x-(-1))$$

$$\Rightarrow 4y - 8 = -5x - 5$$

$$\Rightarrow 5x + 4y - 3 = 0$$

**22. கீழே கொடுக்கப்பட்டுள்ள $x$, $y$ வெட்டுத் துண்டுகளைக் கொண்ட நேர்க்கோடுகளின் சமன்பாடுகளைக் காண்க.**

**(i) 4, –6 (ii) –5, $\frac{3}{4}$**

**தீர்வு:**

**i.** $x$ வெட்டுத்துண்டு $a = 4$

$y$ வெட்டுத்துண்டு $b = -6$

நேர்க்கோட்டின் சமன்பாடு

$$\frac{x}{a} + \frac{y}{b} = 1 \Rightarrow \frac{x}{4} + \frac{y}{-6} = 1$$

$$\frac{x}{4} - \frac{y}{6} = 1 \Rightarrow \frac{6x-4y}{24} = 1$$

$$\frac{2(3x-2y)}{24} = 1 \Rightarrow \frac{3x-2y}{12} = 1$$

$$3x - 2y = 12$$

$$3x - 2y - 12 = 0$$

**ii.** $x$ வெட்டுத்துண்டு $a = -5$

$y$ வெட்டுத்துண்டு $b = \frac{3}{4}$

நேர்க்கோட்டின் சமன்பாடு

$$\frac{x}{a} + \frac{y}{b} = 1 \Rightarrow \frac{x}{-5} + \frac{y}{\frac{3}{4}} = 1$$

$$\frac{x}{-5} + \frac{4y}{3} = 1 \Rightarrow \frac{3x-20y}{-15} = 1$$

$$3x - 20y = -15$$

$$3x - 20y + 15 = 0$$

**23. கொடுக்கப்பட்ட நேர்கோடுகளின் சமன் பாட்டிலிருந்து ஆய அச்சுகளின் மேல் ஏற்படுத்தும் வெட்டுத்துண்டுகளைக் காண்க.**

**(i) $3x - 2y - 6 = 0$ (ii) $4x + 3y + 12 = 0$**

**தீர்வு:** **செப்.21**

வெட்டுத்துண்டு வடிவச் சமன்பாடு

$$\frac{x}{a} + \frac{y}{b} = 1$$

$\because a - x$ வெட்டுத்துண்டு

$b - y$ வெட்டுத்துண்டு

**i.** $3x - 2y - 6 = 0$

$$\Rightarrow 3x - 2y = 6 \Rightarrow \frac{3x}{6} - \frac{2y}{6} = 1$$

$$\Rightarrow \frac{x}{2} + \frac{y}{-3} = 1 \Rightarrow \therefore a = 2, b = -3$$

$4x + 3y + 12 = 0$

$$4x + 3y = -12 \ (\div -12)$$

$$\Rightarrow \frac{4x}{-12} + \frac{3y}{-12} = 1$$

$$\Rightarrow \frac{x}{-3} + \frac{y}{-4} = 1$$

$$\Rightarrow \therefore a = -3, b = -4$$



Kindly send me your study materials to email id - padasalai.net@gmail.com

**24. $6x+8y+7=0$ என்ற நேர்க்கோட்டின் சாய்வைக் காண்க.**

**தீர்வு:**

சாய்வு $m = \dfrac{-x\text{-ன் கெழு}}{y\text{-ன் கெழு}} = -\dfrac{6}{8} = -\dfrac{3}{4}$

எனவே நேர்க்கோட்டின் சாய்வு $-\dfrac{3}{4}$ ஆகும்.

**25. (i) $3x-7y=11$ -க்கு இணையான**

**(ii) $2x-3y+8=0$ -க்கு செங்குத்தான நேர்க்கோட்டின் சாய்வைக் காண்க.**

**தீர்வு:**

i. கொடுக்கப்பட்ட நேர்க்கோட்டின் சமன்பாடு $3x-7y=11$

$3x-7y-11=0$

சாய்வு $m = \dfrac{-3}{-7} = \dfrac{3}{7}$

இணை கோடுகளின் சாய்வுகள் சமம் என்பதால் $3x-7y=11$ என்ற நேர்க்கோட்டிற்கு இணையாக கோட்டின் சாய்வு $\dfrac{3}{7}$ ஆகும்.

ii. கொடுக்கப்பட்ட நேர்க்கோட்டின் சமன்பாடு $2x-3y+8=0$

சாய்வு $m = \dfrac{-2}{-3} = \dfrac{2}{3}$

ஒன்றுக்கொன்று செங்குத்தான நேர்க்கோட்டு சாய்வுகளின் பெருக்கற்பலன் $-1$ என்பதால் $2x-3y+8=0$ என்ற நேர்க்கோட்டிற்குச் செங்குத்தான கோட்டின்

சாய்வு $\dfrac{-1}{\frac{2}{3}} = \dfrac{-3}{2}$ ஆகும்.

**26. $2x+3y-8=0$, $4x+6y+18=0$ ஆகிய நேர்கோடுகள் இணை எனக் காட்டுக.**

**தீர்வு:**

$2x+3y-8=0$ என்ற கோட்டின் சாய்வு

$m_1 = \dfrac{-x\text{-ன் கெழு}}{y\text{-ன் கெழு}} = -\dfrac{2}{3}$

$4x+6y+18=0$ என்ற கோட்டின் சாய்வு

$m_2 = \dfrac{-x\text{-ன் கெழு}}{y\text{-ன் கெழு}} = -\dfrac{2}{3}$

இங்கு $m_1 = m_2$ சாய்வுகள் சமம்.

எனவே இவ்விரு நேர்க்கோடுகளும் இணையாகும்.

**27. $x-2y+3=0$, $6x+3y+8=0$ ஆகிய நேர்க்கோடுகள் ஒன்றுக்கொன்று செங்குத்தானவை எனக் காட்டுக.**

**தீர்வு:**

$x-2y+3=0$ என்ற நேர்கோட்டின் சாய்வு

$m_1 = -\left(\dfrac{a}{b}\right) = -\left(\dfrac{1}{-2}\right) = \dfrac{1}{2}$

$6x+3y+8=0$ என்ற நேர்கோட்டின் சாய்வு

$m_2 = -\left(\dfrac{a}{b}\right) = -\left(\dfrac{6}{3}\right) = -2$

$m_1 \times m_2 = \dfrac{1}{2} \times (-2) = -1$

சாய்வுகளின் பெருக்கற்பலன் $= -1$ ஆகும்.

$\therefore$ கொடுக்கப்பட்ட இரண்டு நேர்கோடுகளும் செங்குத்தானவையாகும்.

**28. சாய்வு காண்க. (i) $5y-3=0$ (ii) $7x-\dfrac{3}{17}=0$**

**தீர்வு:**

i. $5y-3=0$

$\therefore$ சாய்வு, $m = \dfrac{-x\text{-ன் கெழு}}{y\text{-ன் கெழு}} = \dfrac{0}{5} = 0$

ii. $7x-\dfrac{3}{17}=0 \Rightarrow 7x = \dfrac{3}{17}$

$\Rightarrow 0y + 7x + \dfrac{3}{17}$

$\therefore$ சாய்வு, $m = \dfrac{-x\text{-ன் கெழு}}{y\text{-ன் கெழு}} = \dfrac{-7}{0}$

$\therefore m = \infty$ (வரையறுக்கப்படாதது)

**29. (i) $y = 0.7x - 11$ -க்கு இணையாக**

**(ii) $x = -11$ -க்கு செங்குத்தாக அமையும் நேர்க்கோட்டின் சாய்வைக் காண்க.**

**தீர்வு:**

i. $y=0.7x-11$ என்ற கோட்டிற்கு இணையான கோட்டின் சமன்பாடு $y=0.7x-k$

$\therefore$ கோட்டின் சாய்வு $= 0.7$

ii. $x=-11$

$\Rightarrow x+0y+11=0$ ----(1)

(1) என்ற கோட்டின் செங்குத்து வடிவம்

$0x-y+k=0$

$\Rightarrow y = 0x+k$

$\therefore$ கோட்டின் சாய்வு $= 0$

www.Padasalai.Net www.CBSEtips.in



**5 மதிப்பெண்கள்** **STAGE 2**

**1. $P(-1, -4)$, $Q(b, c)$ மற்றும் $R(5, -1)$ என்பன ஒரே நேர்கோட்டில் அமையும் புள்ளிகள் என்க. மேலும் $2b + c = 4$, எனில், $b$ மற்றும் $c$ -யின் மதிப்பு காண்க.** **செப்.21**

**தீர்வு:**

$P(-1, -4)$, $Q(b, c)$ மற்றும் $R(5, -1)$ என்ற புள்ளிகள் ஒரே நேர்கோட்டில் அமைவதால்

$PQR$-யின் பரப்பு $= 0$

$$\frac{1}{2}\begin{vmatrix} -1 & -4 \\ b & c \\ 5 & -1 \\ -1 & -4 \end{vmatrix} = 0$$

$$\frac{1}{2}\{(-c - b - 20) - (-4b + 5c + 1)\} = 0$$

$$-c - b - 20 + 4b - 5c - 1 = 0$$

$$3b - 6c = 21 \ (\div 3)$$

$$b - 2c = 7 \quad \text{----(1)}$$

மேலும், $2b + c = 4$ ----(2)

(கொடுக்கப்பட்டது)

(1) மற்றும் (2) தீர்ப்பதன் மூலம் நாம் பெறுவது

$b = 3, c = -2$

---

**2. $A(-3, 9)$, $B(a, b)$ மற்றும் $C(4, -5)$ என்பன ஒரு கோடமைந்த புள்ளிகள் மற்றும் if $a + b = 1$ எனில், $a$ மற்றும் $b$ -யின் மதிப்பைக் காண்க.**

**தீர்வு:**

$A(-3, 9)$, $B(a, b)$, $C(4, -5)$ என்பன ஒரு கோட்டமைந்த புள்ளிகள் மற்றும்

$a + b = 1$ ----(1)

ஒரே கோட்டமைந்த 3 புள்ளிகள் கொண்ட முக்கோணத்தின் பரப்பு $= 0$

$$\frac{1}{2}\begin{vmatrix} x_1 & y_1 \\ x_2 & y_2 \\ x_3 & y_3 \\ x_1 & y_1 \end{vmatrix} = \frac{1}{2}\begin{vmatrix} -3 & 9 \\ a & b \\ 4 & -5 \\ -3 & 9 \end{vmatrix} = 0$$

$\Rightarrow \quad -3b - 5a + 36) - (9a + 4b + 15) = 0$

$\Rightarrow \quad -5a - 3b + 36 - 9a - 4b - 15 = 0$

$\Rightarrow \quad -14a - 7b + 21 = 0$

$\Rightarrow \quad -14a - 7b = -21$

$\Rightarrow \quad 14a + 7b = 21 \ (\div 7)$

$\Rightarrow \quad 2a + b = 3$ ----(2)

கொடுக்கப்பட்டுள்ளது $a + b = 1$ ----(1)

$(1) - (2) \Rightarrow a = 2 \quad b = -1$

**3. $\Delta ABC$-யின் பக்கங்கள் $AB$, $BC$ மற்றும் $AC$ ஆகியவற்றின் நடுப்புள்ளிகள் முறையே $P(11, 7)$, $Q(13.5, 4)$ மற்றும் $R(9.5, 4)$ என்க. முக்கோணத்தின் முனைப் புள்ளிகள் $A$, $B$ மற்றும் $C$ காண்க. மேலும், $\Delta ABC$-யின் பரப்பை $\Delta PQR$-யின் பரப்புடன் ஒப்பிடுக.**

**தீர்வு:**

$P = AB$-ன் மையப்புள்ளி

$$\Rightarrow \left(\frac{x_1 + x_2}{2}, \frac{y_1 + y_2}{2}\right) = (11, 7)$$

$\Rightarrow \frac{x_1 + x_2}{2} = 11 \quad \Rightarrow x_1 + x_2 = 22$ ----(1)

$\Rightarrow \frac{y_1 + y_2}{2} = 7 \quad \Rightarrow y_1 + y_2 = 14$ ----(2)

$Q = BC$-ன் மையப்புள்ளி

$$\Rightarrow \left(\frac{x_2 + x_3}{2}, \frac{y_2 + y_3}{2}\right) = (13.5, 4)$$

$\Rightarrow \frac{x_2 + x_3}{2} = 13.5 \quad \Rightarrow x_2 + x_3 = 27$ ----(3)

$\Rightarrow \frac{y_2 + y_3}{2} = 4 \quad \Rightarrow y_2 + y_3 = 8$ ----(4)

$R = AC$-ன் மையப்புள்ளி

$$\Rightarrow \left(\frac{x_1 + x_3}{2}, \frac{y_1 + y_3}{2}\right) = (9.5, 4)$$

$\Rightarrow \frac{x_1 + x_3}{2} = 9.5 \quad \Rightarrow x_1 + x_3 = 19$ ----(5)

$\Rightarrow \frac{y_1 + y_3}{2} = 4 \quad \Rightarrow y_1 + y_3 = 8$ ----(6)

$(1) + (3) + (5) \Rightarrow \quad 2(x_1 + x_2 + x_3) = 68$

$x_1 + x_2 + x_3 = 34$ ----(7)

$(2) + (4) + (6) \Rightarrow \quad 2(y_1 + y_2 + y_3) = 30$

$y_1 + y_2 + y_3 = 15$ ----(8)

$(7) - (1) \Rightarrow x_3 = 12$

$(7) - (3) \Rightarrow x_1 = 7$

$(7) - (5) \Rightarrow x_2 = 15$

$(8) - (2) \Rightarrow y_3 = 1$

$(8) - (4) \Rightarrow y_1 = 7$

$(8) - (6) \Rightarrow y_2 = 7$

$A(7, 7)$, $B(15, 7)$ மற்றும் $C(12, 1)$

$$\Delta ABC \text{ ன் பரப்பு} = \frac{1}{2}\begin{vmatrix} x_1 & y_1 \\ x_2 & y_2 \\ x_3 & y_3 \\ x_1 & y_1 \end{vmatrix} = \frac{1}{2}\begin{vmatrix} 7 & 7 \\ 15 & 7 \\ 12 & 1 \\ 7 & 7 \end{vmatrix}$$

$= \frac{1}{2}\ [(49 + 15 + 84) - (105 + 84 + 7)]$

$= \frac{1}{2}\ [148 - 196]$



Kindly send me your study materials to email id - padasalai.net@gmail.com

$= \frac{1}{2}[-48] = 24$ ச.அ

($\because$ பரப்பளவு குறையாக இருக்காது)

$\Delta PQR$-ன் பரப்பு $= \frac{1}{2}\begin{vmatrix} x_1 & y_1 \\ x_2 & y_2 \\ x_3 & y_3 \\ x_1 & y_1 \end{vmatrix} = \frac{1}{2}\begin{vmatrix} 11 & 7 \\ 13.5 & 4 \\ 9.5 & 4 \\ 11 & 7 \end{vmatrix}$

$= \frac{1}{2}[(44 + 54 + 66.5) - (94.5 + 38 + 44)]$

$= \frac{1}{2}[164.5 - 176.5]$

$= \frac{1}{2}[-12] = 6$ ச.அ

($\because$ பரப்பளவு குறையாக இருக்காது)

இப்போது $\Delta PQR$ -ன் பரப்பு $= 6$ ச.அ

$\Delta ABC$-ன் பரப்பு $= 24$ ச.அ

$\therefore \Delta ABC$-ன் பரப்பு $= 4 \times \Delta PQR$-ன் பரப்பு

---

**4. (–3, 8) என்ற புள்ளி வழி செல்வதும், ஆய அச்சுகளின் மிகை வெட்டுத்துண்டுகளின் கூடுதல் 7 உடையதுமான நேர்க்கோட்டின் சமன்பாட்டைக் காண்க.**

**தீர்வு:**

$a, b$ என்பன வெட்டுத்துண்டுகள் எனில்

$a + b = 7$ அல்லது $b = 7 - a$

வெட்டுத்துண்டு வடிவம் $\frac{x}{a} + \frac{y}{b} = 1$

ஆகவே, $\frac{x}{a} + \frac{y}{7-a} = 1$

இக்கோடானது $(-3, 8)$, என்ற புள்ளி வழிச் செல்வதால்

$\frac{-3}{a} + \frac{8}{7-a} = 1$ இதிலிருந்து

$\Rightarrow \quad -3(7 - a) + 8a = a(7 - a)$

$-21 + 3a + 8a = 7a - a^2$

ஆகவே, $a^2 - 7a + 11a - 21 = 0$

இதனைத் தீர்ப்பதன் மூலம்

$(a - 3)(a + 7) = 0$

$a = 3$ அல்லது $a = -7$

$a$ என்பது மிகை எண் என்பதால் $a = 3$ மற்றும் $b = 7 - a = 7 - 3 = 4$

எனவே, $\frac{x}{3} + \frac{y}{4} = 1$

ஆகவே, தேவையான நேர்க்கோட்டின் சமன்பாடு $4x + 3y - 12 = 0$

**5. கொடுக்கப்பட்ட புள்ளிகள் செங்கோண முக்கோணத்தை அமைக்கும் எனக் காட்டுக. மேலும் பிதாகரஸ் தேற்றத்தை நிறைவு செய்யுமா என ஆராய்க.**

**(i) $A(1, -4)$, $B(2, -3)$ மற்றும் $C(4, -7)$**

**(ii) $L(0, 5)$, $M(9, 12)$ மற்றும் $N(3, 14)$**

**தீர்வு:**

**i.** $A(1, -4)$, $B(2, -3)$ மற்றும் $C(4, -7)$

$AB$-யின் சாய்வு $= \frac{-3-(-4)}{2-1} = \frac{1}{1} = 1$

$BC$-யின் சாய்வு $= \frac{-7-(-3)}{4-2} = \frac{-4}{2} = -2$

$AC$-யின் சாய்வு $= \frac{-7+4}{4-(+1)} = \frac{-3}{3} = -1$

($AB$யின் சாய்வு) $\times$ ($AC$யின் சாய்வு)

$= 1 \times (-1) = -1$

$\therefore \Delta ABC$ என்பது செங்கோண முக்கோணமாகும்.

($\because AB \perp AC$)

பிதாகரஸ் தேற்றப்படி,

$AB^2 + AC^2 = BC^2$

($\because d = \sqrt{(x_2 - x_1)^2 + (y_2 - y_1)^2}$ )

$AB^2 = (2 - 1)^2 + (-3 + 4)^2$

$= (1)^2 + (1)^2 = 2$

$AC^2 = (4 - 1)^2 + (-7 + 4)^2$

$= (3)^2 + (-3)^2 = 18$

$BC^2 = (4 - 2)^2 + (-7 + 3)^2$

$= (2)^2 + (-4)^2 = 4 + 16 = 20$

$AB^2 + AC^2 = 2 + 18 = 20 = BC^2$

என நிரூபிக்கப்பட்டது.

$\therefore$ கொடுக்கப்பட்ட புள்ளிகள் பிதாகரஸ் தேற்றத்தை நிறைவு செய்யும்.

**ii.** $L(0, 5)$, $M(9, 12)$ மற்றும் $N(3, 11)$

$LM$-யின் சாய்வு $= \frac{12-5}{9-0} = \frac{7}{9}$

$MN$-யின் சாய்வு $= \frac{14-12}{3-9} = \frac{2}{-6} = -\frac{1}{3}$

$LN$-யின் சாய்வு $= \frac{14-5}{3-0} = \frac{9}{3} = 3$

($MN$-யின் சாய்வு) $\times$ ($LN$-யின் சாய்வு)

$= \left(-\frac{1}{3}\right) \times (3) = -1$

$\therefore MN \perp r\ LN$

$\Delta LMN$ ஒரு செங்கோண முக்கோணமாகும்.

பிதாகரஸ் தேற்றப்படி,

$MN^2 + LN^2 = LM^2$

$MN^2 = (3-9)^2 + (14-12)^2$

$= (-6)^2 + (2)^2 = 36 + 4 = 40$

$LN^2 = (3-0)^2 + (14-5)^2$

$= (3)^2 + (9)^2 = 9 + 81 = 90$

$LM^2 = (9-0)^2 + (12-5)^2$

$= (9)^2 + (7)^2 = 81 + 49 = 130$

$MN^2 + LN^2 = 40 + 90 = 130 = LM^2$

$\therefore$ கொடுக்கப்பட்ட புள்ளிகள் பிதாகரஸ் தேற்றத்தை நிறைவு செய்யும்.

---

**6. $A$ (2.5, 3.5), $B$ (10, –4), $C$ (2.5, –2.5) மற்றும் $D$(–5, 5) ஆகியன இணைகரத்தின் முனைப் புள்ளிகள் எனக் காட்டுக.**

**தீர்வு:**

$A(2.5, 3.5)\ B\ (10, -4),$

$AB$ ன் சாய்வு $= \dfrac{y_2 - y_1}{x_2 - x_1}$

$= \dfrac{-4-3.5}{10-2.5} = -\dfrac{7.5}{7.5} = -1$

$C\ (2.5, -2.5), D\ (-5, 5),$

$CD$ ன் சாய்வு $= \dfrac{-5-(-2.5)}{-5-2.5}$

$= \dfrac{5+2.5}{-7.5} = \dfrac{7.5}{-7.5} = -1$

$\therefore$ $AB$ ன் சாய்வு $=$ $CD$ ன் சாய்வு

எனவே $AB$யும் $CD$யும் இணைகோடுகள்

$B\ (10, -4), C\ (2.5, -2.5),$

$BC$ன் சாய்வு $= \dfrac{-2.5-(-4)}{-2.5-10}$

$= \dfrac{-2.5+4}{-7.5} = \dfrac{1.5}{-7.5} \times \dfrac{10}{10}$

$= \dfrac{15}{-75} = -\dfrac{1}{5}$

$A\ (2.5, 3.5), D\ (-5, 5),$

$AD$ன் சாய்வு $= \dfrac{-5-(3.5)}{-5-2.5} = \dfrac{1.5}{-7.5} = \dfrac{1.5}{-7.5} \times \dfrac{10}{10}$

$= \dfrac{15}{-75} = -\dfrac{1}{5}$

$\therefore$ $BC$ன் சாய்வு $=$ $AD$ன் சாய்வு.

எனவே $BC$ யும் $AD$ யும் இணைகோடுகள்.

$\therefore$ எனவே $ABCD$ ஓர் இணைகரத்தை அமைக்கும்.

---

**7. $A$ (2, 2), $B$ (–2, –3), $C$ (1, –3) மற்றும் $D$ ($x$, $y$) ஆகிய புள்ளிகள் இணைகரத்தை அமைக்கும் எனில், $x$ மற்றும் $y$ -யின் மதிப்பைக் காண்க.**

**தீர்வு:**

$A\ (2, 2), B\ (-2, -3)\ , C\ (1, -3)$ மற்றும் $D(x, y)$ என்ற புள்ளிகள் இணைகரத்தை அமைக்கும் என்பதால்

$AB \parallel CD$ மற்றும் $BC \parallel AD$

$\therefore AD$-ன் சாய்வு $= BC$-ன் சாய்வு

$\Rightarrow \dfrac{y-2}{x-2} = \dfrac{-3(-3)}{1-(-2)} \Rightarrow \dfrac{y-2}{x-2} = 0$

$\Rightarrow y - 2 = 0 \Rightarrow y = 2$

$CD$-ன் சாய்வு $= AB$-ன் சாய்வு

$\Rightarrow \dfrac{y-(-3)}{x-1} = \dfrac{-3-2}{-2-2}$

$\Rightarrow \dfrac{y+3}{x-1} = \dfrac{-5}{-4}$

$y = 2$ என்பதால்

$\Rightarrow \dfrac{5}{x-1} = \dfrac{5}{4} \Rightarrow x - 1 = 4 \Rightarrow x = 5$

---

**8. $A$ (6, 2), $B$ (–5, –1) மற்றும் $C$ (1, 9) -ஐ முனைகளாகக் கொண்ட $\Delta ABC$-யின் முனை $A$–யிலிருந்து வரையப்படும் நடுக்கோடு மற்றும் குத்துக்கோட்டின் சமன்பாட்டைக் காண்க.** செப்.21

**தீர்வு:**




$A$யிலிருந்து வரையப்பட்ட நடுக்கோட்டின் சமன்பாடு

$BC$ யின் நடுப்புள்ளி $= D\left(\dfrac{-5+1}{2}, \dfrac{-1+9}{2}\right)$

$= D\ (-2, 4)$

$AD$ யின் சமன்பாடு $A\ (6, 2), D\ (-2, 4)$

$\dfrac{y-y_1}{y_2-y_1} = \dfrac{x-x_1}{x_2-x_1}$

$$\Rightarrow \quad \frac{y-2}{4-2} = \frac{x-6}{-2-6}$$

$$\Rightarrow \quad \frac{y-2}{2} = \frac{x-6}{-8}$$

$$\Rightarrow \quad \frac{y-2}{1} = \frac{x-6}{-4}$$

$$\Rightarrow \quad x-6 = -4y+8$$

$$\Rightarrow \quad x+4y-14 = 0$$

$A$ யிலிருந்து வரையப்பட்ட குத்துக்கோட்டின் சமன்பாடு

$B(-5,-1)$, $C(1,9)$

சாய்வு $BC = \frac{y_2-y_1}{x_2-x_1} = \frac{9+1}{1+5} = \frac{10}{6} = \frac{5}{3}$

$AD \perp BC$, என்பதால்

சாய்வு $AD = \frac{-3}{5}$ மற்றும் $A(6, 2)$

$AD$ என்ற குத்துக்கோட்டின் சமன்பாடு

$$y-y_1 = m(x-x_1)$$

$$\Rightarrow \quad y-2 = \frac{-3}{5}(x-6)$$

$$\Rightarrow \quad 5y-10 = -3x+18$$

$$\Rightarrow \quad 3x+5y-28 = 0$$

**9. $\Delta ABC$-யின் முனைகள் $A(-3, 0)$ $B(10, -2)$ மற்றும் $C(12, 3)$ எனில், $A$ மற்றும் $B$-யிலிருந்து முக்கோணத்தின் எதிர்பக்கத்திற்கு வரையப் படும் குத்துக்கோட்டின் சமன்பாடுகளைக் காண்க.**




**தீர்வு:**

$B(10,-2)$ $C(12,3)$

$BC$ ன் சாய்வு $= \frac{y_2-y_1}{x_2-x_1}$

$$= \frac{3+2}{12-10} = \frac{5}{2}$$

$BC \perp AD$

$\therefore AD$ ன் சாய்வு $= -\frac{2}{5}$ $\quad A(-3, 0)$

$A$ யிலிருந்து முக்கோணத்தின் எதிர்பக்கத்திற்கு வரையப்பட்ட குத்துக்கோட்டின் சமன்பாடு

$$y-y_1 = m(x-x_1)$$

$$y-0 = -\frac{2}{5}(x+3)$$

$$5y = -2x-6$$

$$2x+5y+6 = 0$$

$A(-3, 0)$ $C(12, 3)$

$AC$ ன் சாய்வு $= \frac{3-0}{12+3} = \frac{3}{15} = \frac{1}{5}$

$AC \perp BE$

$B(10, -2)$ $BE$ ன் சாய்வு $= -5$

$B$ யிலிருந்து முக்கோணத்தின் எதிர்பக்கத்திற்கு வரையப்பட்ட குத்துக்கோட்டின் சமன்பாடு

$$y-y_1 = m(x-x_1)$$

$$y+2 = -5(x-10)$$

$$y+2 = -5x+50$$

$$5x+y-48 = 0$$

---

**10. பிதாகரஸ் தேற்றத்தைப் பயன்படுத்தாமல் (1, –4), (2, –3) மற்றும் (4, –7) என்ற முனைப் புள்ளிகள் ஒரு செங்கோண முக்கோணத்தை அமைக்கும் எனக் காட்டுக.**

**தீர்வு:**

$A(1, -4)$, $B(2, -3)$ மற்றும் $C(4, -7)$ ஆகியன முக்கோணத்தின் முனைப் புள்ளிகள் என்க.

$AB$-யின் சாய்வு $= \frac{-3+4}{2-1} = \frac{1}{1} = 1$

$BC$-யின் சாய்வு $= \frac{-7+3}{4-2} = \frac{-4}{2} = -2$

$AC$-யின் சாய்வு $= \frac{-7+4}{4-1} = \frac{-3}{3} = -1$

$AB$-யின் சாய்வு $\times$ $AC$-யின் சாய்வு $= (1)(-1)$

$$= -1$$

ஆகவே, $AB$ ஆனது $AC$-க்கு செங்குத்தாகும்.

$\angle A = 90°$

எனவே, $\Delta ABC$ ஆனது செங்கோண முக்கோணம் ஆகும்.

---

**11. $A(-4, 2)$ மற்றும் $B(6, -4)$ என்ற புள்ளிகளை இணைக்கும் மையக் குத்துக்கோட்டின் சமன்பாட்டைக் காண்க.**

**தீர்வு:**

$A(-4, 2)$ மற்றும் $B(6, -4)$ என்ற புள்ளிகளை இணைக்கும் கோட்டின் சமன்பாடு

$$\Rightarrow \quad \frac{y-2}{-4-2} = \frac{x-(-4)}{6-(-4)}$$

$$\Rightarrow \quad \frac{y-2}{-6} = \frac{\quad}{10}$$

$$\Rightarrow \quad 10y-20 = -6x-24$$

www.Padasalai.Net www.CBSEtips.in



$\Rightarrow 6x + 10y + 4 = 0$

$\Rightarrow 3x + 5y + 2 = 0$ ----(1)

செங்குத்து சமன்பாடு

$5x - 3y + k = 0$ ----(2)

சமன்பாடு (2) ஆனது $AB$-ன் மையம் வழிச் செல்கிறது.

$AB$-யின் மையப்புள்ளி $= \left(\frac{-4+6}{2}, \frac{2-4}{2}\right)$

$= (1, -1)$

$\therefore (2) \Rightarrow 5(1) - 3(-1) + k = 0$

$\Rightarrow 5 + 3 + k = 0 \Rightarrow k = -8$

தேவையான சமன்பாடு $5x - 3y - 8 = 0$

***



Kindly send me your study materials to email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



# 6 முக்கோணவியல்

## 5 மதிப்பெண்கள் STAGE 2

**1.** $cosec\theta + cot\theta = P$ எனில், $cos\theta = \dfrac{P^2-1}{P^2+1}$ என்பதை நிரூபிக்கவும்.

**தீர்வு:**

$$cosec\theta + cot\theta = P \quad ----(1)$$

$$cosec\theta - cot\theta = \frac{1}{P} \quad ----(2)$$

$$(1)+(2) \Rightarrow \quad 2\,cosec\theta = P + \frac{1}{P}$$

$$2\,cosec\theta = \frac{P^2+1}{P} \quad ----(3)$$

$$(1)-(2) \Rightarrow \quad 2cot\theta = P - \frac{1}{P}$$

$$2\,cot\theta = \frac{P^2-1}{P} \quad ----(4)$$

$$(4)\,/\,(3) \Rightarrow \quad \frac{2\cot\theta}{2cosec\theta} = \frac{\frac{P^2-1}{P}}{\frac{P^2+1}{P}}$$

$$\frac{\cot\theta}{cosec\theta} = \frac{P^2P-1}{P^2+1}$$

$$\frac{\cos\theta}{\sin\theta} \times sin\theta = \frac{P^2-1}{P^2+1}$$

$$cos\theta = \frac{P^2-1}{P^2+1}$$

நிரூபிக்கப்பட்டது.

**2.** $\left(\dfrac{\cos^3 A - \sin^3 A}{\cos A - \sin A}\right) - \left(\dfrac{\cos^3 A + \sin^3 A}{\cos A + \sin A}\right) = 2\,sinAcosA$ என்பதை நிரூபிக்கவும்.

**தீர்வு:**

$$\left(\frac{\cos^3 A - \sin^3 A}{\cos A - \sin A}\right) - \left(\frac{\cos^3 A + \sin^3 A}{\cos A + \sin A}\right)$$

$$= \left(\frac{(\cos A - \sin A)(\cos^2 A + \sin^2 A + \cos A \sin A)}{\cos A - \sin A}\right)$$

$$- \left(\frac{(\cos A + \sin A)(\cos^2 A + \sin^2 A - \cos A \sin A)}{\cos A + \sin A}\right)$$

$$[\because a^3-b^3 = (a-b)(a^2+b^2+ab)$$
$$a^3+b^3 = (a+b)(a^2+b^2-ab)]$$

$= (1 + cosA\,sinA) - (1 - cosA\,sinA)$

$= 1 + cosA\,sinA - 1 + cosA\,sinA$

$= 2cosA\,sinA$

**3.** பின்வரும் முற்றொருமைகளை நிரூபிக்கவும்.

$$\frac{\sin^3 A + \cos^3 A}{\sin A + \cos A} + \frac{\sin^3 A - \cos^3 A}{\sin A - \cos A} = 2$$

**தீர்வு:**

இங்கு $x = sinA,\ y = cosA$ என்க.

$$\text{LHS} = \frac{\sin^3 A + \cos^3 A}{\sin A + \cos A} + \frac{\sin^3 A - \cos^3 A}{\sin A - \cos A}$$

$$\because x^3 + y^3 = (x+y)(x^2 - xy + y^2)$$
$$x^3 - y^3 = (x-y)(x^2 + xy + y^2)$$

$$= \frac{(\sin A + \cos A)(\sin^2 A - \sin A \cos A + \cos^2 A)}{\sin A + \cos A}$$
$$+ \frac{(\sin A - \cos A)(\sin^2 A + \sin A \cos A + \cos^2 A)}{\sin A - \cos A}$$

$= sin^2A - sinAcosA + cos^2A + sin^2A + sinA\,cosA + cos^2A$

$= 2\,(sin^2A + cos^2A) \qquad (\because sin^2A + cos^2A = 1)$

$= 2 = \text{RHS}$ என நிரூபிக்கப்பட்டது.

**4.** தரையின் மீது ஒரு புள்ளியிலிருந்து 30 மீ உயரமுள்ள கட்டடத்தின் மேலுள்ள ஒரு கோபுரத்தின் அடி மற்றும் உச்சியின் ஏற்றக்கோணங்கள் முறையே 45° மற்றும் 60° எனில், கோபுரத்தின் உயரத்தைக் காண்க. ($\sqrt{3} = 1.732$) **மே 22**

**தீர்வு:**



$\Delta APB$ல்

$$tan\theta = \frac{\text{எதிர்பக்கம்}}{\text{அடுத்துள்ள பக்கம்}}$$

$$tan\,45° = \frac{30}{BP}$$

$$1 = \frac{30}{BP}$$

$BP = 30$ மீ

$\Delta BPC$ யில் $tan\,60° = \dfrac{BC}{BP}$

$$\sqrt{3} = \frac{h+30}{30}$$

$$30\sqrt{3} = h + 30$$

$$h = 30\sqrt{3} - 30$$

$$= 30\,(1.732 - 1)$$

$$= 30\,(0.732)$$

$\therefore$ கோபுரத்தின் உயரம் $= 21.960$ மீ

Kindly send me your study materials to email id - padasalai.net@gmail.com

**5. ஒருவர் அவருடைய வீட்டிற்கு வெளியில் நின்றுகொண்டு ஒரு ஜன்னலின் உச்சி மற்றும் அடி ஆகியவற்றை முறையே 60° மற்றும் 45° ஆகிய ஏற்றக்கோணங்களில் காண்கிறார். அவரின் உயரம் 180 செ.மீ மேலும் வீட்டிலிருந்து 5 மீ தொலைவில் அவர் உள்ளார் எனில், ஜன்னலின் உயரத்தைக் காண்க. ($\sqrt{3}$ = 1.732)**

**தீர்வு:**




AC – நிற்பவரின் இடம்

EF – ஜன்னல், DF – வீடு

படத்திலிருந்து,

EF = h, ED = $x$, DF = $x$ + h.

$\Delta$CDE -ல்,

$\tan 45° = \frac{DE}{DC} \Rightarrow 1 = \frac{}{500} \Rightarrow x = 5$

$\Delta$CDF -ல்,

$\tan 60° = \frac{DF}{DC} \Rightarrow \sqrt{3} = \frac{h+x}{500}$

$\Rightarrow h + x = \sqrt{3}(5)$

$\Rightarrow h = (5 \times \sqrt{3}) - 5$

$= 5[\sqrt{3} - 1] = 5[1.732 - 1]$

$= 5[0.732] = 3.66$ மீ

எனவே, ஜன்னலின் உயரம் = 3.66 மீ

---

**6. 1800 மீ உயரத்தில் பறக்கும் ஒரு விமானத்திலிருந்து ஒரே திசையில் வினமாத்தை நோக்கிச் செல்லும் இரு படகுகள் பார்க்கப் படுகிறது. விமானத்திலிருந்து இரு படகுகளை முறையே 60° மற்றும் 30° இறக்கக்கோணங்களில் உற்று நோக்கினால், இரண்டு படகுகளுக்கும் இடைப்பட்டத் தொலைவைக் காண்க. ($\sqrt{3}$ = 1.732)**

**தீர்வு:**




படத்திலிருந்து,

$A$ - விமானம், $B_1$, $B_2$ - இரு படகுகள்

$AP = 1800$ மீ

$PB_1 = y, B_1B_2 = x, PB_2 = x + y$

$\Delta APB_1$ -ல், $\tan 60° = \frac{AP}{PB_1}$

$\Rightarrow \sqrt{3} = \frac{1800}{y}$

$\Rightarrow y = \frac{1800}{\sqrt{3}} = 600\sqrt{\ }$ மீ

$\Delta APB_2$ -ல், $\tan 30° = \frac{AP}{PB_2}$

$\Rightarrow \frac{1}{\sqrt{3}} = \frac{1800}{x+y}$

$\Rightarrow x + y = 1800\sqrt{3}$

$\Rightarrow x = 1800\sqrt{3} - 600\sqrt{3}$

$\Rightarrow 1200\sqrt{3}$ மீ $= 1200 \times 1.732$

$= 2078.4$ மீ

இரு படகுகளுக்கு இடைப்பட்ட தூரம் = 2078.4 மீ.

---

**7. இரு கப்பல்கள் கலங்கரை விளக்கத்தின் இரு பக்கங்களிலும் கடலில் பயணம் செய்கின்றன. இரு கப்பல்களிலிருந்து கலங்கரை விளக்கத்தின் உச்சியின் ஏற்றக்கோணங்கள் முறையே 30° மற்றும் 45° ஆகும். கலங்கரை விளக்கத்தின் உயரம் 200 மீ எனில், இரு கப்பல்களுக்கு இடையே உள்ள தொலைவைக் காண்க. ($\sqrt{3}$ = 1.732)** **செப்,21**

**தீர்வு:**




கலங்கரை விளக்கம் $AB$ என்க.

$C$ மற்றும் $D$ என்பன இரு கப்பல்கள் இருக்கும் இடங்கள் என்க.

மேலும் $AB = 200$ மீ



Kindly send me your study materials to email id - padasalai.net@gmail.com

$\angle ACB = 30°, \angle ADB = 45°$

செங்கோண முக்கோணம் $BAC$-ல்,

$$\tan 30° = \frac{AB}{AC}$$

$$\frac{1}{\sqrt{3}} = \frac{200}{AC} \text{ இதிலிருந்து}$$

$$AC = 200\sqrt{3} \quad \text{----(1)}$$

செங்கோண முக்கோணம் $BAD$,-ல்

$$\tan 45° = \frac{AB}{AD}$$

$$1 = \frac{200}{AD} \text{ இதிலிருந்து}$$

$$AD = 200 \quad \text{----(2)}$$

தற்போது $CD = AC + AD$

$$= 200\sqrt{3} + 200$$

[(1), (2)லிருந்து]

$$CD = 200(\sqrt{3}+1)$$

$$= 200 \times 2.732 = 546.4$$

இரு கப்பல்களுக்கு இடையே உள்ள தொலைவு 546.4 மீ ஆகும்.

---

**8. 13 மீ உயரமுள்ள ஒரு மரத்தின் உச்சியிலிருந்து மற்றொரு மரத்தின் உச்சி மற்றும் அடியின் ஏற்றக்கோணம் மற்றும் இறக்கக்கோணம் முறையே 45° மற்றும் 30° எனில், இரண்டாவது மரத்தின் உயரத்தைக் காண்க. ($\sqrt{3}$ = 1.732)**

**தீர்வு:**




$$\angle AEC\text{யில்}, \tan 45° = \frac{AE}{CE}$$

$$1 = \frac{x}{y}$$

$$x = y \quad \text{----(1)}$$

$$\angle BCD\text{யில்}, \tan 30° = \frac{CD}{BD}$$

$$\frac{1}{\sqrt{3}} = \frac{13}{y}$$

$$y = 13\sqrt{3}$$

(1) லிருந்து $x = y = 13\sqrt{3}$

2 வது மரத்தின் உயரம்

$AB = AE + EB$

$= x + 13$

$= 13\sqrt{3} + 13$

$= 13[\sqrt{3}+1]$

$= 13[1 + 1.732]$

$= 13[2.732] = 35.52$ மீ

$\therefore$ இரண்டாவது மரத்தின் உயரம் = 35.52 மீ

---

**9. கடலின் நீர் மட்டத்திலிருந்து 40 மீட்டருக்கு மேலே உள்ள ஒரு கப்பலின் மேல் பகுதியில் நின்று கொண்டிருக்கிற ஒருவர், குன்றின் உச்சியை 60° ஏற்றக்கோணத்திலும் அடிப்பகுதியை 30° இறக்கக்கோணத்திலும் காண்கிறார் எனில், கப்பலிலிருந்து குன்றுக்கு உள்ள தொலைவையும், குன்றின் உயரத்தையும் காண்க. ($\sqrt{3}$ = 1.732)**

**தீர்வு:**




$AB$-கப்பல் $CE$ - குன்று

படத்திலிருந்து $AB = CD = 40$ மீ,

$BC = AD = x, \ DE = h, \ CE = 40 + h$

$$\Delta ABC\text{-ல் } \tan 30° = \frac{AB}{BC} = \frac{1}{\sqrt{3}} = \frac{40}{x}$$

$$\Rightarrow \quad x = 40 \times \sqrt{3} \quad \text{----(1)}$$

$$\Delta ADE\text{-ல் } \tan 60° = \frac{DE}{AD} = \sqrt{3} = \frac{h}{x}$$

$\Rightarrow$ h $= x \times \sqrt{3} = 40 \times \sqrt{3} \times \sqrt{3} = 120$ மீ

$\therefore$ குன்றின் உயரம் = 40 + 120 = 160 மீ

கப்பலிலிருந்து குன்றுக்கு இடையே உள்ள தொலைவு

$\Rightarrow x = 40 \times \sqrt{3} = 40 \times 1.732 = 69.28$ மீ

***

www.Padasalai.Net www.CBSEtips.in



# 7 அளவியல்

**2 மதிப்பெண்கள்** STAGE 2

**1. 88 ச.செ.மீ வளைபரப்புடைய ஒரு நேர்வட்ட உருளையின் உயரம் 14 செ.மீ எனில், உருளையின் விட்டம் காண்க.**

**தீர்வு:**

உருளையின் வளைபரப்பு

$= 88$ ச.செ.மீ

$2\pi rh = 88$

$2 \times \frac{22}{7} \times r \times 14 = 88$ ($h = 14$ செ.மீ)

$2r = \frac{88 \times 7}{22 \times 14} = 2$

உருளையின் விட்டம் $= 2$ செ.மீ

**2. நீளம் 3 மீ மற்றும் விட்டம் 2.8 மீ உடைய ஒரு சமன்படுத்தும் உருளையைக் கொண்டு ஒரு தோட்டம் சமன்படுத்தப்படுகிறது. 8 சுற்றுகளில் எவ்வளவு பரப்பை உருளை சமன் செய்யும்?**

**தீர்வு:**

விட்டம் $d = 2.8$ மீ

ஆரம் $r = 1.4$ மீ உயரம் $h = 3$ மீ

உருளை ஒரு சுற்றில் சமன்படுத்தும் பரப்பு

= சமன்படுத்தும் உருளையின் வளைபரப்பு

$= 2\pi rh$ ச.அலகுகள்

$= 2 \times \frac{22}{7} \times 1.4 \times 3 = 26.4$

உருளை ஒரு சுற்றில் சமன்படுத்தும் பரப்பு $= 26.4$ ச.மீ

8 சுற்றுகளில் சமன்படுத்தப்படும் மொத்தப் பரப்பு $= 8 \times 26.4 = 211.2$ மீ$^2$

**3. 704 ச.செ.மீ மொத்தப் புறப்பரப்பு கொண்ட ஒரு கூம்பின் ஆரம் 7 செ.மீ எனில், அதன் சாயுயரம் காண்க.** ஆக.22

**தீர்வு:**

கூம்பின் மொத்தப் புறப்பரப்பு

$= 704$ ச.செ.மீ

$\pi r(l + r) = 704$

$\frac{22}{7} \times 7(l + 7) = 704$

$l + 7 = \frac{704}{22} = \frac{64}{2} = 32$

$l + 7 = 32,\ l = 32 - 7 = 25$ செ.மீ

$\therefore$ கூம்பின் சாயுயரம் $= 25$ செ.மீ

**4. ஒரு கோளத்தின் புறப்பரப்பு 154 ச.மீ எனில், அதன் விட்டம் காண்க.** செப்.20

**தீர்வு:**

கோளத்தின் புறப்பரப்பு $= 154$ ச.மீ

$4\pi r^2 = 154$

$4 \times \frac{22}{7} \times r^2 = 154$

$r^2 = \frac{154}{4} \times \frac{7}{22}$

$r^2 = \frac{49}{4}$

$r = \frac{7}{2}$

கோளத்தின் ஆரம் $r = \frac{7}{2}$ மீ

கோளத்தின் விட்டம் $d = 7$ மீ

**5. ஒரு கோள வடிவ வளிக்கூண்டினுள் (balloon) காற்று உந்தப்படும்போது அதன் ஆரம் 12 செ.மீ-லிருந்து 16 செ.மீ ஆக உயருகிறது. இரு புறப்பரப்புகளின் விகிதம் காண்க.** மே 22

**தீர்வு:**

$r_1$ மற்றும் $r_2$ வளிக்கூண்டின் ஆரங்கள் என்க.

$\frac{r_1}{r_2} = \frac{12}{16} = \frac{3}{4}$

எனவே புறப்பரப்புகளின் விகிதம்

$= \frac{4\pi r_1^2}{4\pi r_2^2} = \frac{r_1^2}{r_2^2} = \left(\frac{r_1}{r_2}\right)^2 = \left(\frac{3}{4}\right)^2$

$= \frac{9}{16}$

புறப்பரப்புகளின் விகிதம் 9 : 16

**6. உயரம் 2 மீ மற்றும் அடிப்பரப்பு 250 ச.மீ கொண்ட ஓர் உருளையின் கனஅளவைக் காண்க.** செப்.21

**தீர்வு:**

உருளையின் ஆரம் மற்றும் உயரம் முறையே $r$ மற்றும் $h$ என்க.

இங்கு, உயரம் $h = 2$ மீ, அடிப்பரப்பு $= 250$ ச.மீ

உருளையின் கனஅளவு $= \pi r^2 h$ க.அ

$=$ அடிப்பரப்பு $\times h$

$= 250 \times 2 = 500$ மீ$^3$

எனவே, உருளையின் கனஅளவு $= 500$ க.மீ



Kindly send me your study materials to email id - padasalai.net@gmail.com

**7. ஒரு நேர் வட்டக் கூம்பின் கனஅளவு 11088 க.செ.மீ ஆகும். கூம்பின் உயரம் 24 செ.மீ எனில், அதன் ஆரம் காண்க.**

**தீர்வு:**

கூம்பின் உயரம் மற்றும் ஆரம், $h$ மற்றும் $r$ என்க.

இங்கு, $h = 24$ செ.மீ

கூம்பின் கனஅளவு = 11088 க.செ.மீ

$$\frac{1}{3}\pi r^2 h = 11088$$

$$\frac{1}{3} \times \frac{22}{7} \times r^2 \times 24 = 11088$$

$$r^2 = 441$$

கூம்பின் ஆரம், $r = 21$ செ.மீ

**8. இரு கூம்புகளுடைய கன அளவுகளின் விகிதம் 2:3 ஆகும். இரண்டாம் கூம்பின் உயரம் முதல் கூம்பின் உயரத்தைப் போல் இரு மடங்கு எனில், அவற்றின் ஆரங்களின் விகிதம் காண்க.**

**தீர்வு:**

$r_1$, $h_1$ என்பன முதல் கூம்பின் ஆரம் மற்றும் உயரம் என்க. $r_2$, $h_2$ என்பன இரண்டாம் கூம்பின் ஆரம் மற்றும் உயரம் என்க.

இங்கு, $h_2 = 2h_1$ மற்றும்

$$\frac{\text{முதல் கூம்பின் கனஅளவு}}{\text{இரண்டாம் கூம்பின் கனஅளவு}} = \frac{2}{3}$$

$$\frac{\frac{1}{3}\pi r_1^2 h_1}{\frac{1}{3}\pi r_2^2 h_2} = \frac{2}{3}$$

$$\frac{r_1^2}{r_2^2} \times \frac{h_1}{2h_1} = \frac{2}{3}$$

$$\frac{r_1^2}{r_2^2} = \frac{4}{3}$$

$$\frac{r_1}{r_2} = \frac{2}{\sqrt{3}}$$

ஆகவே, ஆரங்களின் விகிதம் = $2 : \sqrt{3}$

**5 மதிப்பெண்கள்** STAGE 2

**1. ஓர் உருளை வடிவப் பீப்பாயின் உயரம் 20 செ.மீ மற்றும் அடிப்புற ஆரம் 14 செ.மீ எனில், அதன் வளைபரப்பு மற்றும் மொத்தப் புறப்பரப்பைக் காண்க.** **ஆ.க.22**

**தீர்வு:**

உருளையின் உயரம் $h = 20$ செ.மீ;

ஆரம் $r = 14$ செ.மீ

உருளையின் வளைபரப்பு = $2\pi rh$ ச.அலகுகள்

$$= 2 \times \frac{22}{7} \times 14 \times 20$$

$$= 2 \times 22 \times 2 \times 20$$

$$= 1760 \text{ செ.மீ}^2$$

உருளையின் மொத்தப் புறப்பரப்பு

$$= 2\pi r\,(h + r) \text{ ச.அலகுகள்}$$

$$= 2 \times \frac{22}{7} \times 14 \times (20+14)$$

$$= 2 \times \frac{22}{7} \times 14 \times 34$$

$$= 2992 \text{ செ.மீ}^2$$

ஆகவே, வளைபரப்பு = 1760 செ.மீ$^2$

மொத்தப் புறப்பரப்பு = 2992 செ.மீ$^2$

**2. ஓர் உருளையின் மீது ஓர் இடைக்கண்டம் இணைந்தவாறு அமைந்த ஒரு புனலின் (funnel) மொத்த உயரம் 20 செ.மீ உருளையின் உயரம் 12 செ.மீ மற்றும் விட்டம் 12 செ.மீ ஆகும். இடைக்கண்டத்தின் மேற்புற விட்டம் 24 செ.மீ எனில், புனலின் வெளிப்புறப் பரப்பைக் கணக்கிடுக.**




**தீர்வு:**

$h_1$ மற்றும் $h_2$ என்பன முறையே இடைக்கண்டம் மற்றும் உருளையின் உயரம் என்க.

$R$ மற்றும் $r$ என்பன இடைக்கண்டத்தின் மேல் மற்றும் கீழ்ப்புற ஆரங்கள் என்க.

இங்கு,

$R = 12$ செ.மீ, $r = 6$ செ.மீ, $h_2 = 12$ செ.மீ,

$h_1 = 20 - 12 = 8$ செ.மீ

இடைக்கண்டத்தின் சாயுயரம்

$$l = \sqrt{(R-r)^2 + h_1^2} \text{ அலகுகள்}$$

$$= \sqrt{36+64}$$

$$l = 10 \text{ செ.மீ}$$

வெளிப்புறப் பரப்பு

$$= 2\pi r h_2 + \pi\,(R+r)\,l \text{ ச.அலகுகள்}$$

$$= \pi\,(2rh_2 + (R+r)\,l$$

$$= \pi\,(2 \times 6 \times 12) + (18(10))$$

$$= \pi\,(144 + 180)$$

$$= \frac{22}{7} \times 324 = 1018.28$$

எனவே, புனலின் வெளிப்புறப் பரப்பு = 1018.28 ச.செ.மீ ஆகும்.

www.Padasalai.Net www.CBSEtips.in



**3. 16 செ.மீ ஆரமுள்ள ஓர் உலோகப் பந்து, உருக்கப்பட்டு 2 செ.மீ ஆரமுள்ள சிறு பந்துகளாக்கப்பட்டால், எத்தனை பந்துகள் கிடைக்கும்?**

**தீர்வு:**

சிறிய உலோகப் பந்துகளின் எண்ணிக்கை $n$ என்க.

சிறிய மற்றும் பெரிய உலோகப் பந்துகளின் ஆரங்கள் முறையே $r$ மற்றும் $R$ என்க.

இங்கு, $R = 16$ செ.மீ, $r = 2$ செ.மீ

தற்போது,

$n \times$ (ஒரு சிறிய உலோகப் பந்தின் கனஅளவு) = பெரிய உலோகப் பந்தின் கனஅளவு

$$n\left(\frac{4}{3}\pi r^3\right) = \frac{4}{3}\pi R^3$$

$$n\left(\frac{4}{3}\pi \times 2^3\right) = \frac{4}{3}\pi \times 16^3$$

$8n = 4096$ எனவே $n = 512$

ஆகவே, சிறிய உலோகப் பந்துகளின் எண்ணிக்கை 512 ஆகும்.

**4. களிமண் கொண்டு செய்யப்பட்ட 24 செ.மீ உயரமுள்ள ஒரு கூம்பை ஒரு குழந்தை அதே ஆரமுள்ள ஓர் உருளையாக மாற்றுகிறது எனில் உருளையின் உயரம் காண்க.**

**தீர்வு:**

கூம்பின் உயரம் $h_1 = 24$ செ.மீ

உருளையின் உயரம் $h_2$ என்க மற்றும் ஆரங்கள் சமம்

உருளையின் கனஅளவு = கூம்பின் கனஅளவு

$$\frac{1}{3}\pi r^2 h_1 = \pi r^2 h_2$$

$$\frac{1}{3} \times 24 = h_2$$

$h_2 = 8$ செ.மீ

**5. ஓர் அரைக்கோளத்தின் மேல் ஓர் உள்ளீடற்ற உருளையைப் பொருத்திய வடிவத்தில் அமைந்த ஒரு கிண்ணத்தின் விட்டம் 14 செ.மீ மற்றும் உயரம் 13 செ.மீ எனில், அதன் கொள்ளளவைக் காண்க.**

**தீர்வு:**




அரைக்கோளத்தின் ஆரம் $r = 7$ செ.மீ = உருளையின் ஆரம்

உருளையின் உயரம், $h = 6$ செ.மீ

பாத்திரத்தின் கனஅளவு

= உருளையின் கனஅளவு + அரைக்கோளத்தின் கனஅளவு

$$= \pi r^2 h + \frac{2}{3}\pi r^3 = \pi r^2\left(h + \frac{2}{3}r\right)$$

$$= \frac{22}{7} \times 7 \times 7 \times \left(6 + \frac{2}{3} \times 7\right) = 22 \times 7 \times \frac{32}{3}$$

$= 1642.67$ செ.மீ$^3$

பாத்திரத்தின் கொள்ளளவு 1642.67 செ.மீ$^3$

**6. நாதன் என்ற பொறியியல் மாணவர் ஓர் உருளையின் இருபுறமும் கூம்புகள் உள்ளவாறு மாதிரி ஒன்றை உருவாக்கினார். மாதிரியின் நீளம் 12 செ.மீ மற்றும் விட்டம் 3 செ.மீ ஆகும். ஒவ்வொரு கூம்பின் உயரமும் 2 செ.மீ இருக்குமானால் நாதன் உருவாக்கிய மாதிரியின் கனஅளவைக் காண்க.** மே 22

**தீர்வு:**




**உருளை:**

விட்டம் $d = 3$ செ.மீ,

ஆரம் $r = \frac{3}{2}$ செ.மீ

உயரம் $h_1 = 12 - (2 + 2) = 8$ செ.மீ

**கூம்பு:**

ஆரம், $r = \frac{3}{2}$ செ.மீ, உயரம் $h_2 = 2$ செ.மீ

மாதிரியின் கனஅளவு

= உருளையின் கனஅளவு + 2 கூம்பின் கனஅளவு

$$= \pi r^2 h_1 + 2\,\frac{1}{3}\pi r^2 h_2$$

$$= \pi r^2 \left[h_1 + 2\,\frac{1}{3} h_2\right]$$

$$= \frac{22}{7} \times \frac{3}{2} \times \frac{3}{2}\left[8 + \frac{2}{3} \times 2\right]$$

$$= \frac{\overset{11}{\cancel{22}}}{7} \times \frac{9}{\underset{2}{\cancel{4}}}\left[8 + \frac{4}{3}\right]$$

$$= \frac{\overset{33}{\cancel{99}}}{\cancel{14}}\left[\frac{\overset{2}{\cancel{28}}}{\cancel{3}}\right] = 33 \times 2$$

= 66 க.செ.மீ

நாதன் உருவாக்கிய மாதிரியின் கனஅளவு = 66 க.செ.மீ



Kindly send me your study materials to email id - padasalai.net@gmail.com

**7. 12 செ.மீ ஆரமுள்ள ஓர் அலுமினியக் கோளம் உருக்கப்பட்டு 8 செ.மீ ஆரமுள்ள ஓர் உருளையாக மாற்றப்படுகிறது. உருளையின் உயரம் காண்க.**

**தீர்வு:**

கோளத்தின் ஆரம் $r_1$ = 12 செ.மீ

உருளையின் ஆரம் $r_2$ = 8 செ.மீ

உருளையின் கனஅளவு

= கோளத்தின் கனஅளவு

$$\Rightarrow \quad \pi r_2^2 h = \frac{4}{3}\pi r_1^3$$

$$\Rightarrow \quad r_2^2 h = \frac{4}{3} r_1^3$$

$$\Rightarrow \quad h = \frac{4\times12\times12\times12}{3\times8\times8}$$

= 36 செ.மீ

∴ உருளையின் உயரம் = 36 செ.மீ

---

**8. விட்டம் 14 செ.மீ, உயரம் 8 செ.மீ உடைய ஒரு திண்ம நேர்வட்டக் கூம்பு, ஓர் உள்ளீடற்ற கோளமாக உருமாற்றப்படுகிறது. கோளத்தின் வெளிவிட்டம் 10 செ.மீ எனில், உள்விட்டத்தைக் காண்க.**

**தீர்வு:**

கூம்பின் விட்டம் $d$ = 14 செ.மீ

ஆரம் = 7 செ.மீ, உயரம் $h$ = 8செ.மீ

உள்ளீடற்ற கோளத்தின் வெளிவிட்டம்

= 10 செ.மீ, $R$ = 5 செ.மீ,

உள்விட்டம் $d$ = ?

உள்ளீடற்ற கோளத்தின் கனஅளவு = கூம்பின் கனஅளவு

$$\frac{4}{3}\pi(R^3 - r^3) = \frac{1}{3}\pi r^2 h$$

$$\frac{4}{3}\pi(5^3 - r^3) = \frac{1}{3}\pi\times7\times7\times8$$

$$125 - r^3 = \frac{7\times7\times8}{4}$$

$$125 - r^3 = 98$$

$$r^3 = 27$$

$$r^3 = 3^3$$

$$r = 3$$

கோளத்தின் உள்விட்டம் $= 2(r) = 2(3)$

= 6 செ.மீ

**9. 484 செ.மீ சுற்றளவுள்ள ஒரு மரக்கூம்பின் உயரம் 105 செ.மீ எனில், கூம்பின் கன அளவைக் காண்க.**

**தீர்வு:**

கூம்பின் உயரம் = 105செ.மீ

சுற்றளவு = 484 செ.மீ

$$\Rightarrow \quad 2\pi r = 484$$

$$\Rightarrow \quad 2\times\frac{22}{7}\times r = 484$$

$$r = \frac{484\times7}{2\times22} = 77 \text{ செ.மீ}$$

∴ கூம்பின் கனஅளவு $= \frac{1}{3}\pi r^2 h$

$$= \frac{1}{3}\times\frac{22}{7}\times77\times77\times105$$

= 652190 செ.மீ$^3$

***

www.Padasalai.Net www.CBSEtips.in



# 8 புள்ளியலும் நிகழ்தகவும்

**5 மதிப்பெண்கள்** STAGE 2

**1. 24, 26, 33, 37, 29, 31 ஆகியவற்றின் மாறுபாட்டுக் கெழுவைக் காண்க.**

**தீர்வு:**

| $x$ | $d = x - \bar{x}$ | $d^2$ |
|---|---|---|
| 24 | –6 | 36 |
| 26 | –4 | 16 |
| 33 | 3 | 9 |
| 37 | 7 | 49 |
| 29 | –1 | 1 |
| 31 | 1 | 1 |
| 180 | $\Sigma d$=0 | 112 |

சராசரி $= \bar{x} = \frac{\Sigma x}{n} = \frac{180}{6} = 30$

திட்ட விலக்கம்

$$\sigma = \sqrt{\frac{\Sigma d^2}{n}} = \sqrt{\frac{112}{6}} = \sqrt{18.66} = 4.32$$

மாறுபாட்டுக்கெழு

$$= \frac{\sigma}{\bar{x}} \times 100\% = \frac{432}{30} \times 100\% = 14.4\ \%$$

**2. 8 மாணவர்கள் ஒரு நாளில் வீட்டுப் பாடத்தை முடிப்பதற்கு எடுத்துக் கொள்ளும் கால அளவுகள் (நிமிடங்களில்) பின்வருமாறு கொடுக்கப்பட்டுள்ளது. 38, 40, 47, 44, 46, 43, 49, 53. இத்தரவின் மாறுபாட்டுக் கெழுவைக் காண்க.**

**தீர்வு:**

கொடுக்கப்பட்ட விவரத்தை ஏறு வரிசையில் எழுதுக. 38, 40, 43, 44, 46, 47, 49, 53

| $x$ | $d = x - \bar{x}$ | $d^2$ |
|---|---|---|
| 38 | –7 | 49 |
| 40 | –5 | 25 |
| 43 | –2 | 4 |
| 44 | –1 | 1 |
| 46 | 1 | 1 |
| 47 | 2 | 4 |
| 49 | 4 | 16 |
| 53 | 8 | 64 |
| 360 | $\Sigma d = 0$ | 164 |

சராசரி $= \bar{x} = \frac{\Sigma x}{n} = \frac{360}{8} = 45$

திட்ட விலக்கம்

$$\sigma = \sqrt{\frac{\Sigma d^2}{n}} = \sqrt{\frac{164}{8}} = \sqrt{20.5} = 4.527$$

மாறுபாட்டுக்கெழு

$$= \frac{\sigma}{\bar{x}} \times 100\% = \frac{4.527}{45} \times 100\% = 10.07\ \%$$

**3. ஒரு நாணயம் மூன்று முறை சுண்டப்படுகிறது. சரியாக இரண்டு தலைகள் அல்லது குறைந்தபட்சம் ஒரு பூ அல்லது அடுத்தடுத்து இரண்டு தலைகள் கிடைப்பதற்கான நிகழ்தகவைக் காண்க.**

**தீர்வு:**

$S = \{HHH, HHT, HTH, THH, TTT, TTH, THT, HTT\}$

$n(S) = 8$

$A$ = சரியாக 2 தலை கிடைக்கும் நிகழ்ச்சி என்க.

$A = \{HHT, HTH, THH\}$

$n(A) = 3 \Rightarrow P(A) = –$

$B$ = குறைந்தபட்சம் ஒரு பூ கிடைக்கும் நிகழ்ச்சி என்க.

$B = \{HHT, HTH, THH, TTT, TTH, THT, HTT\}$

$n(B) = 7 \Rightarrow P(B) = \frac{7}{8}$

$C$ = அடுத்தடுத்து 2 தலைகள் கிடைக்கும் நிகழ்ச்சி என்க.

$C = \{HHH, HHT, THH\}$

$n(C) = 3 \Rightarrow P(C) = \frac{3}{8}$

$P(A \cap B) = \frac{3}{8}$; $\quad P(B \cap C) = \frac{2}{8}$

$P(A \cap C) = \frac{2}{8}$; $\quad P(A \cap B \cap C) = \frac{2}{8}$

$$P(A \cup B \cup C) = P(A) + P(B) + P(C) - P(A \cap B) - P(B \cap C) - P(A \cap C) + P(A \cap B \cap C)$$

$$= \frac{3}{8} + \frac{7}{8} + \frac{3}{8} - \frac{3}{8} - \frac{2}{8} - \frac{2}{8} + \frac{2}{8}$$

$$= \frac{15-7}{8} = \frac{8}{8} = 1$$



Kindly send me your study materials to email id - padasalai.net@gmail.com

**4.** **$A, B, C$ என்பன ஏதேனும் மூன்று நிகழ்ச்சிகள். மேலும் $B$ கிடைப்பதற்கான நிகழ்தகவு $A$-ன் நிகழ்தகவைப் போல இருமடங்காகவும், $C$ கிடைப்பதற்கான நிகழ்தகவு $A$-ஐ விட மூன்று மடங்காகவும் உள்ளன. மேலும் $P(A\cap B) = \frac{1}{6}$, $P(B\cap C) = \frac{1}{4}$, $P(A\cap C) = \frac{1}{8}$, $P(A\cup B\cup C) = \frac{9}{10}$, $P(A\cap B\cap C) = \frac{1}{15}$ எனில், $P(A)$, $P(B)$ மற்றும் $P(C)$ -ஐக் காண்க.**

**தீர்வு:**

$P(B) = 2\,P(A)$ ----(1)

$P(C) = 3\,P(A)$ என்க. !!!!(2)

$P(A\cap B) = \frac{1}{6}, P(B\cap C) = \frac{1}{4}, P(A\cap C) = \frac{1}{8},$

$P(A\cup B\cup C) = \frac{9}{10}, P(A\cap B\cap C) = \frac{1}{15}$

$\Rightarrow P(A\cup B\cup C) = P(A) + P(B) + P(C) - P(A\cap B) - P(B\cap C) - P(A\cap C) + P(A\cap B\cap C)$

$\Rightarrow \frac{9}{10} = P(A) + 2P(A) + 3P(A) - \frac{1}{6} - \frac{1}{4} - \frac{1}{8} + \frac{1}{15}$

$\Rightarrow \frac{9}{10} = 6P(A) - \left(\frac{4+6+3}{24}\right) + \frac{1}{15}$

$\Rightarrow \frac{9}{10} = 6P(A) - \frac{13}{24} + \frac{1}{15}$

$\Rightarrow 6P(A) = \frac{9}{10} + \frac{13}{24} - \frac{1}{15}$

$\Rightarrow 6P(A) = \frac{216-16+130}{240}$

$= \frac{330}{240} = \frac{33}{24} = \frac{11}{}$

$\Rightarrow P(A) = \frac{11}{8} \times \frac{1}{6}; P(A) = \frac{11}{48}$

$(1) \Rightarrow P(B) = 2 \times \frac{11}{48} = \frac{11}{24}$

$(2) \Rightarrow P(C) = 3 \times \frac{11}{48} = \frac{11}{16}$

$\therefore P(A) = \frac{11}{48}, P(B) = \frac{11}{24}, P(C) = \frac{11}{16}$

***